Regd. No. 2975 ஸ்ரீ:

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ ராமாநுஜன் — 309, 310

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

SRI RAMANUJAN

Editor:
Mahamahimopadhyaya
P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM-631503.

வருஷச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. 100

Released by Maran's Dog ,Toronto, Canada

பேரருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1974௵ சித்திரை மாத வெளியீடு

Released by Maran's Dog ,Toronto, Canada

http://acharya.org

ஸ்ரீ ராமாநுஜன் 309-310

ஆசிரியர்:
மஹாமஹோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 26 | ஆநந்தஹு சித்திரைமாத வெளியீடு | ஸஞ்சிகை 9, 10

பத்ராதிப ப்ரதிநிதியின் விண்ணப்பம்

சென்ற ஸ்ரீ ராமாநுஜனில் வெளியிட்டிருந்தபடி பத்ராதிப ஸ்ரீ ஸ்வாமியின் திருநக்ஷத்ரோத்ஸவம் 31—3—74 முதல் 9—4—74 வரை வெகு விலக்ஷணமாக நடைபெற்றது. திவ்யப்ரபந்த ஸேவையும் வேதபாராயணாதிகளும் வழக்கப்படி விமரிசையாக நடைபெற்றன. ஸ்ரீ ஸ்வாமிக்கு நேத்ர சிகித்ஸையாகி ஒரு மாதம் தான் ஆகிறது. கோஷ்டியில் தவறாமல் எழுந்தருளியிருந்து இரண்டு வேளைகளிலும் ஒருமணி காலத்திற்குக் குறையாமல் உபந்யாஸங்கள் ஸாதித்து வந்தார். திருவீதி வேதபாராயண கோஷ்டியில்மட்டும் அந்வயிக்க இயலாமலிருந்தது. சென்னையிலிருந்தும் மற்றும் பல விடங்களிலிருந்தும் ஆப்தர்களும் அபிமானிகளும் வந்திருந்து சிறப்பித்தார்கள். கடைசியில் மூன்றுநாள் பிற்பகல் வித்வத்ஸதஸ்ஸு நடந்தது. அம்மூன்று நாட்களிலும் இடையிடையே வந்து திரும்பும் வித்வான்களின் உபந்யாஸங்களும் நடந்து கொண்டிருந்தன.

ஸ்ரீ ஸ்வாமியால் 'ஸஹ்ருதய ரஸிக ஸார்வபௌமர்' என்று பலவாண்டுகட்கு முன்பு பிருதளிக்கப் பெற்றிருக்கின்ற ஸ்ரீமதுபயவே. சென்னை அட்வகேட் (திண்டுக்கல்) D. ராமஸ்வாமி ஐயங்கார் இத் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் ஏழாநாளன்று காலை கோஷ்டிக்கு விஜயம் செய்தார். சில நாழிகை கோஷ்டியில் எழுந்தருளியிருந்து தம்முடைய மங்களாசாஸன ஸ்ரீ ஸூக்திகளை அன்பு ததும்ப அருளிச்செய்தார். அது ஸ்ரீ ஸ்வாமிக்கும் மற்றுமுள்ள கோஷ்டியாருக்கும் மிகவும் ஸந்தோஷகரமாயிருந்தது. அப்போது D. R. ஸ்வாமி, "திருப்பாபுலியூர் வக்கீல் ராமாநுஜாசாரியர் ஸ்வாமி வரவில்லையா?" என்று கேட்டார். அன்று மாலையே அந்த ஸ்வாமியும் ஸேவை ஸாதித்து தமக்கு ஸ்ரீ ஸ்வாமி எழுதியிருந்த கடிதமொன்றில் "ஆலேசநகம்" என்றிருந்ததைக் கொண்டு அதையே விஷயமாகப்

http://acharya.org

பற்றிச் சமத்காரமாகப் பேசினர். இந்த ஸ்வாமி ஆண்டுதோறும் ஸேவை ஸாதிப் பவராயினும் அப்போதப்போது நவம் நவமாகவே தோன்றுமென்று ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்தபடி.

உபந்யஸித்தவர்களின் திருநாமங்கள்

1. ஸ்ரீமான் உ. வே. பிள்ளைலோகம் பாஷ்யகாரர், சென்னை
2. ,, திருப்பாபுலியூர் அட்வகேட் T. S. ராமாநுஜாசாரியர்
3. ,, கோயில் சதாபிஷேகம் தி. அ. கோவிந்தநரஸிம்மாசாரியர்
4. ,, குன்றபாக்கம் தி. அ. க்ருஷ்ணமாசாரியர், திருப்பதி
5. ,, கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ரங்காசாரியர், கபிஸ்தலம்
6. ,, க்வாலியர் ஸத்யமூர்த்தி ஸ்வாமி (தற்காலம் ஸ்ரீரங்கம்)
7. ,, P. R. வரதாசாரியர், திருவல்லிக்கேணி
8. ,, (பிச்சுமணி) திருவேங்கடத்தான், M.A., சென்னை
9. ,, மதுரை R. ரங்கராஜன் M.A., B.T.
10. ,, கொமாண்டூர் இளையவில்லி ஸுந்தராசாரியர், (காஞ்சீபுரம்)
11. ,, R. V. சேஷாத்ரி அட்வகேட், எழும்பூர்
12. ,, குமாரவாடி ராமாநுஜாசாரியர், (தினமணி ஆபீஸ்)
13. ,, மடவிளாகம் தி. அ. கண்ணன் (வரதாசாரி)
14. ,, K. B. தேவராஜன், காஞ்சீபுரம்
15. ,, கிடாம்பி நாதமுனி, திருப்பதி

மலர் வெளியீடு

ஸ்ரீ ஸ்வாமியின் எண்பத்துநான்காவது பிராயப் பிறப்புக்கு நினைவுமலராக "ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணார்த்த ஸமுச்சயம்" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இது சென்ற ஸ்ரீராமாநுஜன் இதழில் 16 பக்கம் வெளிவந்தது. மொத்தப் 50 பக்கம் கொண்டது. ஒரு பத்ராதிபருக்கு ஸமுத்போதனமும் சேர்ந்து 60 பக்கம் கொண்டது. இப்புத்தகம் திருநக்ஷத்ரத்தன்று பிற்பகலிற் கூடிய ஸதஸ்ஸில் ஸ்ரீ உ. வே. கோயில் சதாபிஷேகம் வித்வான் தி. அ. கோவிந்தநரஸிம்ஹாசாரியரால் விசேஷ உபந்யாஸத்துடன் ஆவிஷ்காரம் செய்யப்பட்டது. மதுரோபந்யாஸமாலை யென்றும் அத்புதோபந்யாஸமாலை யென்றும் பல பெயர்களால் ஸ்வாமி நெடுநாளாக அச்சிட்டுவரும் புத்தகங்களிலிருந்து மிக முக்கியமான எண்பத்துநான்கு விஷயங்கள் இப்பத்ரிகையில் தொகுக்கப்பெற்றுள்ளன. சென்றவிதழில் வெளியிடப்பட்ட 16 பக்கங்களுக்குமேல் பூர்த்தியாக இவ்விதழில் வெளிவருகின்றது. இவ்விஷயங்கள் ஸ்வாமியின் உபந்யாஸங்களில் ப்ராஸங்கிகமாகக் கையாளப்பட்டுவருமவற்றில் ஏகதேசம்.

அபேக்ஷகர்களுக்குத் தனிப்புத்தகமாகவும் கிடைக்கும்.

http://acharya.org

ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் அர்த்த விசேஷங்கள்

36 to 45 வேதாந்த சாஸ்திரத்தில் தேவதா நிஷ்கர்ஷம்

[சாரீரக மீமாம்ஸை முதலான வேதாந்த சாஸ்த்ரங்களில் பரப்ரஹ்மாதி ஸாமாந்ய சப்தங்களாலே விவக்ஷிதன் ஸ்ரீமந்நாராயணனே யென்பதும், வேதாந்த சாஸ்த்ரப்ரமேயம் விசிஷ்டாத்வைதமே யென்பதும் ஸாரஸங்க்ஷேபமாக விவரிக்கப் படுகிறது.] அதில் ஜகத்காரண வஸ்துவாதிகளான வேதாந்த வாக்யங்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனிடத்திலே தான் பர்யவஸிக்கின்றன வென்று ஸூத்ரகாரர் தாமே ஸித்தாந்தம் செய்திருக்கிறாரென்பதை முன்னம் நிரூபித்துக் காட்டுகிறேன். "அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா" என்று ப்ரஹ்ம விசாரத்தை ப்ரஸ்தாவித்து "ஜந்மாத்யஸ்ய யத:" என்கிற அடுத்த ஸூத்ரத்திலே, 'எந்த வஸ்துவினிடத்தில் நின்றும் ஜகஜ் ஜந்ம ஸ்திதிலயங்கள் ஆகின்றனவோ அது ப்ரஹ்மம்' என்று ப்ரஹ்ம லக்ஷணம் காட்டினார் வ்யாஸர். வேதாந்தங்களில் ஜகத்காரண வஸ்துவைத் தெரிவிக்கின்ற வாக்யங்கள் ஒரே விதமாக இல்லை. பரஸ்பர விருத்தங்கள் போல் தோன்றநின்றன என்பது ப்ரஸித்தமான விஷயம். ஏதோ ஒரு வஸ்து தான் ஜகத்காரணமாக இருக்க முடியுமே யொழிய பல வஸ்துக்கள் அப்படி யிருக்க முடியாதென்கிற நிச்சயம் ஆவச்யகமானது. பரஸ்பர விருத்தங்கள்போல் தோன்றநின்ற காரண வாக்யங்களாலே இந்த நிச்சயம் எப்படி உண்டாகுமென்று தோன்றக்கூடிய சங்கையை ஸூத்ரகாரர் பரிஹரித்தேயாக வேண்டும். பரிஹரித்தேயிருக்கிறார். எப்படி பரிஹரித்திருக்கிறாரென்றால், ஸகல காரண வாக்யங்களுக்கும் ஐககண்ட்யத்தைக் காட்டிப் பரிஹரித்திருக்கிறார். ஸாகாங்க்ஷ வாக்யங்களுக்கு நிராகாங்க்ஷ வாக்யங்களில் பர்யவஸானம் ந்யாயமென்பது யாவருமிசைந்ததொன்றும். இதையே நெஞ்சில்கொண்ட வ்யாஸ மஹர்ஷியானவர் ஈக்ஷத்யதிகரணம் முதலானவற்றால் காரண வாக்யங்கள் எல்லாவற்றிற்கும் புருஷஸூக்த ப்ரதிபாத்யனான நாராயணனிடத்தில் பர்யவஸாநத்தைக் காட்டியுள்ளார். இது தன்னை விளக்கமாக உபபாதிக்கிறேன் கேண்மின். ஜகத்காரண வஸ்துவை ப்ரஸ்தாவிக்கின்ற வாக்கியங்கள் காரணவாக்ய மெனப்படும். அந்த வாக்யங்களை ஸாகாங்க்ஷ வாக்யங்களென்றும் நிராகாங்க்ஷ வாக்யங்களென்றும் இருவகையாகப் பிரித்துக் கொள்ள வேண்டியது முதற் காரியம். ஸாகாங்க்ஷ வாக்யங்களென்பவைதாமும் இரு வகையாயிருக்கும். 1. ஸாமான்ய சப்தத்தோடு கூடியிருந்து விசேஷ ப்ரதிபத்தியை அபேக்ஷித்திருக்குமவை. 2. அநுவாத ரூபமாய்க்கொண்டு புரோவாதத்தை அபேக்ஷித்திருக்குமவை—என்று. "ஸதேவஸோம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்"—'ஸேயம் தேவதைக்ஷத" இத்யாதி வாக்யங்களில் 'ஸத்' என்றும் 'தேவதா' என்றும் ஸாமான்ய சப்தங்களே யிருக்கையாலே இவை விசேஷ ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷங்க ளென்பது ஸ்பஷ்டம். "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதி வாக்யங்கள் யச் சப்த கடிதங்களாயிருப்பதுபற்றி அநுவாத ரூபங்களாகையாலே புரோவாத ஸாகாங்க்ஷங்களென்பதும் ஸ்பஷ்டம். ஸாகாங்க்ஷ

http://acharya.org

வாக்யங்களில் கீழ்ச்சொன்ன இரண்டுவகைகள் தவிர மூன்றாவது வகையும் ஒன்று சொல்ல வேண்டியதாகிறது; அதாவது, அயோக்யமான அர்த்தத்தைத் தெரிவிக்கும் வாக்யங்கள் யோக்யார்த்த ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷமாயிருப்பதாம். ப்ரதர்தந வித்யையில் "மாமுபாஸ்ய ஏததேவாஹம் மநுஷ்யாய ஹிததமம் மந்யே" என்று இந்திரன் சொன்ன வாக்யம் போன்றவை இந்த வகுப்பில் சேரக் கடவன. ஆக மூவகுப்பாகப் பிரியலுற்ற ஸாகாங்க்ஷங்களான காரண வாக்யங்கள் வஸ்துவிசேஷத்தை நிர்ணயிப்பதில் ஸ்வதந்திரமாக அசக்தங்களாகையாலே நிராகாங்க்ஷங்களான வாக்ய விசேஷங்களைக் கொண்டே வஸ்து விசேஷத்தை நிர்ணயிக்க வேண்டியதாகிறது. யோக்யார்த்த விசேஷ ப்ரதிபாதகங்களாய்க் கொண்டு இதர வாக்யங்களை எதிர்பாராத வாக்யங்களே நிராகாங்க்ஷ வாக்யங்க ளென்று தேறிற்று. *ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசாந:* இத்யாதி வாக்யங்களே அப்படிப்பட்டவை என்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். மேலே காட்டிய வாக்ய விசேஷத்தில் ஸாமாந்ய சப்தம் சேர்ந்திருக்கவில்லை. அநுவாத ரூபத்வமுமில்லை; அயோக்யார்த்த ப்ரதிபாதநமுமில்லை. ஸத், ப்ரஹ்ம, ஆத்ம, தேவதா இத்யாதிகளான பதங்களிருந்தாலன்றோ ஸாமான்ய சப்தம் சேர்ந்திருப்பதாக ஆகும்! அவை இல்லையே. யச்சப்த கடிதமாயிருந்தாலன்றோ அநுவாத ரூபமாக ஆகும். அதுவுமில்லையே. அயோக்யார்த்த ப்ரதிபாதகத்வமில்லாமையோடு கூடின யோக்யார்த்த ப்ரதிபாதகத்வமே யுள்ளதென்பது நிரூபிக்கப்பட வேண்டியதாக நிற்கையாலே அதை நிரூபிக்கிறேன். சாரீரக மீமாம்ஸையில் சாஸ்த்ராரம்ப ஸமர்த்தகார்த்தமான சதுஸ்ஸூத்ரீ முடிந்ததும் ஐந்தாவது அதிகரணம் ஈக்ஷத்யதிகரணம். இதில் விசேஷித்துக் குறிக்கொள்ளத்தக்க ஸூத்ரங்கள் இரண்டு; "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" "கதிஸாமாந்யாத்" என்னுமிவை. ஸாதாரணமான ஸச்சப்தத்தையும் தேவதா சப்தத்தையும் கொண்டிருக்கிற ஸத்வித்யையானது புருஷஸூக்த ப்ரதிபந்நனை ஸ்ரீமந் நாராயணன் பக்கலிலே பர்யவஸிப்பதாக இவ்விரண்டு ஸூத்ரங்களாலும் காட்டப்படுகிறது. "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற ஸூத்ரத்தின் பொருளை முன்னம் தெரிந்து கொள்ளவேணும். "தந்நிஷ்டஸ்ய" என்கிற விடத்திலுள்ள தச்சப்தத்தினால்—ஸூத்ரகாரர் கருதிய விஷய வாக்யத்திலுள்ள ஸச்சப்த வாச்யமான வஸ்து கொள்ளப்படுகிறது. ஆகவே, 'ஸத்தை உபாஸிப்பவனுக்கு' என்பதாகப் பொருள் தேறிற்று. ஸத்தை உபாஸிப்பவனுக்கு முக்தி கிடைப்பதாக ஓதப்படுவதால் ப்ராக்ருத ஸச்சப்த வாச்யமான வஸ்து ப்ரதாநமாகமாட்டாது என்றதாக ஸூத்ரார்த்தம் தேறும். 'ப்ரதாநந்தான் ஜகத் காரணம்' என்பவர்களை நிரஸிப்பதன்றோ ப்ரஸ்துதம். புருஷஸூக்தத்திலும் உத்தர நாராயணத்திலும் "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே* என்றும், "நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்றும் மோக்ஷோபாயமான உபாஸநத்திற்கு இலக்காகுந்தன்மை நாராயணனுக்கே ஓதப்பட்டுள்ளது. இந்த ஸத்வித்யா ப்ரகரணத்திலும் [அதாவது, சாந்தோக்யத்தில்] "ஆசார்யவாந் புருஷோ வேத; தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்று ஸதுபாஸநமே மோக்ஷோபாயமாகச் சொல்லப்பட்டது. இந்த ச்ருதி வாக்யத்தின் பொருளாவது- எவனுக்கு உபதேஷ்டாவான ஆசார்யன் இருக்கிறானோ அவனே ப்ரஹ்ம

http://acharya.org

கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸூத்ரகாரருடைய உள்ளத்தில் ஸ்ரீமந்நாராயணனே உறைந்திருக்கிறாரென்பது ப்ராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி, ஆதிசங்கராசாரியர் நாராயணபாரம்யத்தையே ஸ்தாபித்தவரென்பது ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்படுகிறது. .... *

ஆதிசங்கரர் இயற்றிய விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் தேவதாந்தரங்களுக்கு அவரத்வத்தை நிலை நாட்டி ஸ்ரீமந்நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தாபித்திருப்பது கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொப்ப விளங்காநின்றது. விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம் செய்த பகவத் பாதர் சிவ ஸஹஸ்ர நாமத்திற்கு ஏன் பாஷ்யம் செய்யவில்லை என்று வினவினால் "அப்போது சிவஸஹஸ்ரநாமஸ்துதியில்லை; பிற்பட்ட காலத்தில் தான் அஃது உண்டாயிற்று; ஆதலால் தான் அதற்கு பாஷ்யம் செய்ய ப்ரஸக்தியுண்டாகவில்லை" என்கிறார்கள். அது நிற்க. பாஞ்சராத்ராகம ப்ராமாண்யாதிகரணத்தின், *உத்பத்த்யஸம்பவாத்* என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் "தத்ர பாகவதா மந்யந்தே" என்று தொடங்கி பாஞ்சராத்ராகம ப்ரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று ஸங்க்ரஹித்து, அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி, மூன்றாவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டியுள்ளார் பகவத்பாதர். தமக்கு ஸம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை;—(இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்). "தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: பரோவ்யக்தாத் ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா இதி, தத் ந நிராக்ரியதே. யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ரமநந்யசித்ததயா அபிப்ரேயதே, ததபி ந ப்ரதிஷித்யதே; ச்ருதி ஸ்ம்ருத்யோரீச்வரப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்" என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள். இவற்றால், ஸ்ரீமந்நாராயணனுக்கே பாரம்ய ப்ரதிஷ்டாபநத்தில் பகவத் பாதர் ஊக்கமுடையவரென்பது தேறிற்றென்னுமிடம் மறக்கத் தக்கதன்று. .... *

ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களுள்ள விடங்களில் வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்கியானம் செய்யத் தொடங்கினவரும் ஆதி சங்கரரேயாவர். மேலே எடுத்துக் காட்டின *உத்பத்த்யஸம்பவாதிகரண பாஷ்ய பங்க்தியில் "பகவதோ நாராயணஸ்ய அபிகமநாதிலக்ஷணமாராதநமஜஸ்ரம்" என்ற விடத்தில் ("அநந்யசித்ததயா") என்றெழுதப்பட்டுள்ளதில் இதாநீந்தனர்கள் கண்மூடிகளாயிருக்கின்றனர். ருத்ராதிகளான அந்யர்களிடத்திலும் சித்தத்தை வைத்துச் செய்யப்படுகிற ஸ்ரீமந்நாராயணாராதநம் அநந்ய சித்தக்ருதமாக எப்படியாகுமென்பதை அவர்கள் ஆலோசிக்க மாட்டிற்றிலர். நாராயணனைப் பரிவாரத்தோடுங்கூட ஆராதிப்பதும் சிந்திப்பதும் செய்தால் இது அநந்யசித்தத்வத்திற்கு விரோதமாகுமோ! என்று அவர்கள் கேட்கக்கூடும். ருத்ராதிகளிடத்தில் ஸ்ரீமந்நாராயண பரிவாரத்வ ப்ரதிபத்தி குறையற்றதாகில் குசலமேயாகுமிவர்களுக்கு. ஆதி சங்கரர் விஷ்ணு பக்தரா? சிவ பக்தரா என்று விசாரித்து நிர்ணயிக்க வேண்டுவது அவசியமானது. ச்ருதிதிஹாஸ புராணாதி ஸமஸ்த ப்ரமாண விசேஷங்களுள் பகவத்கீதையே முன்னணியில் நிற்கின்றதென்பதில் யார்க்கும் விவாத மிராது. எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து பணித்ததென்கிற மிக்க சிறப்பன்றே

http://acharya.org

இதற்குள்ளது! அப்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே யென்றும் ஸ்ரீமஹா விஷ்ணுவே யென்றும் இதில் ஸகல வைதிகர்களும் ஏக கண்டர்களே யாவர். இதில் விப்ரதிபத்தி கொண்ட வைதிகர் ஒருவருமிலர்; இத்தகைய நூலில் ஸ்ரீமஹா விஷ்ணுவின் பரத்வமும் தேவாந்தரங்களின் அவரத்வமும் அடிக்கடி விளக்கப்பட்டுள்ளது. (10-8) *அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே* என்ற விடத்தில் சங்கர பாஷ்யபங்க்தி இது காணீர்;—"அஹம் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்க்யம்; ஸர்வஸ்ய ஜகத: ப்ரபவ:—உத்பத்தி:; மத்த ஏவ ஸ்திதிநாசக்ரியாபலோபபோக லக்ஷணம் விக்ரியாரூபம் ஸர்வம் ஜகத் ப்ரவர்த்ததே" இத்யாதி. மூலத்தில் நாராயண பதமோ விஷ்ணுபதமோ காணப்படாத விடங்களிலெல்லாம் நியமேந விஷ்ணு நாராயண வாஸுதேவ பதங்களை யிட்டே பாஷ்யமியற்றுகிறார் சங்கராசாரியர் என்பது வ்யபிசரியாத விஷயம். ... . *

அநந்யாச் சிந்தயந்தோ மாம் (9-22) என்ற விடத்தில் *பரம் தேவம் நாராயணம்....... பர்யுபாஸதே—தேவாநாம் பரமார்த்த தர்சிநாம்* என்று பாஷ்யமிட்டிருக்கின்ற சங்கராசாரியர் பரதேவதையான நாராயணனை உபாஸிப்பவர்கள் யாவரோ அவர்களே உண்மை யறிவாளிகள் என்று காட்டினாராகிறார். ஸ்ரீமஹா விஷ்ணுவுக்குப் போல ருத்ரனுக்கும் பாரம்யமுண்டு என்கிற வாதத்தை ஸஹிப்பவரல்லர் அவர். ஸ்ரீமந்நாராயண வ்யதிரிக்த தேவதைகளை பஜிப்பவர்களைப் பற்றின ப்ரஸ்தாவம் கீதையில் இல்லாமற் போகவில்லை. (7-20) *காமைஸ்தை ஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்யதேவதா:* என்று தொடங்கிச் சொல்லி வருகையில் *அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம்* என்று தலைக் கட்டப்பட்டுள்ளது. இந்த ச்லோகத்தின் பாஷ்யத்தின் முடிவில் சங்கராசாரியர் எழுதியுள்ள வாக்கியம் பரம பக்தர்களை அவசமாகவே கண்ணீர் பெருக்க வைக்கின்றது. அவ்விடத்திலுள்ள வாக்கியமிது காணீர்- *ஏவம் ஸமாநே அப்யாயாஸே மாமேவ ந ப்ரபத்யந்தே அநந்தபலாய; அஹோ கலு கஷ்டதரம் வர்த்ததே இத்யநுக்ரோசம் தர்சயதி பகவான்* என்று. ஸ்ரீமந்நாராயணனை பஜிப்பவர்களுக்கே அநந்தாக்ஷயபலன் பெறுவதற்கு அவகாசமுள்ளதென்று அறிந்தவர்களுங்கூட க்ஷுத்ர பலன்களை விரும்பி தேவதாந்தரபஜனம் செய்கிறார்களே! என்று பகவான் தானே கண்ணீர் விட்டழுது கதறுவதாக ஸாக்ஷாத் கரித்தன்றோ சங்கராசாரியர் இதை யெழுதியுள்ளார்! .... *

பகவத்கீதை ஆறுமத்யாயத்தில் முடிவான ச்லோகமிது. *யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா. ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத:* என்பது. இங்கு சங்கர பாஷ்ய பங்க்தி வருமாறு—* யோகிநாமபி ஸர்வேஷாம் ருத்ராதி த்யான பராணாம். மத்கதேந-மயி வாஸுதேவே ஸமாஹிதேந, அந்தராத்மநா—அந்த:கரணேந, ச்ரத்தாவாந்—ச்ரத்ததாந ஸ்ஸந், பஜதே-ஸேவதே யோ மாம், ஸ மே-மம யுக்ததம:—அதிசயேந யுக்த:, மத:—அபிப்ரேத:* என்று. இதற்கு விவரணம் அநபேக்ஷிதம். பக்ஷபாத மற்றவர்கள் நற்றெளிவு பெறுவர்கள்.

ஆதி சங்கராசார்யர் ஸஹஸ்ர நாம பாஷ்யத்திலும் பல பல இதிஹாஸங்களை யெடுத்துக்காட்டி நாராயண பாரம்யத்தைத் திடப்படுத்தியுள்ளார். விஷ்ணுவின்

http://acharya.org

தாழ்வையோ, தேவதாந்தரத்தின் உயர்வையோ ஒரிடத்திலும் அவர்காட்டினாரில்லை. கேசவநாம பாஷ்யத்தில் *கோ ப்ரஹ்மேதி ஸமாக்யாத ஈசோஹம் ஸர்வதேஹி நாம், ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவான் * என்று சொல்லிக் கொண்டே சிவபெருமான் இந்த கேசவ நாமத்தை ஸமர்ப்பித்ததாக ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள இதிஹாஸத்தை உதாஹரித்துள்ளார் பகவத்பாதர். (அர்க்க:) என்னும் திருநாமத்தின் பாஷ்யத்தில் *ப்ரஹ்மாதிபி: பூஜ்யதமைரபி அர்ச்சநீயத்வாத் அர்க்க* என்ற விவரணம் காட்டினர். இங்கு ஆதி சப்தத்தால் முந்துற முன்னம் க்ரஹிக்கக் கூடியவர் பார்வதிபதியல்லவோ? ஏன்? *ஸ ப்ரஹ்மா ஸ சிவ:* என்றோதுகிற வேத புருஷன் பிரமனுக்கடுத்தபடி சிவபிரானைச் சொல்லி வைத்திருப்பது பிரஸித்தமன்றோ? [அமிதாசந:] என்னும் திருநாமத்தின் பாஷ்யத்திலும் ஸம்ஹாரஸமயே விச்வமச்நாதீதி அமிதாசந:'' என்று விவரித்தார் பகவத்பாதர். சிவபெருமான் விச்வ பஹிர்ப்பூதனல்லனே. * நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்* என்கிற திருவாசிரியப் பாசுரமும் இங்கு நினைக்கத் தக்கது. *அத்தா சராசரக்ரஹணாத்* என்கிற ஸூத்திரத்தில் க்ருத்ஸ்நமான சராசரத்தையும் உண்டவனென்று நிர்ணயிக்கப்பட்ட நாராயணன் சிவபெருமானை விட்டிட்டானென்ன ப்ரஸக்தி யில்லையே. உட்கொள்ளப்பட்டவர்களில் சிவபெருமானே முதல்வனென்பது பகவத்பாத ஸித்தாந்தம். *ஸர்வவாகீச்வரேச்வர: என்கிற நாம பாஷ்யத்திலும் ஸர்வேஷாம் வாகீச்வராணாம் ப்ரஹ்மாதீநாமபி ச்வர: என்றார் அவர் தாமே. [இனி நிர்க்குணப்ரஹ்மவாத நிராகரணம் பண்ணுகிறோம்.] .... *

பரப்ரஹ்மம் நிர்க்குணம் என்று பிறர் செய்யும் வாதம் மிகவும் வருந்தத் தக்கது. ஹேய குணமில்லாமையைத் தெரிவிக்க வேண்டி உபநிஷத்து சில விடங்களில் ப்ரஹ்மத்தை நிர்க்குணமென்று சொல்லி யிருப்பதுண்டு. எண்ணிறந்த திருக்கல்யாண குணமுடைமையை ஓதியிருக்கின்ற ச்ருதிசதங்களுக்கு விரோதமின்றிக்கே நிர்வாஹம் செய்யவேண்டுமன்றோ; அங்ஙனே நிர்வஹிக்குமளவில் நிர்க்குண ச்ருதிகளுக்கு ஹேயகுணமில்லாமையைக் கூறுவதில் தாத்பர்யம் என்றே சொல்லித் தீர வேண்டும். ப்ரதாநம் முதலானவை ஜகத் காரணமாகக் கூடுமென்று நேர்ந்த சங்கைகளைப் பரிஹரியா நின்ற சாரீரக மீமாம்ஸையானது பெரும்பாலும் அதிகரணந்தோறும் பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள திருக்குணங்களை யெடுத்துக்கொண்டே 'அத்தகைய குணங்களில்லாத வஸ்துக்களுக்கு காரணத்வம் ஸம்பவிக்கமாட்டாது' என்று தலைக்கட்டுகின்றது. இக்காலத்தவர்களான அத்வைதிகள் தங்கள் நூல்களில் "ஆதிசங்கராசாரியரும் ஸகுணப்ரஹ்மத்தையும் ஸசரீரப்ரஹ்மத்தையும் ஒப்புக் கொண்டிருப்பதுண்டு'' என்றெழுதுகிறார்கள். இங்ஙனே யெழுதுமவர்களுக்கு அவ்யவஸ்தித சித்தத்வம் தவிர வேறொன்றும் தேறாது. நையாயிகர்கள் "உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணமகுணம் திஷ்டதி'' என்பர்கள். பரப்ரஹ்மத்திற்கு உற்பத்தி ஒப்புக் கொண்டாலாவது அது க்ஷணகாலம் நிர்க்குணமாக இருக்கவுமாகும். முமுக்ஷுக்களும் முக்தர்களும் நித்யர்களுமான ஸமஸ்த ஜீவராசிகளையும் தன்னுடைய குணாநுபவத்தினாலேயே உஜ்ஜீவிப்பிக்குமதான பரப்ரஹ்மம் க்ஷணமாத்ரமும் நிர்க்குணமாக இருக்ககில்லாது. கூரத்தாழ்வானருளிச்செய்த ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் * தாரே குணஸ்தவ து ஸத்வரஜஸ்தமாம்ஸி தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்க்குணத்

http://acharya.org

வம், நித்யம் ஹரே! நிகில ஸத்குணைகஸாகரம் ஹி த்வாமாமநந்தி பரமேச்வரமீச்வ ராணாம் * என்றுள்ள ச்லோக ரத்நம் இங்கு நித்யானு ஸந்தேயமாகக் கடவது. ... *

முக்கியமாகக் குறிக்கொண்மின்; "பாஞ்சராத்ரம் அப்ரமாணம்" என்கிற பிறர் உபநிஷத்துக்கள் ப்ரஹ்மஸூத்ரங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலிய வற்றை ப்ரமாணமாக ஒப்புக்கொள்பவர்கள்போலும். இது வாங்மாத்ரேண அங்கீகாரமே யொழிய வேறில்லை. "பாஞ்சராத்ரத்தை ப்ரமாணமாக வொப்புக் கொண்டால் என்ன ஹாநி விளைந்திடும்? ச்ருதீதிஹாஸ புராண ஸூத்ரங்களை ப்ரமாணமென்று ஒப்புக்கொண்டதனால் என்ன லாபம் விளைந்திட்டது?" என்று இவர்களை வினவினால் இவர்கள் என்ன விடையிறுப்பர்களோ, பார்க்கவேணும். "வேத:ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்று வேத ப்ராதுர்ப்பாவ விசேஷமாகக் குலாவப்படுகிற ஸ்ரீராமாயணத்திலும் ஆதியோடந்தமாகத் திருக்கல் யாண குணகண ப்ரஸ்தாவமே விளங்கா நின்றது. வால்மீகி முனிவர் தம்மிடம் வந்து சேர்ந்த நாரத மஹர்ஷி பக்கலில் கதை கேட்க விரும்பிற்றிலர்; திருக்குணங்கள் கேட்கவே விருப்பத்தை வெளியிட்டார். அதில், *கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந்* என்றும் *பஹவோ துர்லபாச்சைவ யே த்வயா கீர்த்திதா குணா:* என்றும் உபக்ரமத்தில் காணும் வினவிடைகளினால் இஃது அறியலாகும்.

எம்பெருமானுடைய திருவவதாரங்க ளெல்லாம் குணபரீவாஹ ரூபங்க ளென்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். எம்பெருமான் ஸ்வாத்மாவிலே நிரம்பியுள்ள திருக்குணங்களை வெளியிட்டுத் தரிப்பதற்காகவே திருவவதாரங்கள் செய்கிறானென்கை. ஸ்ரீராமக்ருஷ்ணாதி ரூபேண திருவவதரித்து வேதஸித்தங்களும் ஸ்வாபாவிகங்களுமான திருக்குணங்களை ஸகல பக்தர்களும் அநுபவிக்கும்படி செய்தருளினன் பகவான். இதை அறியாதாரில்லை. "ப்ரஹ்மம் குணசூந்யமே" என்பவர்கள் ஸ்ரீராமாயணம் முதலான இதிஹாஸ புராணங்களுக்கும் அவற்றுக்கும் மூலமான ச்ருதிகளுக்கும் நெடுந்தூரத்திலிருக்கத் தக்கவர்களென்பது அதிவாதமு மன்று, ஆக்ரஹ வார்த்தையுமன்று. *இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப் ரும்ஹயேத்* என்று பொதுவாகவும் *வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:* என்று சிறப்பாகவும் சொல்லியுள்ள மஹர்ஷிகள் வேதப்பொருள்களே இதிஹாஸ புராணங்களில் வெட்டவெளிச்சமாகக் காணப்படுகின்றனவென்று ப்ர திஜ்ஞை செய்தவர்களாகின்றனர். ஆக, திருக்குணங்களிலேயே நோக்காகத் திரு வவதரித்த வேதங்களுக்கும் தது பப்ரும்ஹணங்களுக்கும் சிறிதும் பொருந்தாதபடி நிர் குணப்ரஹ்மவாதம் செய்பவர்களைப்பற்றி இன்னமும் பேசவேண்டியதொன்று மில்லை.

[இனி வேதாந்த வாக்யங்களுக்கு அத்வைதத்தில் நோக்கில்லையென்பது.] ச்ருதிவாக்யங்களை யுற்று நோக்கினால் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப் படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்கியங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். *க்ஷரம் ப்ரதானம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:* என்பது முதலான ச்ருதிவாக்யங்கள் சேதந அசேதந ஈச்வர ரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன.

http://acharya.org

நேஹ நாநாஸ்தி கிஞ்சந *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம* *தத்த்வமஸி* இத்யாதிகளான ச்ருதி வாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன. ஆக, ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதிபாதநமும் சிலவிடத்து அபேதப்ரதிபாதநமுமிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்டவேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்று கொள்ளுகிற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து பேதத்தைக்காட்டும் ச்ருதிவாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள். த்வைதிகளோவென்னில் பேதத்தைக்காட்டும் ச்ருதி வாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள். *யஸ்யாத்மா சரீரம் யஸ்யப்ருதிவீ சரீரம். ய ஆத்மநி திஷ்டந்* இத்யாதி வாக்யங்கள் பகவான் ப்ருதிவீ முதல் ஆத்மா வரையிலுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியா யிருக்கிறானென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்யங்களை அமுக்யார்த்தங்களாகக் கொள்ளுதல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் தட்டப்பெறாதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படும்.

•

கீழே யெடுத்துக்காட்டிய மூன்று வகுப்பான ச்ருதிவாக்யங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். ஒரு ச்ருதி வாக்கியத்திலும் அமுக்யார்த்த கல்பனை யென்பது கிடையாது. எங்ஙனேயென்னில், கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட *யஸ்யாத்மா சரீரமித்யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்று பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமுமின்றிக்கே பொருந்தச் செய்யவல்லவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்கள்—என்கிற காரணத்தினால் இவற்றுக்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தமானது. *நேஹ நாநாஸ்தி கிஞ்சந* இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினாலேற்பட்ட அபேதத்தையும் *க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:* இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினாலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்மின். சேதநா சேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களின் ஸ்வரூப பேதம் உண்மையாதலால் *க்ஷரம் ப்ரதாந மித்யாதி பேத ச்ருதியானது பேதத்தைச் சொல்லியிருப்பது பாங்கே. ப்ரஹ்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க்கொண்டு ஒன்றேயாகிறபடியால் *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம இத்யாதியான அபேத ச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. *யஸ்யாத்மாசரீரமித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனை ஸர்வாந்தர்யாமியென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பர் நம் ஆசாரியர்கள்.

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

சித்சித் ஈச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண்செலுத்தினால் பேதம் க்ரஹிக்கப்படுகிறது. அசேதநமாகிய சரீரம் வேறு, அதனுள்ளுறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று பேத ப்ரதிபத்தி சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டுறவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்து பேத ப்ரதிபத்தியும் 'அவயவஸங்காதம் ஒன்று' என்று பார்க்குமிடத்து அபேத ப்ரதிபத்தியும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யஜ்ஞதத்தன் ஒருவன் இத்யாதி வ்யவஹாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்கவேணும். 'தேவதத்த: க்ருச:, யஜ்ஞதத்த: ஸ்தூல:' இத்யாதி வ்யவஹாரங்களில் க்ருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களேயென்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ, யஜ்ஞதத்த: ப்ரதிபாவாந்' இத்யாதி வ்யவஹாரங்களில் மேதையும் ப்ரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல; வெவ்வேறுபட்டவை. ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வவ்யவஹாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனை சரீரி ஒருவன்' என்னுமபிஸந்தியாலத்தனையன்றோ! இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற ச்ருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே. ஏவஞ்ச பேதத்திற்கும் அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லையென்றதாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநா வஸ்துஸத்பாவம் ப்ராமாணிகமாகையாலே அபலபிக்க வொண்ணாததே. இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவஸித்தமாகையாலே அபலபிக்க வொண்ணாததே. ஆக உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும், சரீர சரீரி பாவநிபந்தநமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட சரீர சரீரிபாவத்தை யுணர்த்துகின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணாதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு நமது மதத்தில் மிக்க கௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேத ச்ருதிகளை அநாதரிப்பது போலவும் நாம் ஒருவகையான ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதி ஸாமரஸ்யம் நமக்கேயொழியப் பிறர்க்கில்லையென்று கல்வெட்டாயிற்று.

மதாந்தரஸ்த்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றையெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று பெயரிடுவதில் என்ன விசேஷமென்னில், கேண்மின். ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகத்சரீரகத்வமென்பதே ப்ரதாநமானது. ஆனது பற்றியே இது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தமெனப்படுகிறது. இதுவே ப்ரதாநமென்பது எங்ஙனமென்னில் ஸர்வச்ருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதி விஜய ப்ரயோஜகமாயிருப்பதனாலே, இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க. இந்த சரீராத்ம பாவத்தைத் தெரிந்து கொள்ளாமையினாலன்றோ பிறமதத்தவர்கள் ஸர்வ ச்ருதி

http://acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada

ஸாமரஸ்யத்தை நிர்வஹிக்கமாட்டாமல் தளருகின்றார்கள். ச்ருதஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே யென்க. .... *

ஸித்தாந்தத்தில் சரீராத்மபாவமே ப்ரதான மென்பது கீழே உபபாதிக்கப்பட்டது ப்ரஹ்மஸூத்ரகாரருக்கும் இதுவே அபிமதமென்பதை மூதலிக்கிறேன். இவ்விஷயத்தில் சாரீரக மீமாம்ஸை முழுவதுமே ப்ரமாணமாகக் காட்டக் கூடியதாயினும் வ்யுத்பித்ஸுக்களின் புத்தியில் ஏறுவதற்காக ஸங்க்ஷேபமாய் நிரூபித்தல் நலமென்று கருதி அந்த சாரீரக மீமாம்ஸையில் ஒரு அதிகரணத்தை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டிப் ப்ராமாணிகர்களின் மனத்தில் பதியவைக்கிறேன். அதில் முதலத்யாயம் நான்காவது பாதத்தில் வாக்யாந்வயாதிகரண மென்பது ப்ரஸித்தமானது. நான்கு ஸூத்ரங்கள் கொண்டது இவ்வதிகரணம். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரஸித்தமான மைத்ரேயி ப்ராஹ்மணமென்னும் பகுதியில் "அம்ருதத்வோபாயமேதென்று கேட்ட மைத்ரேயியைக் குறித்து யாஜ்ஞவல்க்யருடைய விடை: "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்பது. இதில் ஆத்மா என்னும் சப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாவா? ஜீவாத்மாவா? என்று விசாரம் ப்ரஸக்தமாக, பரமாத்மாவே யென்று நிர்ணயம் செய்வது இவ்வதிகரணத்தின் ப்ரமேயம். இது * வாக்யாந்வயாத் * என்கிற முதல் ஸூத்ரத்தினால் தேறியது. மைத்ரேயீப்ராஹ்மணத்திலுள்ள மஹாவாக்யம் ஸமஞ்ஜஸமாக அந்வயிக்க வேண்டுகையாலே அந்த வாக்யத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஆத்மா கர்மபலனை யநுபவிப்பவனான ஜீவாத்மாவாக இருக்க முடியாது, பரமபுருஷனேயாகவடுக்கும் என்று சொல்லப்பட்டதாயிற்று. இதற்கு மேல் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, இங்குப் பரமாத்மா விவக்ஷிதனாகில் ஜீவாத்ம வாசகமான ஆத்மா என்கிற சொல்லைவிட்டுச் சொல்லுவானேன்? பரமாத்மாவென்றே ப்ரயோகிக்கலாகாதா? என்று. இக்கேள்விக்கு ஸூத்ரகாரரான வ்யாஸரால் மேலே மூன்று ஸூத்ரங்களினால் ஸமாதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமி மதம், காசக்ருத்ஸ்ந மதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. *ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங்கமாச்மரத்ய:* என்கிற முதல் ஸூத்ரம் ஆச்மரத்ய மதம். ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்ய காரண பாவம் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கையாலே அதனால் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. காரணமான மண்ணுக்கும் அதன் கார்யமான பானைக்கும் அபேதம் காண்கிறதன்றோ? ஆக இவ்வபேதத்தைத் தெரிவிப்பதற்காக பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தியுள்ளதென்றார் ஆச்மரத்யர். இனி ஔடுலோமி மதம் : கீழே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே *ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித் இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாதுவன்றென்று கொண்ட ஔடுலோமியானவர்—[உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:] முக்தி தசையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடு அபேதம் ச்ருதிஸித்தமாயிருக்கையாலே முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தை யவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார். இதற்குமேல் காசக்ருத்ஸ்ந மதம்:—கீழே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம் வரையில் ஜீவாத்ம

http://acharya.org

பரமாத்மாக்களுக்கு பேதமுள்ளதென்றும், முக்தி தசையில் அபேதமென்றும் கொள்ளப்படுகிற விது "பரமாத்மாத்மனோர்யோக: பரமார்த்த இதிஷ்யதே, மித்த்யைதத் அந்யத் த்ரவ்யம் ஹி நைதி தத் த்ரவ்யதாம் யத:, என்கிற ஸ்ரீவிஷ்ணு புராண வசன விருத்தம். வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்றோடொன்று சேருமே யொழிய ஐக்கியத்தை யடையமாட்டா வென்று இதில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றதன்றோ! முக்தி தசையில் ஜீவாத்மாவுக்கு அபஹத பாப்மத்வாதி ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்குமதொழிய பரமாத்மாவோடு ஐக்யாபத்தியென்பதில்லை யென்னுமிடம் (1—4—1.) ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆக இத்தனைக்கும் முரணாக நிர்வஹிப்பது அநுசிதம் என்று கொண்ட காசக்ருத்ஸ்நர் [*அவஸ்திதே ரிதி காசக்ருத்ஸ்ந:] பரமாத்மா ஜீவாத்மாவினுள் அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்மசரீரத்வமும்* ய ஆத்மநி திஷ்டன்....யஸ்யாத்மா சரீரம் இத்யாதி ச்ருதி ஸித்தமாகையாலும், சரீர வாசகங்களான சப்தங்களுக்கு சரீரபர்யந்த வாசகத்வம் ஆக்ருத்யதிகரண ஸித்தமாகையாலும் ப்ரக்ருதத்தில் ஜீவாத்மவாசியான ஆத்ம சப்தத்தைப் பரமாத்மபர்யந்த வாசகமாக நிர்வஹிப்பதுதான் உசிதமென்று கருதினர். ....

மநுஸ்ம்ருதியில் அர்த்த விசேஷங்கள்

46. தர்ம சாஸ்த்ரங்களுக்கு ஸ்ம்ருதியென்று பெயர். "கலௌ பாராசரம் ஸ்ம்ருதம்" என்கிறபடியே கலியுகத்தில் பாராசரஸ்ம்ருதிக்குச் சிறப்பு சொல்லப்பட்டிருந்தாலும் வேதத்தில் (2.2) *யத் வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்* என்று மநுசொன்னதெல்லாம் மருந்தென்று புகழப்பட்டிருப்பதாலும்; *வேதேஷு பௌருஷம் ஸூக்தம் புராணேஷு ச வைஷ்ணவம், பாரதே பகவத்கீதா தர்மசாஸ்த்ரேஷு மாநவம்*என்று தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதி சிறந்ததென்று கூறப்பட்டிருப்பதாலும் மநுஸ்ம்ருதியின் ப்ராசஸ்த்யம் ஸர்வஸம்மதமானது. மேலே உதாஹரித்த *யத் வை கிஞ்ச மநுரவதத்* என்கிற ச்ருதியில் மநு: என்பதற்கு மநுமஹர்ஷி அர்த்தமன்றென்று சிலர் சொல்லுவதுண்டாகிலும் (2.1.1.) *ஸ்ம்ருத்யதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் மநுமஹர்ஷிபரமான அர்த்தமேயுள்ளது. மூந்தின பாஷ்யத்திலும் அப்படியேதானுள்ளது. சததூஷணியிலும் (64ல்) உள்ளது. ஆக, மநுஸ்ம்ருதியின் ஏற்றம் வேதமேறினதாதலால் அதிலிருந்து சில பல விஷயங்கள் ஸாரமாக வெடுத்து நிரூபிக்கப்படுகின்றன. .... *

யுகதர்மங்களைப்பற்றி

47. (அத். 1. சுலோ. 85) * அந்யே க்ருதயுகே தர்மா: த்ரேதாயாம் த்வாபரே அபரே, அந்யே கலியுகே ந்ருணாம் யுகஹ்ராஸாநுரூபத: * — தருமங்கள் எப்போதும் ஒரு படிப்பட்டே யிருக்கமாட்டா. யுகங்களுக்குத் தக்கபடி தருமங்கள் குறைந்து கொண்டே வரும் என்கை. இதற்கடுத்த சுலோகத்தில், க்ருதயுகத்தில் தபஸ்ஸுக்கு

http://acharya.org

ப்ராதான்யமென்றும், த்ரேதாயுகத்தில், ஜ்ஞானத்திற்கு ப்ராதான்யமென்றும், த்வாபரயுகத்தில் யஜ்ஞத்திற்கு ப்ராதான்யமென்றும், கலியுகத்தில் தானமொன்றுக்கே ப்ராதான்யமென்றும் சொல்லப்பட்டுள்ளது. வேறோரிடத்தில் * த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரே அர்ச்சயந், யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்* என்று க்ருதயுகத்தில் த்யானத்துக்கு ப்ராதான்யமும், த்ரேதா யுகத்தில் யஜ்ஞத்துக்கு ப்ராதான்யமும், த்வாபரயுகத்தில் அர்ச்சனைக்கு ப்ராதான்யமும், கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தனத்திற்கு ப்ராதான்யமும் சொல்லப்பட்டுள்ளது. *

உபநயந காலத்தைப் பற்றி

48. இரண்டாமத்யாயத்தில் 36, 37, 38 ஆம் சுலோகங்கள் குறிக்கொள்ளத் தக்கவை. (36ல்) *கர்ப்பாஷ்டமே அப்தே குர்வீத ப்ராஹ்மண ஸ்யோபநாயநம்* என்று கர்ப்பாஷ்டமமாகிய எழாவது வயதில் பிராமணனுக்கு உபநயனம்பண்ண வேண்டுமென்றது. (37ல்) ப்ரஹ்மவர்ச்சஸ காமஸ்ய கார்யம் விப்ரஸ்ய பஞ்சமே*— ஐந்தாவது வயதிலேயே உபநயனம் பண்ணினால் அப்போதிருந்தே வேதாத்யயன ஸம்பத்து மலிந்து ப்ரஹ்மவர்ச்சஸம் மிகும் என்றபடி. இங்கு பஞ்சமே என்பதற்கு "கர்ப்ப பஞ்சமே" என்றே வியாக்கியானம் செய்கிறார்கள். நான்காவது பிராயத்திலென்றதாயிற்று. (38) * ஆஷோடசாத் ப்ராஹ்மணஸ்ய ஸாவித்ரீ நாதிவர்த்ததே*— இதனால் பிராமணனுக்குப் பதினாறாவது வயது வரையில் உபநயனகாலம் அனுமதிக்கப்படுகிறது. இதே ச்லோகத்தில் க்ஷத்ரியனுக்கு இருபத்திரண்டாம் வயது வரையிலும், வைச்யனுக்கு இருபத்துநான்காம் வயது வரையிலும் உபநயனகாலம் அனுமதிக்கப்பட்டிருப்பதால் இக்காலத்து ப்ராஹ்மணப் பிள்ளைகளுக்கு க்ஷத்ரிய வைச்ய தர்மமே கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது .... *

குசல ப்ரச்நத்தைப் பற்றி

49. இரண்டாமத்யாயத்திலேயே (127) நூற்றிருபத்தேழாம் சுலோகம்— *ப்ராஹ்மணம் குசலம் ப்ருச்சேத் க்ஷத்ரபந்து மநாமயம், வைச்யம் க்ஷேமம் ஸமாகம்ய, சூத்ரம் ஆரோக்யமேவ ச.* — இதில் (ஸமாகம்ய) என்றது ப்ராஹ்மணம் ஸமாகம்ய, க்ஷத்ரபந்தும் ஸமாகம்ய, வைச்யம் ஸமாகம்ய, சூத்ரம் ஸமாகம்ய என்றபடி. ப்ராஹ்மணன் அணுகினால் "குசலமா?" என்று கேட்கவேண்டியது. க்ஷத்ரியன் அணுகினால் "அநாமயமா?" என்று கேட்கவேண்டியது. வைச்யன் அணுகினால் 'க்ஷேமமா?" என்று கேட்கவேண்டியது; சூத்ரன் அணுகினால் "ஆரோக்யமா?" என்று கேட்கவேண்டியது. இதில் குசலம் க்ஷேமம் என்கிற பதங்களும், அநாமயம் ஆரோக்யம் என்கிற பதங்களும் பரியாயமேயானாலும் இங்கு அர்த்தத்தில் நோக்கில்லை; உச்சரிக்க வேண்டிய சப்தத்தில் நியமம் விவக்ஷிதம் என்பர் வ்யாக்யாதா. இது யுக்தமே. .... *

ஆசார்யரும் உபாத்யாயரும்

50. இரண்டாமத்தியாயத்திலேயே (131.) நூற்றுமுப்பத்தோராவது சுலோகம் *மாத்ருஷ்வஸா மாதுலாநீ ச்வச்ரூ: அத பித்ருஷ்வஸா. ஸம்பூஜ்யா குருபத்நீவத் ஸமாஸ் தா குருபார்யயா:* — சிறிய தாயார் அம்மாமி மாமியார் அத்தை ஆகிய இவர்

http://acharya.org

கள் ஆசார்ய பத்னியோடொத்தவர்களாகையாலே அவளைப்போலவே இவர்களை வழிபட வேண்டுமென்கிறது. எழுந்திருத்தல் தொழுதல் செய்யவேண்டியதென்கை. இதற்குமேல் 140, 141-ஆம் சுலோகங்களில் இன்னருக்கு ஆசார்யரென்று பெயர். இன்னருக்கு உபாத்யாயரென்று பெயர் என்பது தெரிவிக்கப்படுகிறது. (140) * உபநீய து யச் சிஷ்யம் வேதம் அத்யாபயேத் த்விஜ:, ஸகல்பம் ஸரஹஸ்யஞ்ச தமாசார்யம் ப்ரசக்ஷதே. * — சிஷ்யனைத் தம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு கல்பம் ரஹஸ்யம் இவற்றோடுங்கூட வேதசாகையைப் பூர்த்தியாக ஓதுவிப்பவரை ஆசார்யரென்று கூறுவர்கள். (141;) * ஏகதேசம் து வேதஸ்ய வேதாங்கான்யபி வா புந:, யோத்யாபயதி வ்ர்த்தயர்த்தம் உபாத்யாயஸ் ஸ உச்யதே * வேதத்தில் ஏகதேசத்தையோ (அல்லது) வியாகரணம் முதலான வேதாங்கங்களையோ வ்ருத்திக்காக ஓதுவிப்பவர் உபாத்யாயரெனப்படுவர். இதற்கு மேல் (145-ல்)*உபாத்யாயாந் தசாசார்ய:* இத்யாதியில், பத்து உபாத்யாயர்களுக்கு ஸமமானவர் ஒரு ஆசார்யரென்றும், நூறு ஆசாரியர்களுக்கு ஸமமானவர் ஒரு பிதா என்றும், ஆயிரம் பிதாக்களுக்கு ஸமமானவள் ஒரு மாதா என்றும் சொல்லப்படுகிறது. இதற்குமேல் 225, 226-ஆம் சுலோகங்களில் இன்னும் விசேஷம் சொல்லப்படுகிறது. ஆசார்யன் பரமாத்மாவின் வடிவமானவன். பிதா பிரமனுடைய வடிவமானவன். மாதா பூமிப்பிராட்டியின் வடிவமானவள். ஆசார்யன் தந்தை தாய் தமையன் ஆகிய இவர்களால் தனக்கு ஏதேனும் பீடை யுண்டானாலுங்கூட இவர்களை பிராமணன் அவமதிக்கவே கூடாது என்கிறது. ... . *

க்ருஹஸ்தாச்ரமியின் ஏற்றம்

51. மூன்றாவதத்யாயத்தில் (77-78-ஆம் சுலோகங்களில்) க்ருஹஸ்தாச்ரமிக்கு மிக்க ஏற்றம் சொல்லப்படுகிறது. (77.) * யதா வாயும் ஸமாச்ரித்ய வர்த்தந்தே ஸர்வ ஜந்தவ:. ததா க்ருஹஸ்தமாச்ரித்ய வர்த்தந்தே ஸர்வ ஆச்ரமா:. — ஸர்வப்ராணிகளும் வாயுவை யவலம்பித்தே வாழ்வதுபோல ஸர்வாச்ரமிகளும் க்ருஹஸ்தாச்ரமியை யவலம்பித்தே வாழவேண்டியிருக்கிறது. வாயுவில்லையானால் மூச்சடங்கிவிடும்; க்ருஹஸ்தனில்லையானால் ப்ரம்மசாரிகளும் ஸந்யாஸிகளும் ஜீவிக்க முடியாதென்றபடி. அடுத்த சுலோகத்தினால் இது உபபாதிக்கப்படுகிறது. 'யஸ்மாத் த்ரயோப்யாச்ரமிண: ஜ்ஞாநேந அந்நேநசாந்வஹம், க்ருஹஸ்தேநைவ தார்யந்தே தஸ்மாத்ஜ்யேஷ்டாச்ரமோ க்ருஹீ. வேதார்த்த வ்யாக்யான முகத்தாலும் அன்னதான முகத்தாலும் க்ருஹஸ்தனே மற்ற ஆச்ரமிகளுக்கு உபகாரகனென்கை. ஆனதுபற்றியே காளிதாஸர் ரகுவம்சத்தில் "ஸர்வோபகார க்ஷமமாச்ரமம் தே"! என்றார். .... *

போஜந காலத்தே நியமம்

52. மூன்றாமத்யாயத்திலேயே (சுலோ. 238ல்.) போஜன காலத்து நியமம் கூறப்படுகிறது. *யத் வேஷ்டிதசிரா புங்க்தே* இத்யாதி. முட்டாக்கிட்டுக்கொண்டு உண்ணலாகாது; தெற்கு முகமாயிருந்து உண்ணலாகாது. பாதரக்ஷை யணிந்து கொண்டு உண்ணலாகாது. இந்த நிஷேதத்துக்குக் கட்டுப்படாமல் உண்டால் அந்த வுணவு ராக்ஷஸர்களுக்கே சேரும். [இந்த மூன்றாமத்யாயம் 286 ச்லோகங்கள் கொண்டது; பூர்த்தியாக ஊன்றி வாசிக்கத்தக்கது.] .... *

http://acharya.org

ஜீவிக்கும் வழிகளைப் பற்றி

53. நான்காமத்யாயத்தில் ஜீவிக்க வேண்டிய வழிகள் கூறப்படுகின்றன. *ருதாம்ருதாப்யாம் ஜீவேத் து ம்ருதேந ப்ரம்ருதேந வா, ஸத்யாந்ருதாப்யாமபி வா ந ச்வ வ்ருத்த்யா கதாசந* பிறர்க்குத் தொண்டு செய்து ஜீவிப்பதுகூடாதென்று முடிவாகச் சொல்லி, ருதம் அம்ருதம் ம்ருதம் ப்ரம்ருதம் ஸத்யாந்ருதம் என்னும் வழிகளால் ஜீவிக்கலாமென்கிறது. இந்த பதங்களெல்லாம் விவரணஸாபேக்ஷமாகையாலே மேலே மஹர்ஷிதாமே விவரிக்கிறார். ருதம் உஞ்சம் ஸிலம் என்று பர்யாயம். தட்டுத் தடையில்லாதவிடங்களில் த்ஷதிகள் முளைத்திருக்குமே. அவற்றை ஒவ்வொன்றாகக் கிள்ளிக் கொய்து கொள்ளுமது உஞ்சம்; கொத்துக் கொத்தாகக் கொய்து கொள்ளுமது ஸிலம். இனி அம்ருதம் என்பது அயாசிதம். இரந்து பெறாமல், பாத்ரவிநியோகம் பண்ணுமவர்கள் கொடுப்பதைக் கொள்ளுவது அம்ருதம்! இரந்து பெறுமது ம்ருதம். க்ருஷியினால் கிடைக்குமது ப்ரம்ருதம். ஸத்யாந்ருத மென்று வாணிஜ்யத்திற்குப் பெயர்; அதாவது வர்த்தகம். மெய்யும் பொய்யும் கலந்து வாணிஜ்யம் நடத்தப்படுவதால் அதற்கு ஸத்யாந்ருத மென்று பெயர் போவும். ஆக இவற்றால் ஜீவிக்கலாமேயொழிய ஸேவகவ்ருத்தியால் ஒருபோதும் ஜீவிக்கலாகாது. *ஸேவா ச்வவ்ருத்திராக்க்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்* என்று கடுமையாகச் சொல்லி முடிக்கிறார். இதைக் கண்ட ஒரு அபியுக்தர் சொல்லி வைத்தார்—"ஸேவா ச்வவ்ருத்திரிதியத் அபத்தம் தத்உதீரிதம். ஸ்வைரசாரீ க்வ சுநக: விக்ரீதாஸு: க்வ ஸேவக:' [இதன் பொருளாவது: அடிமைப்படுவதை நாய்வேலையென்று மநுமஹர்ஷி கூறியது தவறு. ஒருவர்க்கும் அடிமைப்படாமல் யதேஷ்டமாகத் திரிகிற நாய் எங்கே? நாலுகாசுக்கு உயிரை அறவிலை செய்திருக்கும் சேவகன் எங்கே? என்பதாம். இதனால் சேவகன் நாயினும் கடைகெட்டவன் என்றதாயிற்று] குணங்கண்டு ப்ராப்த விஷயத்திலே ஸேவகனாயிருப்பவனைப்பற்றியதன்று இந்த நிந்தை. .... *

வேஷம் வாக்கு வ்ருத்தி

54. நாலாமத்யாயத்திலே (ச்லோ. 18.) *வயஸ:கர்மணோர்த்தஸ்ய ச்ருதஸ்ய அபிஜநஸ்ய ச. வேஷவாக்வ்ருத்தி ஸாரூப்யமாசரந் விசரேதிஹ.* — இந்த ச்லோகம் ஒவ்வொருவருடைய சித்தனியிலுமிருக்கவேண்டும், வேஷம் வாக்கு வ்ருத்தி என்னுமிவை மூன்றும் வயதுக்கும் தொழிலுக்கும் பொருளுக்கும் படிப்புக்கும் குலத்துக்கும் தக்கபடியிருக்கவேண்டுமென்பது பொருள். இதன் கருத்தை விவரிப்போம். வேஷமாவது அரையில் தனிகட்டுதல், நெற்றியில் புண்ட்ரமணிதல், ஆபரணம் பூணுதல் பூமுடித்தல் முதலியன. இவை வயதுக்குத் தக்கபடியிருப்பதாவது—சைசவம் கௌமாரம் யௌவனம் வ்ருத்தாப்யம் ஆகிய பருவங்களுக்குத் தக்கபடியிருப்பதாம். வயதுக்கு மட்டுமன்று, தொழிலுக்கும் தக்கபடி இருக்க வேணும். லௌகிகத் தொழிலுக்குத் தக்க வேஷம் வேறு; வைதிகத் தொழிலுக்குத் தக்க வேஷம் வேறு என்பது தெரிந்ததே. அர்த்தஸ்ய—தனத்திற்கும் தக்கபடியிருக்கவேணும். தனிகன் கொள்ளத்தக்க வேஷத்தை தரித்ரன் கொள்ளலாகாது. தரித்ரன் கொள்ளத் தக்க வேஷத்தை தனிகன் கொள்ளலாகாது. ச்ருதஸ்ய—படிப்புக்குத்தக்கபடி வேஷமிருக்கவேணும். வித்வான்களின் வேஷம் வேறாகவும். படிப்பில்

http://acharya.org

லாத மூடர்களின் வேஷம் வேறாகவுமிருக்கத்தக்க தென்கை. அபிஜநஸ்யச— அபிஜநமாவது ஆபிஜாத்யம், ஸத்குல ப்ரஸூதத்வமென்றவாறு. உயர்குடிப் பிறப்பாளர் வேஷம் வேறு. அநபிஜாதர்களின் வேஷம் வேறு. ஆகவே இதுவரை வேஷத்தைப் பற்றிச் சொல்லியாயிற்று; இனி வாக்கைப் பற்றிச் சொல்லுவோம். வாக்கும் வயது தொழில் பொருள் படிப்பு குலம் ஆகிய இவற்றுக்குத் தக்கபடியிருக்கவேணும். பெரியார் வாக்கில் வெளி வரவேண்டியது சிறியார் வாக்கில் வெளி வரலாகாது; சிறியார் சொல்லக் கூடியதைப் பெரியார் சொல்லலாகாது. நிஹீந காரியங்களைச் செய்பவன் சொல்லுமதை உத்க்ருஷ்ட காரியங்கள் செய்பவர் சொல்லலாகாது: தனிகர்கள் சொல்லக்கூடிய வாக்கை தரித்ரன் சொல்லலாகாது. படிப்பாளிகள் சொல்ல வேண்டிய வாக்கை அறிவிலிகள் சொல்லலாகாது. குலீனர்கள் சொல்ல வேண்டிய வாக்கை அநபிஜாதர்கள் சொல்லலாகாது. இனி வ்ருத்தியைப் பற்றிக் கேண்மின். வ்ருத்தியாவது தானிருக்கவேண்டிய நிலைமை. இதுவும்—வயது தொழில் பொருள் படிப்பு குலம் ஆகிய இவற்றுக்குத் தக்கபடியிருக்கத் தக்கது. இந்த சுலோகம் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் முமுக்ஷுத்வாதிகாரத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ளது. .... *

பசுவதம் பற்றி

55. ஐந்தாவது அத்யாயத்தில் (சுலோ. 39.)*யஜ்ஞார்த்தம் பசவஸ் ஸ்ருஷ்டா: ஸ்வயமேவ ஸ்வயம்புவா, யஜ்ஞச்ச பூத்யை ஸர்வஸ்ய தஸ்மாத் யஜ்ஞே வத: அவத:* யாகத்தில் பசுவதம் செய்வது வதமாகாது என்று இந்த சுலோகத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்படுகிறது. ப்ரஜாபதியினால் யஜ்ஞத்திற்காகவே பசுக்கள் விரும்பிப் படைக்கப்பட்டன. யஜ்ஞமானது ஸகலலோக க்ஷேமத்திற்காக ஏற்பட்டது. ஆகையினால் யஜ்ஞத்தில் செய்யப்படும் வதம் வதமன்று. வதத்தினாலுண்டாகும் பாபம் அணுகாதென்றபடி. இங்கே விசேஷித்துச் சில விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கின்றேன். அடியேனெழுதிய உபந்யாஸ சதத்வயத்தில் (54.) அக்நிஹோத்ராதி யாகப்ரசம்ஸோபந்யாஸத்தில் இதைப் பற்றி மிக விரிவாக எழுதியிருக்கிறேன். தச்சேஷபூதமாக இங்கும் விளக்கமாகச் சில விஷயங்கள் தெரிவிக்கிறேன். யஜ்ஞத்தில் பசுவதம் செய்வது பாபமென்று அடியேன் நெஞ்சிலும் நினைத்ததில்லை, வாக்கினாலும் சொன்னதில்லை, எழுதிற்றுமில்லை. பகவத்கீதை இரண்டாமத்யாயம்—முப்பத்தோராம் சுலோகத்தின் பாஷ்யத்திலும் (அவ்விடத்துத்) தாத்பர்ய சந்த்ரிகையிலும் ஸாதித்திருப்பவைகளைக் காணாதவனல்லேன். அர்ஜுநன் யுத்தத்தில் கொலை செய்ய நேருவதைப் பாபமாக நினைத்துப் பேசினபோது அவனுடைய மதத்தைக் கண்டிப்பதற்காகக் கண்ணபிரான் க்ஷத்ரியனுக்கு யுத்தம் அதர்மமன்று, தருமமேயாகும் என்று உபதேசிக்கிறான். அங்கு பாஷ்யகாரர் "அக்நீஷோமீயாதிவத்" என்றும் 'அக்நீஷோமீயாதிஷு ந ஹிம்ஸா பசோ" இத்யாதிகளும் அருளிச்செய்கிறார். மருத்துவர்கள் செய்யும் சஸ்த்ரசிகித்ஸையையும் எடுத்துக் காட்டுகிறார்; இங்கு தாத்பர்ய சந்திரிகையில் "உக்தஞ்ச மநுநா—* தஸ்மாத் யஜ்ஞேவத: அவத: * இதி" என்று இப்போதடியேனெடுத்துக் கொண்டு விமர்சிக்கும் சுலோகத்தின் கடைப்பகுதியையும் உதாஹரித்துள்ளார் ஸ்வாமி. உதாஹரித்தது மட்டுமின்றிக்கே ஸாரமாக ஒரு ஸ்ரீ ஸூக்

http://acharya.org

தியை யருளியுள்ளார். அதாவது "வத இதி பாமரத்ருஷ்ட்யா அநுவாத:, அவத இதி தத்வகதநம்" என்று. இதன் கருத்து என்னவென்றால், 'வதம் என்று சொல்லவே கூடாது; பாமரர்கள் இதைப் பாபமாக நினைக்கிறபடியால் அநுவாதமாத்ரமிது; உண்மையில் வதமன்று' என்பதாம். யஜ்ஞத்தில் பசுவதம் செய்ய வேணுமென்கிற கொள்கையுடையார்க்குத் தெரியாத ப்ரமாணங்களையும் அதிகமாக அடியேன் தெரிந்துகொண்டிருக்கிறேனென்பது ஆத்மஸ்துதியன்று, உண்மையுரை. க்ஷத்ரியர்களுக்கு யுத்தம் போலே ப்ராஹ்மணர்களுக்கு யஜ்ஞம். இதில் ஸந்தேஹமில்லை. நமக்கு ப்ராஹ்மண்யத்திற்காட்டிலும் பரமைகாந்தித்வம் மிகச் சிறந்தது. அந்த பாரமைகாந்த்யத்திற்கு பசுவதம் பண்ணிச் செய்ய வேண்டியதான யஜ்ஞம் அநர்ஹம். "வதம் பாபமன்றே. அதைச் செய்தாலென்ன?" என்கிற கேள்வியையே மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருப்பீர்கள்; மநுஸ்ம்ருதியில் இப்போது நாம் விமர்சிக்கிற சுலோகம் [5-39.] இதற்குமுன்பே இருபத்தாறும் சுலோகத்தில் ஏததுக்தம் த்விஜாதீநாம் பக்ஷ்யாபக்ஷ்யம் அசேஷத:' மாம்ஸஸ்யாத: ப்ரவக்ஷ்யாமி விதிம் பக்ஷணவர்ஜநே"— இந்த ச்லோகத்தில் "மாம்ஸஸ்ய பக்ஷணவர்ஜநே விதிம் வக்ஷ்யாமி" என்றதற்கு 'மாம்ஸபக்ஷணஸ்ய வர்ஜநே' என்று அர்த்தம் செய்யப்படவில்லை: "பக்ஷணே வர்ஜநேச" என்று விவரிக்கிறார் குல்லூகபட்டர். உண்மையில் இதுதான் இங்கு அர்த்தம். மேலே மாம்ஸம் பக்ஷிக்கத்தக்கது, பக்ஷிக்க வேண்டியது என்பதையும் மநுமஹர்ஷி கூறியுள்ளார்; உடனே "ப்ரோக்ஷிதம் பக்ஷயேந் மாம்ஸம்" என்று ஆரம்பிக்கிறார். இந்த "யஜ்ஞஹூதபசுமாம்ஸபக்ஷணம் இதம் யஜ்ஞாங்கம்விதீயதே" என்கிறார் வ்யாக்க்யாதா. சிலர் சொல்லுவதென்னவென்றால் 'மாம்ஸபக்ஷணம் கலிவர்ஜ்யத்தில் சேர்ந்துவிட்டபடியால் அதைபக்ஷிக்கக் கூடாது' என்று. இங்ஙனே பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்களை அடியேன் கேட்பது ஒன்றே; "கலியிலும் மாம்ஸமுண்ணலாம்" என்று சாஸ்த்ரம் சொல்லிவிட்டால் பரமைகாந்திகள் உண்பர்களா? மிகவும் அருவருக்கக் கூடிய கார்யமன்றோ இது. *தேவரேண ஸுதோத்பத்தியை கலியிலும் உபாதேயமாக சாஸ்த்ரம் விதித்து விட்டால் சிஷ்டர்கள் அதை யநுஷ்டிப்பர்களோ? வர்ஜ்யமென்று தெரிந்தும் வர்ஜியாதவர்கள் எத்தனை பேரில்லை. 'பசுவதத்தில் எங்களுக்கு அருவருப்பில்லை' என்னுமவர்கள் அதை தாராளமாகச் செய்யலாமென்று அடியேன் பலகால் எழுதியிருக்கிறேனே. *அக்ரியாவதநர்த்தாய தத்து கர்ம ஸமாசரேத்* என்று ரஹஸ்யத்ரய ஸாரத்தில் கையாளப்பட்ட வசனத்தைக் கண்ணெடுத்துப் பார்ப்பாரில்லையே. அகரணே ப்ரத்யவாயம் காட்டித் தீரவேணுமே. அதை தேடிப் பிடித்துக் காட்டுகிறவரையில் *பசுமாரண கர்மதாருணர்களின் வாதம் செல்லாது; வதம் செல்லும். ஆப்தரான ஒரு வித்வான் அடியேனுக்கெழுதினர்—"யஜ்ஞம் ஸாமாந்யமாக எல்லாரும் செய்ய முடியாது; அதற்கு த்ரவ்யஸம்பத்து வேண்டும்; அதுள்ளவர்கள் செய்யாதிருக்கலாமா?" என்று. இதற்கு ஒரே வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன். கீதையில் மூன்றாமத்யாயத்தில் (8) *நியதம் குரு கர்ம த்வம்* என்கிற சுலோகத்தின் பாஷ்யத்திலே "ந்யாயார்ஜிததநேந மஹாயஜ்ஞாதிகம் க்ருத்வா தச்சிஷ்டாசநேநைவ சரீரதாரணம் கார்யம்" என்கிறார் ஸ்வாமி. தனிகர்கள் தனத்தைக்கொண்டு பசுவதம்பண்ணி மாம்ஸபக்ஷணம் பண்ணி தேஹதாரணம் பண்ணவேணுமென்று இதற்குப்

http://acharya.org

பொருள்? மேலே ஆறுமத்யாயத்தில் 37. *அநதீத்ய த்விஜோ வேதாந் அநுத்பாத்ய ததா ஸுதாந், அநிஷ்ட்வாசைவ யஜ்ஞைச்ச மோக்ஷமிச்சந் வ்ரஜத்யத:* என்னுமிந்த சுலோகத்தை ஆழ்ந்து விமர்சிக்க வேண்டா. மேலெழ விமர்சித்தாலும் போதும். வேத மோதாவிடில் நரகம் புகுவன், யஜ்ஞம் செய்யாவிடில் நரகம் புகுவன் என்றது ஸரி. இடையில் 'மக்கள் பெறுவிடில் நரகம் புகுவன்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே. இது யாரைப் பற்றிச் சொன்னது? என்று விமர்சிக்கவேண்டும். பகவத் கீதை 8-3ல் பாஷ்யத்தில் யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி என்று மேலுள்ள வசனத்தையும் எடுத்துக்காட்டி, "ச்ருதிஸித்தோ யோஷித்ஸம்பந்த:...உத்வேஜநீய தயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி: ஜ்ஞாதவ்யம்" என்று ஸ்வாமி ஸாதித்திருப்பதை விச்வஸித்து யோஷித் ஸம்பந்தத்தை வெறுத்தவர்களுக்குமா நரகம் வரும். 'ஆமாம், வரத்தான்வரும்' என்னில், அவர்களோடு கூடவே இவர்களும் நரகம் போகட்டுமே. எவர்களும்? பசுவதத்தைக் கொண்ட யாகத்தைச் செய்யாதவர்களும். ....*

தார்மிகர்களைப் பற்றி

56. நாலாமத்யாயத்திலே ச்லோ. 171 முதல் நான்கு சுலோகங்கள் தார்மிகர்கள் கண்டபாடம் செய்து வைத்துக் கொள்ளத்தக்கவை. அதர்மம் செய்பவர்கள் தனிகர்களாயிருப்பதையும்; தருமம் செய்பவர்கள் அகிஞ்சனர்களாயிருப்பதையும் காணும்போது தார்மிகர்களுக்கு அதர்மருசி ஏற்படககூடும்; தருமம் செய்து தரித்ரர்களாயிராமல் அதர்மம் செய்து தனிகர்களாயிருப்போமென்கிற எண்ணமுண்டாகி அதர்மப்ரவ்ருத்தி விளையக்கூடுமன்றோ. அன்னவர்களைக் குறித்துச் சொல்லப்படுகிறது. ந ஸீதந்நபி தர்மேண மந: அதர்மே நிவேசயேத், அதார்மிகாணாம் பாபாநாம் ஆசு பச்யந் விபர்யயம். தர்மணே ஸீதந்நபி மந: அதர்மே நிவேசயேத் — தருமம் செய்வதனாலேதான் நமக்குக் கஷ்டங்களுண்டாகின்றன வென்று நினைக்க நேர்ந்தாலுங்கூட அதர்மாசரணத்தில் நெஞ்சைச் செலுத்தக் கூடாது. ஏனென்றால், அதர்மஞ் செய்யும் பாபிகள் வாழ்ந்தே நிற்காமல் அதற்கு மாறுபாடான நிலைமையையும் அடையக் காண்கையாலே. அடுத்த 172வது சுலோகத்தினால் அதர்மம் பலன் காட்டியே திருமென்று வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. நாதர்மச் சரிதோ லோகே ஸத்ய: பலதி கௌரிவ, சநைராவர்த்தமாநஸ் து கர்த்துர் மூலாநி க்ருந்ததி — அதர்மம் செய்யப்பட்டால் அது உடனே அனர்த்தமாகிற பலனைக் கொடுத்துவிடுமென்பதில்லை. எதற்கும் பரிபாகதசை யென்று ஒன்றுண்டு; அப்போது ஸமூலகாசம் பண்ணியே தீரும். 173. யதி நாத்மநி.... இத்யாதி. அதர்மமான ஸாக்ஷாத்து கர்த்தாவினிடத்திலும் பலனைக் காட்டும்; இல்லையேல் புத்திரர்களிடத்திலோ பௌத்ரர்களிடத்திலோ ப்ரபௌத்ரர்களிடத்திலோ பலித்தே தீரும். செய்த அதர்மம் எந்த விதத்திலும் நிஷ்ப்பலமாகாது. அடுத்த சுலோகம் 174. மிக முக்கியமானது. அதர்மணே ஏததே தாவத் ததோ பத்ராணி பச்யதி, ததஸ் ஸபத்நாந் ஜயதி ஸமூலஸ்து விநச்யதி. இந்த சுலோகம் அதர்மம் செய்து பழுத்தவன் ஸ்வாநுபவத்தைத் தெரிவிக்கும் சுலோகம் போலவே காண்கிறது. அதர்மம் செய்தவன் தற்காலத்தில் ஸம்ருத்தியடைகிறான்; மாடமாளிகைகள் கட்டிக்கொள்வதும் யானை குதிரைகள் ஏறப்பெறுவதுமான செல்வங்களையும் அநுபவிக்கிறான். சத்ருக்

http://acharya.org

களையும் வெல்லுகிறான். காளடைவில் பரிபாகதசை வந்தவாறே ஸமூலநாசத்தை யடைகிறான். ஆகவே தருமமிஷ்டையே க்ஷேமங்கரமென்றதாயிற்று. ....

57, 58. எட்டாமத்யாயத்தில் ச்லோ. 92. யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்த வைஷ ஹ்ருதி ஸ்தித:. தேநசேத் அவிவாதஸ் தே மா கங்காம் மா குருந் கம:. இந்த ச்லோகம் ஆழ்வார்கள் பாசுரம் போலுள்ளது. பெரும்பாலும் ப்ரதமபுருஷ நிர்தேசமாகவே செல்லுகிற இந்த தருமசாஸ்த்ரத்தில் இங்கு ஒரு மூன்று ச்லோகங்கள் மத்யம புருஷநிர்தேசமாக நிகழ்கின்றன. ஆழ்வார்கள் உபதேசம் செய்தருளும் வகை காண்கிறது. ஆகவேதான் இந்த சுலோகம் பகவத்விஷயத்தில் விசேஷித்துக் கையாளப்படுகிறது. எம்பெருமானோடு த்வேஷம் முற்றி நிற்கும் நிலை நீங்கி அத்வேஷ நிலையென்று ஒன்று உண்டாகும். அது பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளுக்கு முதற்படியான நிலைமையாகையாலே அதையே பக்தி தசையாகவுங் கொள்ளுவர்கள். எம்பெருமானோடு விவாதப்படுகிற நிலை நீங்குமளவே போதுமானது. எம்பெருமான் கண்ணுக்குப் புலப்பட்டாலன்றோ அவனோடு விவாதப்படமுடியும்; கட்கிலியான அவனோடு விவாத ப்ரஸக்தியே யில்லையே யென்று சிலர் நினைக்கவும் கேட்கவும் கூடும். அவனோடு தனக்குண்டான உறவை ஒப்புக்கொள்ளாமலிருப்பதுதான் விவாதமெனப்படுவது. 'த்வம் மே' என்று பகவான் சொல்லுவதாகவும் 'அஹம் மே' என்று சேதநன் சொல்லுவதாகவும் வைத்து பட்டர் அருளிச்செய்திருப்பது சமத்காரோக்தி விந்யாஸம். பகவச்சேஷத்வத்திற்கு இசையாமலிருப்பதுதான் பகவானோடு விவாதப்படுகையாவது. அது தீராதவளவில் [பகவச்சேஷத்வத்திற்கு இசையாதவளவில்]கங்கைநீர் குடைந்தாடப்போவதும் குரு க்ஷேத்ர யாத்திரை செய்யப்போவதும் வினையாகும். சேஷத்வருசி யுண்டாகிவிட்டதாகில் க்ஷேத்ரதீர்த்த யாத்திரையே வேண்டா. அது உண்டாகாதவளவில் இந்த யாத்திரை நிஷ்ப்பலமாகையாலே ஸர்வாத்மநா யாத்திரை போகவேண்டா வென்கிறது. இதற்கு யாத்ரா நிஷேதத்தில் தாத்பர்யமன்று; பகவானோடுள்ள உறவை அறியவேண்டியது முக்கியம் என்கையில் தாத்பர்யமத்தனை. இந்த சலோகத்தைத் திருவாய்மொழியில் * வீடுமின் முற்றத்தில்* உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்மினே* என்றவிடத்து நம்பிள்ளை அற்புதமாக வியாக்கியானித்தருளுகிறார்; அந்த ஸ்ரீ ஸூக்திகளையே இங்கெடுத்துக் காட்டுகிறேன் :—

"[யம:] ப்ராதேசிகமான நியமனத்தை யுடையவனையன்று சொல்லுகிறது; *ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு:* என்று அவன் தன்னையும் நியமிக்குமவனாயிற்று இவன். [வைவஸ்வத:] விவஸ்வானுடைய குலத்திலே பிறந்தவனென்னுதல்; ஆதித்யாந்த: அவஸ்திதனென்னுதல். [ராஜா] அவனைப்போலே 'தஹ பச' என்கை யன்றிக்கே எல்லார்க்கும் இனியனாயிருக்குமவனாயிற்று இவன். *ரஞ்ஜயதீதி ராஜா.* [ய:] அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளில் ப்ரஸித்தி. [தவைஷ ஹ்ருதி ஸ்தித:] அவன் எங்குற்றானென்னா; கண்டிலையோ? உன்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றிருக்கிறான். ஆனால் செய்யவேண்டுவதென்னென்னில், [தேந சேத் அவிவாதஸ் தே] உடையவனாயிருக்கிறவ

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

னேடே உனக்கு அவிவாதமுண்டாகில், 'இத்தால் பேறு என்?' என்பாயோ? [மா கங்காம் மா குருந் கம] ஒரு தீர்த்தம் தேடிப்போதல் புண்ய க்ஷேத்ரம் தேடிப் போதல் செய்யவேண்டா. அஹங்கார மமகாரங்கள் கிடக்க ப்ராயச்சித்தம் பண்ணுகையாவது நிஷித்தத்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுகூட்டினவோபாதியிறே: உடையவனுக்கும் உடைமைக்கும் தக்கபடியிறே ப்ராயச்சித்தமும். உடையவன் ஸர்வேச்வரன். த்ரவ்யங்களில் தலையான ஆத்மத்ரவ்யத்தையிறே அபஹரித்தது. த்ரவ்யத்தைப் பொகட்டு ப்ராயச்சித்தம் பண்ணவேணுமே. பொகடுகிற த்ரவ்யம் தானாகையாலே ப்ராயச்சித்தம் பண்ணுகைக்கு வேறு அதிகாரியுமில்லையே. ஆகையாலே நீங்களும் உடையவன் பக்கலிலே விடுசெய்ம்மின்." இவை ஈடு முப்பத்தாறுயிரப்படி ஸ்ரீ ஸூக்திகள். .... *

Released by Maran's Dog ,Toronto, Canada

ப்ராஹ்மண வதம் பற்றி

59. எட்டாவதத்யாயத்திலேயே, தவறு செய்த பிராமணனை தண்டிக்கவேண்டிய விதம் கூறப்படுகிறது. ச்லோ. 379. பிராமணனுக்கு மரண தண்டனை விதிக்கவே கூடாது. தலையை மொட்டையடிப்பதுதான் பிராமணனுக்கு வதபர்யாயமான தண்டனையாகும். பிராமணன் தவிர மற்ற ஜாதியாருக்கே வததண்டனை விதிக்கலாம். பிராமணன் எவ்விதமான குற்றம் செய்திருந்தாலும் அவனுக்கு வததண்டம் விதிக்கவே கூடாது. தீவ்ரமான பாபம் செய்திருந்தால் பிராமணனை ராஷ்ட்ரத்தில் நின்றும் வெளியே துரத்தி விடலாம். அப்போதும் அவனுடைய ஜீவனத்திற்குப் போதுமான பொருளை கையில் கொடுத்தனுப்பவேணும். சரீரத்தில் எவ்விதமான க்ஷதியையும் உண்டுபண்ணக்கூடாது. ப்ராஹ்மணவதத்திற்கு மேற்பட்ட அதர்மமே உலகத்தில் கிடையாது. ஆகையினால் அரசன் ப்ராஹ்மணவதத்தை நெஞ்சினாலும் நினைக்கலாகாது. [இதற்கான வசனங்களிவை.] *மௌண்ட்யம் ப்ராணாந்திகோ தண்டோ ப்ராஹ்மணஸ்ய விதீயதே,.... ந ஜாது ப்ராஹ்மணம் ஹந்யாத ஸர்வபாபேஷ்வபி ஸ்திதம். ராஷ்ட்ராத் ஏநம் பஹி குர்யாத் ஸமக்ரதநம் அக்ஷதம். ந ப்ராஹ்மணவதாத் பூயாந் அதர்மோ வித்யதே புவி. தஸ்மாதஸ்ய வதம் ராஜா மநஸாபி ந சிந்தயேத். .... *

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்த்ரீகளைப் பற்றி

60. ஒன்பதாமத்யாயத்தில் ஸ்த்ரீபுருஷ தருமங்களைச் சொல்லத் தொடங்கி ஸ்த்ரீகளுக்கு ஒருபோதும் ஸ்வாதந்த்ரியம் கூடாதென்று வலிதாக மறுக்கிறார். ச்லோ. 3. *பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே. ரக்ஷந்தி ஸ்தாவிரே புத்ராঃ ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி.* இந்த ச்லோகம் நீதி சாஸ்த்ரஸங்க்ரஹத்தில் ஏறியிருந்தாலும் இதற்கு ஆகரம் மநுஸ்ம்ருதியேயாகும். ஸ்த்ரீகளை இளம்பிராயத்தில் தந்தை காக்கிறார்; யௌவனத்தில் கணவன் காக்கிறான், முதுமையில் புத்திரர்கள் காப்பர். ஆக, ஸ்த்ரீகள் தங்களைக் காத்துக்கொள்வதில் ஒருபோதும் ஸ்வாதந்த்ர்யமுடையரல்லர் என்பது ச்லோகார்த்தம். இதன்மேல் கேள்வி பிறக்கக்கூடும். இளமையில் வைதவ்யமடைந்து பதியுமின்றிக்கே புத்திரனுமின்றிக்கே யொழிந்தவர்களைக் காப்பவர் யார்? என்று. இதற்கு வ்யாக்க்யாதா [குல்லூகபட்டர்] ஸமாதான

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

மெழுதியுள்ளார்—தந்தை, தந்தையுடன் பிறந்தவர் முதலானோர் காக்கும்படியைக் காணுகின்றோமென்று. .... *

தநவிபாகம் பற்றி

61. மாதா பிதாக்கள் ஜீவித்திருக்கும்போது புத்திரர்கள் பங்கு பிரித்துக் கொள்ளக் கூடாதென்றும், அவர்கள் முடிந்தபிறகு கநிஷ்ட ப்ராதாக்கள் ஜ்யேஷ்ட ப்ராதாவையே அநுவர்த்தித்து வாழ வேண்டுமென்றும் நியமிக்கிறார். (9-104.) *ஊர்த்வம் பிதுச் ச மாதுச் ச ஸமேத்ய ப்ராதரஸ் ஸமம். பஜேரந் பைத்ருகம் ரிக்தம் அநீசாஸ் தே ஹி ஜீவதோ:* மாதா பிதாக்கள் ஜீவித்திருக்கும்வரையில் அவர்களது தனத்தில் புத்திரர்களுக்கு ஸ்வாமித்வம் கிடையாதாகையாலே அத் தந்தைதாயருடைய வாழ்நாள் முடிந்தபிறகே பங்கு பிரித்துக் கொள்ளவேண்டியது. (இதற்கு வியாக்க்யாதா எழுதுகிறார்)— "விபாகஞ் சேத் பிதா குர்யாத் இச்சயா விபஜேத் ஸுதாந் [தகப்பனார் இஷ்டப்பட்டால் புத்ரர்களுக்குத் தாமே பங்கு பிரிக்கலாம்] என்று யாஜ்ஞவல்க்யர் சொல்லியிருக்கையாலே தகப்பனார் இஷ்டப்படாதவளவில் இந்த சாஸ்த்ரம் செல்லுமென்கிறார். அடுத்த சுலோகம் 105. ஜ்யேஷ்ட ஏவ து க்ருஹ்ணீயாத் பித்ர்யம் தநம் அசேஷத,, சேஷாஸ் தம உபஜீவேயு: யதைவ பிதரம் ததா. பிதாவின் தனத்தையெல்லாம் மூத்த புதல்வனே அடையக்கடவன்; மற்ற ப்ராதாக்கள் தமையனையே தந்தையாகக் கொண்டு அவன்கீழ் வாழக் கடவர்கள்; மேலே ச்லோ. 108. பிதேவ பாலயேத் புத்ராந் ஜ்யேஷ்டோ ப்ராத்ருந் யவீயஸ: புத்ரவச் சாபி வர்த்தேரந் ஜ்யேஷ்டே ப்ராதரி தர்மத:. பிதா புத்திரர்களைக் காப்பதுபோல மூத்தவன் தம்பிமார்களைக் காக்கக் கடவன். தம்பிகளும் பிதாவினிடத்திற்போலவே மூத்தவனிடத்தில் வர்த்திக்கக் கடவர்கள். இதெல்லாம் ஜ்யேஷ்ட ப்ராதா யோக்யனாயிருக்குமளவில் என்று நற்கொள்கை. ....

கௌணகல்பம் பற்றி

62. அனுஷ்டானங்களில் முக்ய கல்பமென்றும் கௌணகல்பமென்றும் இரண்டுண்டு. கௌணகல்பத்தை ஏதோ ஆபத்காலத்தில் கொள்ளலாமேயல்லது சக்தியும் ஸௌகர்யமுமிருக்குங் காலங்களில் முக்ய கல்பத்தைத்தான் கொள்ள வேண்டும்; கௌணகல்பம் கேவலம் ஆபத்கால மாத்ரவிஷயம். 11-28. *ஆபத் கல்பேந யோ தர்மம் குருதே அநாபதி த்விஜ:, ஸ நாப்நோதி பலம் தஸ்ய பரத்ரேதி விசாரிதம்.* கௌணகல்பத்திற்கு ஆபத்கல்பமென்று பெயர். அதை ஆபத் காலத்தில் மட்டுமே அனுஷ்டிக்கலாம். ஆபத்தொன்றுமில்லாதவளவில் ப்ராஹ்மணன் கௌணகல்பத்தையனுஷ்டித்தானாகில் அது அனுஷ்டியாததோடொக்குமத்தனை. [இந்த விதியைப் பரிபாலனம் செய்பவர்கள் மிகச் சிலரே யாவர். ஆசமன ப்ராணயாமாதிகளையும் தினப்படி பெரும்பாலும் கௌணகல்பமாகவேயன்றோ அனுஷ்டித்து வருகிறோம்.]

பரிபவ ப்ரதிக்ஷேபம் பற்றி

63. (11-34.) *க்ஷத்ரியோ பாஹுவீர்யேண தரேத் ஆபதமாத்மந:. தநேந வைச்ய சூத்ரௌ து ஜபஹோமைர் த்விஜோத்தம:.* நான்கு ஜாதியார்க்கும் சத்ருக்

கள் மூலமாகப் பரிபவங்கள் நேருவது ஸம்பாவிதம். அதைப் போக்கிக் கொள்ளும் உபாயம் ஜாதி பேதத்தால் வெவ்வேறு பட்டிருக்குமென்கிறது. க்ஷத்ரியன் தன்னுடைய பராக்ரமத்தைக் கொண்டு ப்ரதிக்ரியை பண்ணக்கடவன். வைச்யனும் சதூர்த்தனும் தனத்தைக் கொண்டு வெல்லக்கடவன். ப்ராஹ்மணோத்தமனோவென்னில், கேவலம் ஜபம் ஹோமம் முதலிய வைதிககருமங்களைக் கொண்டே சத்ருபக்ஷ ப்ரதிக்ஷேபம் பண்ண வேண்டியவன் [இத்தால் தெரிவிக்கப்படுவதென்ன? பிராமணன் தன்னிடத்தில் பராக்ரமமிருந்தாலுங்கூட அதை உபயோகிக்கக் கடவனல்லன்; தனமிருந்தாலும் அதை ப்ராப்த விஷயங்களில் தவிர இத்தகைய காரியங்களில் துர்விநியோகம் செய்யக்கடவனல்லன். ஓதியுணர்ந்திருக்க வேண்டியதையே கடமையாகவுடையவனாதலால் ஜபஹோமாதிகளைக்கொண்டே ஜய சீலனாயிருக்கக் கடவனென்பதாம். * திக் பலம் க்ஷத்ரிய பலம் ப்ரஹ்மதேஜோ பலம் பலம் * என்ற புகழ்ச்சியைப் பரிபாலித்துக் கொள்ளக் கடவோம்.] .... *

த்ரிதண்டிகளைப் பற்றி

64. ஸந்யாஸிகளை த்ரிதண்டிகளென்கிறோம். முக்கோல்களே த்ரிதண்டமெனப்படுகின்றன. தண்டமென்பதற்குக் கோல் என்கிற பொருள் தவிர, தண்டித்தல் [அடக்குதல்] என்கிற பொருளும் ப்ரஸித்தமாதலால் மூன்று வகையான தண்டங்களைக் கொண்டவர்களே த்ரிதண்டிகளெனத் தகுவர்களென்கிறார் மனு மஹர்ஷி. 12-10. வாக்தண்டம், மனோதண்டம், காயதண்டம் என்னுமிவை மூன்று தண்டங்களாம். வாக்கை யடக்குதல், மனத்தை யடக்குதல், சரீரத்தை யடக்குதல் ஆகிய இம்மூன்று அடக்கங்களும் மூன்று தண்டங்கள். இவற்றை யுடையவர் த்ரிதண்டி. (இதன் விவரணம் வருமாறு) பொய் சொல்லுவது, பழமொழிகளைச் சொல்லுவது, பகவத் பாகவத ஆசார்ய நிந்தைகளைப் பொழிவது, தன்னைத்தானே ப்ரசம்ஸித்துக்கொள்வது முதலான வாக் தோஷங்களில்லாமை வாக்தண்டமெனப்படும். (வாக்கினாலே தண்டித்தவென்று பொருளன்று; வாக்கை தண்டித்து அடக்கி வைத்துக் கொள்ளுதலென்று பொருள்) மனோ தண்டமாவது—அப்ராப்த விஷயங்களைச் சிந்தனை செய்யாதபடி மனத்தை நிக்ரஹித்தல். காய தாண்டமாவது—கரசரணாதி யவயவங்களை அப்ராப்த விஷயங்களில் போகவொட்டாதபடி தடுக்கை. பெரிய திருமொழியில் 1-6-7. நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும் என்றருளிச் செய்தபடியே மனமொழிமெய்களால் அநீதியொன்றும் நிகழாதபடி ஜாகருகர்களாய் வர்த்திப்பவர்களே த்ரிதாண்டிகளென்றதாயிற்று. இங்கு வியாக்கியானத்தில் குல்லூகபட்டர் "ந து தண்ட த்ரயதாரண மாத்ரேண த்ரிதண்டீதி உச்யதே" என்றெழுதி யிருக்கையாலே அவர் ஏகதண்டிகளை செஞ்சிலெண்ணுது த்ரிதண்டிகளையே சிந்தனை செய்பவரென்று புலப்படுகின்றது. சததூஷணி 64-ஆம் வாதத்தில் இது வ்யக்தம். .... *

பரம புருஷனைப் பற்றி

65. (12-122.) பரமபுருஷனையே அனவரதமும் சிந்திக்க வேணுமென்று மநுமஹர்ஷி தம்முடைய ஸ்ம்ருதியைத் தலைக்கட்டுகிறார். ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்

http://acharya.org

அணீயாம்ஸம் அணோரபி. ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத் தம் புருஷோத்தமம்.* (புருஷம்பரம் என்றும் பாடமுண்டு.) இதில் நான்கு விசேஷணங்கள் பரமபுருஷனைச் சிறப்பித்துக் கூறுவன. ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்—ஸர்வநியந்தா என்றபடி. கீதையில் *ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம போஹநஞ்ச * என்றதை நினைப்பது. அணீயாம்ஸம் அணோரபி—* அணோரணீயாந் மஹதோ மஹீயாந் என்கிறபடியே அணுபதார்த்தங்களிலும் அந்த: ப்ரவேச ஸௌகர்யார்த்தமாக மிகவும் அணுவாயிருக்குமவன். [ருக்மாபம்] ச்சாந்தோக்யத்தில் அந்தராதித்ய வித்யையிலே 'ஹிரண்மய:' என்றும் 'ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:' என்றும் * சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனியொளி யொவ்வாது * (திருவாய் மொழி 3-1-2.) என்றும் சொல்லுகிறபடியே பொன்மேனியன். "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்கிறபடியே ஹிரண்யவர்ணையான பிராட்டியின் தேஜோவ்யாப்தியாலே பொன்மேனி படைத்தவனென்னவுமாம். [ஸ்வப்நதிகம்யம்] ஸ்வப்நமுண்டாவது எப்போது? செவி வாய் கண் மூக்கு முதலான ஸகலேந்திரியங்களினுடையவும் வியாபாரம் உபரதமானவாறே கேவலம் மநோ ஜந்யமானது கனவு. அப்படியே பரமபுருஷனும் கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவிகளும் ஒய்ந்து, * என்றேனும் கட்கண்ணால் காணாத வவ்வுருவை நெஞ்சென்னு முட்கண்ணேல் காணுமுணர்ந்து (பெரிய திருவந்தாதி.) என்கிறபடியே விசுத்தமநஸா க்ராஹ்யனாயிருப்பவன். இப்படிப்பட்ட பரமபுருஷனைச் சிந்தித்து வாழ்வோமாக. இந்த ஸ்ம்ருதியில் உபக்ரமத்தில் ச்லோ. 10ல் * ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயணஸ் ஸ்ம்ருத: * என்று நாராயணநாம நிர்வசனம் செய்திருக்கையாலே இம்முனிவர்க்குப் பரமபுருஷத்வேந விவக்ஷிதன் நாராயணனே யென்றறிவது.

[உபஸம்ஹாரவிஜ்ஞாபனம் ;— இந்த ஸ்ம்ருதி பன்னிரண்டு அத்யாயங்களே கொண்டதாயினும் அபரிமிதார்த்த புஷ்கலமென்னத்தட்டில்லை.

பகவத்கீதையின் அர்த்த விசேஷங்கள்

பதினெட்டு அத்யாயமாக அமைந்த கீதையில்
பதினெட்டு ஸாரார்த்தங்கள் கேண்மின்.

66. கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதனாதியரிடம் தூதுசென்று ஸமாதான வழிகள் பல பேசியும் "வீரபோக்தா வஸுந்தரா" ஆகையாலே போர்க்களத்தில் வீரத்தனத்தைக் காட்டி வெற்றி பெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்கள் என்று த்ருதராஷ்டிர வருப்பினர் கூற, பிறகு யுத்தமே நடக்கக் கடவதாக முடிவு பெற்றது. இருவகுப்பினரும் படைத்துணை வேண்டி கண்ணபிரான் பக்கலிலே

http://acharya.org

வந்தார்கள். துரியோதனன் கண்ணபிரானைத் துணையாக விரும்பவில்லை. "க்ருஷ்ணாச்ரதா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்னும் புகழ் பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனாக நிற்க வேண்டிற்று. பக்த பாதந்திரனான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா தன்னுடைய பரமபக்தனான அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனாயிருந்து கொண்டு குருக்ஷேத்திரமென்னுமிடத்தில் வந்து போர்புரிய அணிவகுத்து நின்றனன். அப்பொழுது அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி 'பெருமானே! இந்தப் போரில் யான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்தி வாய்ந்த துரியோதனனுக்குத் துணைபுரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்களென்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இரண்டு சேனைகளினிடையில் நிறுத்த வேணும்' என்று கூற, அப்படியே கண்ணபிரான் இரண்டு படைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுனா! இவ்விரு படைகளிலுமிருக்கின்ற போர் வீரர்களைப் பாராய்' என்றனன். பார்த்த அர்ஜுனன் போர் புரியமாட்டேனென்றுனென்பது தெரிந்ததே. அது நிற்க. 'தேரைக்கொண்டு நிறுத்து' என்று அர்ஜுனன் கட்டளையிட, உடனே அங்ஙனம் செய்த கண்ணபிரான் தன்னுடைய ஆச்ரித பாரதந்த்ரியத்தைக் காட்டிக்கொண்டானென்பது கண்ணனுடைய திருக்குணங்களில் ஸாரமாக அறியத்தக்கது. மேலே தன்னுடைய பரத்வத்தைப் பலவாறு பேசப் போகிறான்; அதனிலும் சிறப்பாக ஸௌலப்யத்தை மூந்துற முன்னம் அநுஷ்டான முகத்தினால் காட்டியருளினானென்பது விசேஷம். .... *

67. இரண்டாமத்யாயத்தில் பதினோராவது ச்லோகமாகிய "அசோச்யாந் அந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே, கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:" என்கிற ச்லோகந்தான் உபதேசத்தின் உபக்ரமமாக வுள்ளது. இதற்கு முன்னே அர்ஜுனன் வாயில் "சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்று வெளிவந்திருக்கிறது. 'கண்ணா! எனக்கு தர்மாதர்மங்கள் தெரியவில்லை; எனக்கு ச்ரேயஸ்ஸென்று நீ அறுதியிட்ட பொருளை எனக்கு உரைப்பாயாக. உனக்கு நான் மித்திரன் மாத்திரமல்லேன், சிஷ்யனுமாகிறேன்; இதோ உன் திருவடிகளில் வீழ்ந்து யாசிக்கிறேன் காண்; எனக்கு ஹிதா ஹிதங்களை யுபதேசிப்பாயாக' என்று அர்ஜுனன் சொல்லும்படி செய்து விட்டான் கண்ணபிரான். இந்த ப்ரார்த்தனையைப் பெறாமல் சிறந்த சாஸ்த்ரத்தை யுபதேசிப்பது தகுதியன்றாதலாலும், நிர்வேத மில்லாதவனது வாயில் இந்த ப்ரார்த்தனை வெளிவாராதாகையாலும் இத்தனையும் கண்ணபிரான் செய்துவைத்த வொரு நாடகம் என்பது அறியத்தக்கது. ஆகவே அர்ஜுனனுக்குண்டான வ்யாமோஹம் அவன்றன்னுடைய ஸ்வபாவத்தாலுண்டானதன்று. மாயப்போர்த் தேர்ப்பாகனுடைய மாய மந்திரம் செய்வித்த செயல் என்றதாயிற்று, இல்லையாகில் கீதாசாஸ்த்ரம் அவதரிக்க அவகாசமேயிராதன்றோ. .... *

68, (3-22) * "ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந, நாநவாப்த மவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி" என்பது. இதில் பகவான் தானும் கர்மாநுஷ்டானத்தில் ஊன்றி யிருப்பதாக வற்புறுத்திச் சொல்லப்பட்டுள்ளது. க்ருஷ்ணாவதாரத்திற்கு முந்தின அவதாரமான ஸ்ரீராமாவதாரத்தில் இது தன்னை

http://acharya.org

ஸுஸ்பஷ்டமாகக் காணலாம். விச்வாமித்ர முனிவன் தசரத மன்னனிடம் வந்து *அஹம் வேத்மி மஹாத்மாநம்* இத்யாதிகளைச் சொல்லி ஸ்ரீ ராமபிரானைக்கொண்டு சென்றான். 'ஊந ஷோடச வர்ஷோ மே ராமோ ராஜீவ லோசந:' என்று சக்ரவர்த்தி சொன்னபடி இராமன் செந்தாமரைக் கண்ணனுகையாலே ஸூர்யன் அஸ்தமித்தவாறே தாமரை முகுளிதமாகுங் கணக்கிலே இராமனும் கண் மூடினான்: பிறகு ஸுப்ரபாத காலத்திலே முனிவன் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே" என்று சொல்லித் துயிலுணர்த்துகிறான். "இராமா எழுந்திரு! நாம் சீக்கிரமாக ஆச்ரமம் சென்று சேர்ந்து யாகம் தொடங்கவேணும்' என்று சொல்ல வேண்டியிருக்க, அங்ஙனே சொல்லாதே "உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்" என்றான் முனிவன். ப்ராதஸ் ஸந்த்யாநுஷ்டானம் வழுவாமற் செய்ய வேண்டுமே, அதற்காக எழுந்திராய் என்று சொன்னவிதனால் எம்பெருமானுடைய அவதாரம் முக்கியமாக தர்மாநுஷ்டானத்திற்காகவே யென்பது நன்கு விளங்கும். மேலே பிராட்டியைப் பிரிந்து வருந்திக் கிடக்கிற காலங்களிலும் பெருமாள் ஸந்தியா காலங்களில் தவறாது ஸந்தியாவந்தனம் அனுட்டித்தபடியை வால்மீகி பகவான் அஸக்ருத் கூறியிருக்கின்றார். ஆகவே பகவான் *வர்த்த ஏவ ச கர்மணி* என்று சொன்னது மிகப்பொருந்தும். ....

69. நாலாமத்யாயத்தில் (7) * யதா யதா ஹி தர்மஸ்ய * என்கிற ச்லோகத்தில் "ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்" என்ற விடத்தில் ரஸ்யமும் ரஹஸ்யமுமான ஒரு விசேஷார்த்தமுண்டு; மேலே ஏழாமத்யாயத்தில் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" (18) என்று கீதாசார்யன் தானே ஜ்ஞானிகளைத் தனக்கு ஆத்மாவாகச் சொல்லுகையாலே இங்கு "ஆத்மாநம் ஸ்ருஜாமி" என்றதற்கு ஞானிகளை அவதரிப்பிக்கிறேன் என்பதும் அந்தரங்கமான பொருளாகும். அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைமடிந்து நிற்குங் காலங்களில் பகவான் தான் வந்து அவதரிப்பதற்காட்டிலும் ஞானிகள் அவதரிப்பதில் ப்ரயோஜநாதிசயமுண்டு. இராமாநுச நூற்றந்தாதியில் (41) மண்மிசை யோனிகள் தோறும் பிறந்த எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமானுசன் வந்துதோன்றிய வப்பொழுதே நண்ணரு ஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே என்றுள்ள பாசுரம் இங்குப் பொருத்தமாக அநுஸந்திக்கத்தகும், அன்றியும் இந்த நான்காமத்யாயத்திலேயே மேல் (34) * தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:* என்கிற ச்லோகத்தில் ஞானிகளின் உபதேசப் பெருமை நன்கு கூறப்பட்டிருக்கிறது. 'தத்வமாகிய நான் சொல்லுவதிற் காட்டிலும் தத்வமாகிய என்னை ஸாக்ஷாத்கரித்து தத்வதர்சிகளென்று பேர் பெற்ற ஞானிகள் உபதேசிப்பது மிகச்சிறந்திருக்கும். அவர்களை யடிபணிந்தும் பலகால் அநுவர்த்தித்துக் கேட்டும் தெரிந்துகொள்' என்று அந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. அப்படி யுபதேசித்துத் திருத்திப் பணிக்கொள்ளவல்ல ஞானிகளை ஸமய விசேஷங்களில் நானே அவதரிக்கச் செய்கிறேன் என்கிறானிங்கு. தன்னுடைய அவதாரத்தைப் பற்றிச் சொல்ல ப்ராப்தமான இந்த ப்ரகரணத்தில் ஞானிகளின் அவதாரத்தைப் பற்றிச் சொல்வதற்கு என்ன ப்ரஸக்தி யென்று நினைக்கவேண்டா; * பீதக வாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து * என்கிற பெரியாழ்வார் திருமொழிப்படியும் *

http://acharya.org

ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா என்கிற ப்ரமாணப்படியும் ஞானிகளின் அவதாரமும் பகவதவதார விசேஷமேயாகையாலே. * சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ?—தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு முளவோ பெருமானுனக்கு* என்று நம்மாழ்வாரை நோக்கி ஒரு பரமபக்தர் பணித்த பாசுரமும் இங்கு அநுஸந்திக்கப் பொருந்தும், ... •

70. ஐந்தாமத்யாயத்தில் (18) • வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி, சுநிசைவ ச்வபாகே ச பண்டிதாஸ் ஸமதர்சிந: * என்பதொரு சுலோகம். இந்த ச்லோகத்தில் "பண்டிதாஸ் ஸமதர்சிந:" என்றிருப்பது கொண்டு, 'ஜாதிபேதம் முதலானவற்றை யிட்டு ஏற்றத்தாழ்வு காண்பவர்கள் பண்டிதர்களல்லர், பாமரர்களே' என்கிற அபார்த்தம் நவீந ஸம்ஸ்காரகர்களின் வாக்கில் உலாவி வருகிறது. அது சிறிதும் பொருந்தாது. பாஷ்யஸூக்திகளை நோக்குக. பசுவினாலாகிற காரியம் யானையினாலாகாது, யானையினாலாகிற காரியம் பசுவினாலாகாது. பால்வேண்டும்போது பசுவைத் தேடுவதும் மஹோத்ஸவங்களுக்கு யானையைத் தேடுவதும் யாவரிடத்தும் கண்டவியல்பு. லோகரீதியில் ஸமதர்சனம் எங்ஙனே பண்ணமுடியும்? 'ஸர்வத்ர ஸமதர்சிந: என்றதற்கு நவீநர்கள் சொல்லுகிற பொருள் பொருந்தவேணுமாகில், யானைக்குச் செய்கிற அலங்காரங்களை நாய்க்குச் செய்யவேண்டும்; நாய்க்குச் செய்யுமவற்றைக் குதிரைக்குச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட ஆபத்திகளைப் பரிஹரிக்கைக்காக 'ஸர்வத்ர ஸமதர்சிந:' என்பதற்குப் பொருத்தமான பொருள் காணவேண்டும். அதுதான் பாஷ்யத்தில் காண்பது. அன்றியும்; இதற்குமேல் மூன்றாவது ச்லோகத்தில் (5-20) சொல்லப்பட்டிருக்கின்றதாவது—ப்ரியமானது கிடைத்தால் ஸந்தோஷிக்கக் கூடாது; அப்ரியமானது கிடைத்தால் வெறுப்புக்கொள்ளலாகாது என்று கூறப்படுகிறது. இப்படியிருக்க வல்லவனுக்குத்தான் ஸர்வத்ர ஸமதர்சநரூபமான ஜ்ஞாந விபாக முண்டாகுமென்று பாஷ்யகாரர் அருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட ஓர் அதிகாரி தேறுவனாகில் அவனுடைய ஸர்வத்ரஸமதர்சித்வம் எப்படிப்பட்டதென்று நேராகக் கண்டு கொள்ளலாம். .... *

71. ஆறாவது அத்யாயத்தில் (5.) * உத்தரேத் ஆத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத், ஆத்மைவ ஹ்யாத்மநோபந்து ஆத்மைவ ரிபுராத்மந: * என்கிற ச்லோகம் ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் அநவரதமும் ஊன்றியிருக்கத்தக்கது. தன்னைக் கொண்டேதான் கடைத்தேறவேணுமென்றும், தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளலாகாதென்றும், தனக்குத் தானே உறவு, தனக்குத் தானே பகைவன் என்றும் இந்தச் ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஒருவன் கடைத்தேறுவதற்குப் பல பல ஸாதனங்கள் வேண்டியிருக்கின்றன. ஸத்ஸஹவாஸம் வேணும், ஆசார்யோபஸேவை வேணும், பிராட்டியை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுதல் வேணும்.......... என்றிப்படியாக உஜ்ஜீவனத்திற்கு வேண்டியவை பல இருந்தாலும் இவற்றுள் மிக முக்கியமான ஸாதனம் மனம் ஒன்றேயாம். அதை விஷயாந்தரங்களில் யதேஷ்டமாகச் செல்லவிட்டு வைத்தால் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டபடியாகும். மனத்தை விஷயக்ராமங்களில் புகவிடாமல் ஆத்மோஜ்

http://acharya.org

ஜீவனத்திற்கு அபிமுகமாகுமளவில் அந்த மனத்தைக்கொண்டு தான் வாழ்ந்தவனு வன். ஆகவே, மனமானது உறவாயு மிருக்கும், பகையாயு மிருக்கும். உறவாகக் கொண்டு வாழ்வதே விவேகிகளின் பணி; பகையாகக்கொண்டு பாழாய்ப் போக வேண்டாமென்று கீதாசார்யன் வெகு பொருத்தமாக உபதேசித்தருளுகின்றான். *

72. ஏழாமத்யாயத்தில் — (17.) * தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: * என்னும் ச்லோகத்தின் உத்தரார்த்தம் "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்றுள்ளது. இங்கு நம் ஸ்வாமி "ஜ்ஞாநிந: அஹம் அத்யர்த்தம் ப்ரிய:" என்று க்ரமாந்வயத்தையே திருவுள்ளம்பற்றி பாஷ்யமிட்டருளினர். இவ்வந்வயக்ர மத்தில்—ஞானிக்குத்தன்னிடத்தில் ப்ரீதி அதிகம் என்றதாக விளங்குகிறது. உண்மையில், பகவானிடத்தில் ஞானி வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா? ஞானியிடத் தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா ? என்று ஆராய்ந்து பார்க்கு மளவில் ஞானியிடத்தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதிதான் அதிக மென்னத் தகும். ஆகவே இந்த ச்லோகத்தில் [அத்யர்த்தம்] என்பதை 'அஹம் ப்ரிய:' என்பதிலே கூட்டுவதை விட 'மம ப்ரிய:' என்பதிலே கூட்டுவதுதான் ரஸவத்தரமென்று திருவுள்ளம் பற்றின ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தில் சரமஸூத்ரமான * அநாவ்ருத்தி ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் "அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா" என்கிற அநர்க்கமான வாக்யத்தினால் அந்த அந்வய க்ரமத்தையும் காட்டியருளினர். அந்த ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியின்படி ப்ரக்ருத கீதாச்லோகந்வயம் எப்படி கொள்ளவேணு மென்னில்; "ஜ்ஞாநிந: அஹம் ப்ரிய:; ஸ ச மம அத்யர்த்தம் ப்ரிய:" என்றிங்ஙனே கொள்ளவேணும். உபயபாஷ்யத் திலும் துல்யமான அந்வயக்ரமமே விவக்ஷித மென்று சில பண்டிதர்கள் கூறு வதுண்டு. இங்கு நாம் வாதப்ரதிவாத ருசியுடையோமல்லோம். .... *

73. எட்டாமத்யாயத்தில் ஒரு நிதி காட்டுகிறேன் காண்மின். (14.) * அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந:.* என்கிற சுலோகத்தின் உண்மைப் பொருளைக் கண்டுணர்ந்து பாஷ்யமிட் டருளினவர் நம் ஸ்வாமி. இதை மிக விவரித்து அடியேன் வேறு சில நூல்களில் விளக்கியிருக்கிறேன். இங்கு மிகச் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். * நாயமாத்மா ச்ருதியில் *யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: * என்றதிலுள்ள அர்த்தவிவாதத்தை ஸ்வாமி தமது பாஷ்யத்தில் அறவே அறுத்தருளுகிறார். அதை தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீ ஸூக்திகள் மிக நன்றாக விளக்குகின்றன. சேதநனுடைய காரியங்களில் பசை யறுத்து எம்பெருமானுடைய க்ருதியின் ப்ராபல்யத்தை ஸ்திரீகரிப்பது இவ்விடத்து பாஷ்யம். பரகத ஸ்வீகாரத்தின் பெருமையை யுணர்த்துவதென்றபடி. "தத் வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே. ....அத்யர்த்தமத்ப்ரியத்வாதிகுஞ்ச அஹமேவ ததாமீதி அர்த்த:" இத்யாதிபாஷ்ய ஸ்ரீஸூக்திகளையும், "உக்தஸ்ய அதி வாத மாத்ரத்வ சங்காவ்யுதாஸாய ச்ருதிமூலதாம் ஆஹ—* யமேவேதி." என்கிற தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீஸூக்தியையும் சிந்தனை செய்வது. .... *

74. ஒன்பதாமத்யாயத்தில் (26) *பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: * என்கிற ச்லோகத்

http://acharya.org

னில் கண்ணபிரான் தான் ஆராதனைக் கெளியன் என்னுமிடத்தை அருளிச் செய்கிறான். இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோ விதங்களால் நெடுவாசி பெற்றிருப்பது போல இவ்வகையாலும் நெடுவாசி பெற்றிருக்கிறான். 'ஆடு பலி கொடு. கோழி பலி கொடு' என்று அருந்தேவைகளையிட்டு மஹாபரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷித்திருப்பவை தேவதாந்தரங்கள்; எம்பெருமான்படியோ அப்படியன்று. நாம் இட்டது கொண்டு த்ருப்தியடைவதே அவனது ஸ்வரூபம். எம்பெருமானுக்கு நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பதானது அவனுக்கு ஏற்கெனவே யில்லாததொரு பூர்த்தியை யுண்டாக்குவதற்காகவன்று. நாம் ஸத்தை பெறுவதற்காக அவனோ அவாப்த ஸமஸ்தகாமன்; அன்னவன் குறைபுற்றிருந்து நாமிட்டது கொண்டு பூர்த்தியடைகிறானென்பது அஸம்பாவிதம். ஸ்வத: பரிபூர்ணனான பரம்புருஷன் திறத்தில் நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம்பெறுவதற்கேயொழிய அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. நாம் சிறந்த பெரும் பொருள்களைத் தேடியிடவேணு மென்பதுமில்லை, இடுகிற பொருள் எதுவாயினும் இடுவது ப்ரேம பூர்வகமாக வேணுமென்பதொன்றிலேயே நியதியுள்ளது. திருமங்கையாழ்வார் *கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் அம்பலும் முன் கண்டக்கால் புள்ளாயோரேனமாய்ப்புக்கிடந்தான் பொன்னடிக் கென்று, உள்ளாதாருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே* என்று பெரிய திருமொழியில் (11-7-6) அருளிச் செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத்தக்கது' என்று அத்யவஸாயங் கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ளமாட்டோம் [நஞ்சாகவே கொள்ளுவோம்] என்று உரைக்கின்ற இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதிய வஸ்துக்களும் கூட்டியெடுக்கப்பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்க வேணு மென்கிற சுத்தபாவத்துடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை; *செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி* என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவே யிருக்கவேணு மென்கிற நியதியில்லை. ஏதேனுமொரு புஷ்பமாக இருக்கலாமென்பதும், பக்தி பெருங்காதலே முக்கியமானதென்பதும் தோற்றுவிக்கப்பட்டன. *பத்ரம் புஷ்பம்* என்று மேலெயெடுத்த கீதா ச்லோகமும் 'இடுகிற பொருளில் வாசி பார்ப்பதில்லை; இடுகிறவன்னெஞ்சில் ஈரமுள்ளதா என்பதொன்றையே பார்ப்பேன்,' என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது. பூர்வார்த்தத்தில் 'யோ மே பக்த்யா ப்ரயச்சதி' என்று சொல்லிவைத்து உத்தரார்த்தத்திலும் 'தத் பக்த்யுபஹ்ருதம்' என்று மீண்டும் சொல்லியிருக்கிறதல்லவா? தத் என்றாலே போதுமாயிருக்க 'பக்த்யுபஹ்ருதம்' என்றது பக்தியின் கனமே முக்கியமென்று காட்டுதற்காம். ....

75, 76. பத்து பதினொன்று ஆகிய இரண்டத்யாயங்களின் ஸாரங்களைச் சேர்த்து அநுபவிப்போம். பத்தாவது அத்யாயத்திற்கு விபூத்யத்யாயமென்று பெயர்; பதினோராமத்யாயத்திற்கு விச்வரூபாத்யாயமென்று பெயர்; பத்தாமத்யாயத்திற்கு ஸ்வாமி யெம்பெருமானாருடைய அவதாரிகை வருமாறு:—ஏழே பக்தியோகம் ஸாங்கமாக விவரித்துரைக்கப்பட்டது; இப்பொழுது பக்தியுண்டாவதற்காகவும் அது வளருவதற்காகவும் எம்பெருமானுடைய [தன்னுடைய] நிகரற்ற ஐச்வர்யம் முதலிய

http://acharya.org

திருக்கல்யாணங்களின் திரள் அளவு கடந்திருக்கிற படியையும், உலகமெல்லாம் தனக்கு சரீரமாயிருக்கையாலே அவனுருவாய் அவன் ஏவச்செல்லும்படியாயிருக்கின்றமையும் விஸ்தரித்துச் சொல்லப்படுகின்றன—என்று. இடையிடையில் அர்ஜுனன் கேள்வி கேட்டால் அதற்குமேல் கண்ணன் விடை கூறுவது என்கிற முறையை இவ்விடத்தில் வைத்துக்கொள்ளாமல் தானாகவே *பூய ஏவ மஹாபாஹோ! ச்ருணு மே பரமம் வச:* (10-1) என்று, மீண்டும் நான் சொல்லுவதைக் கேளப்பா! என்று ஆரம்பித்துச் சொல்லுகிறான்; இப்படி அப்ருஷ்டோத்தரமாகச் சொல்லுவது கூடுமோவென்று சங்கிக்க இடமில்லாதபடி உத்தரார்த்தத்தில் *யத் தேஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா* என்று, ச்ரோதாவான அர்ஜுனனுடைய முகத்தில் ப்ரீதி விசேஷத்தைக்கண்டு இவனுக்கு இன்னமும் விரிவாகச் சொல்லியே யாகவேண்டுமென்று திருவுள்ளம்பற்றிச் சொல்லுவதாகக் காட்டப்படுகிறது. விஷயம் கேட்கிறவன் சிறிது வெறுப்போடிருப்பதாகத் தெரியவந்தால் வக்தாவுக்கு மேன்மேலும் சொல்ல வாயெழும்பாது; ச்ரோதா ப்ரஸந்நமுகனாகத் தென்பட்டால் அபூர்வமான விஷயங்களும் 'என்னைக்கொள் என்னைக்கொள்' என்று முற்பட்டு நினைவுக்கு வந்து நிற்கும். அவற்றையெல்லாம் சொல்லியே தீரவேண்டியதாகும். இங்கு 10, 11, ஆகிய இரண்டத்யாயங்களிலும் சொல்லப்புகுகிற விஷயங்கள் கீதா சாஸ்த்ரத்தினுள் ஸாரங்களாயிருப்பதால் இவற்றைச் சொல்லத் தொடங்கும்போதே அர்ஜுனன் தன்னுடைய அவாவை அதிகமாகக் காட்டினனென்பது "ப்ரீயமாணாய தே'' என்பதனால் விளக்கப்படுகிறது. அவன் ப்ரீதனாகத் தென்படாமற் போனாலுங்கூட அவனுடைய ஹிதத்தை யுத்தேசித்துத் தான் சொல்லியே தீரப்போகிறதாகக் காட்டப்படுகிறது வக்ஷ்யாமி ஹிதகாம்யயா'' என்பதனால். ஆக, இவ்விரண்டத்யாயங்களிலும் தெரிவிக்கப்படுகிற அர்த்தங்கள் ப்ரியங்களுமாய் ஹிதங்களுமாயிருக்குமென்று ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்டதாயிற்று. (10-19) *ஹந்த தே கதயிஷ்யாமி விபூதி ராத்மநச் சுபா:, ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட! நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே* என்று, அர்ஜுனா! என்னுடைய மிகவழகிய விபூதிகளை உனக்குச் சொல்லுகிறேன்; எல்லாவற்றையும் சொல்லுவதென்றால் அவற்றுக்கு முடிவே கிடையாமையாலே சொல்லப் போகாது; உன்னால் கேட்கவும் போகாது; ஆகையாலே முக்கியமாகச் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளாய் என்று சொல்லி, (21) *ஆதித்யாநாமஹம் விஷ்ணு:* என்று தொடங்கி முப்பத்தொன்பதாவது ச்லோகமளவும் சொன்னான். இவையெல்லாம் கேட்ட அர்ஜுனன் (11-1ல்) *யத் த்வயோக்தம் வசஸ் தேந மோஹோயம் விகதோ மம* என்று, கண்ணா! நீ சொன்னவற்றையெல்லாம் கேட்டு என்னுடைய மோஹமெல்லாம் தொலைந்தது என்று சொல்லி, (11-3ல்) த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் புருஷோத்தம* என்று பகவானுடைய அஸாதாரண ரூபத்தைக் காண்பதிலே தனக்கு விருப்பமிருப்பதாக வெளியிட்டான். அவனுக்குக் கண்ணபிரான் விச்வ ரூபம் காட்டியருளத் திருவுள்ளம்பற்றி அதை ஊனக்கண்ணாலே காண முடியாதாகையால் அது காண்கைக்காக திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருளி விச்வரூபத்தை அற்புதமாகக் காட்டியருளினான். ஆக, பத்தாமத்யாயத்தில் விபூதி விஸ்தாரத்தைப் பேசி, பதினோராமத்யாயத்தில் விச்வரூபத்தைக் காட்டியருளினனென்று. இவையெல்லாம் எம்பெருமானுடைய உடைமைகள் என்றதாயிற்று. .... *

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

77. பன்னிரண்டாமத்யாயத்தில் 18, 19 ச்லோகங்கள் ஸாரமானவை. அவையாவன—*ஸமச் சத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோ:, சீதோஷ்ண ஸுக துக்கேஷு ஸமஸ் ஸங்கவிவர்ஜித:, துல்ய நிந்தாஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோ யேந கேநசித் அநிகேத: ஸ்திரமதிர் பக்திமாந் மே ப்ரியோ நர:* என்பன. பகைவனிடத்திலும் அவமானம் நேர்ந்தாலும், நண்பனிடத்திலும் ஒரேவிதமான பாவனையுள்ளவனும், பஹுமானம் நேர்ந்தாலும் அவற்றையும் துல்யமாகவே பாவிப்பவனும், சீதோஷ்ணங்களையும் ஸுக துக்கங்களையும் ஸமமாக நினைப்பவனும், எதிலும் பற்றில்லாமலிருப்பவனும், பிறர் நிந்திப்பதையும் துதிப்பதையும் துல்யமாக நினைப்பவனும், ஒருவரோடும் பேசாமலிருப்பவனும், ஏதேனுமொன்றினால் ஸந்துஷ்ட சித்தனாயிருப்பவனும் உறுதியும் பக்தியுமுடையவனுமானவன், எனக்குப் பரம ப்ரீதிபாத்ர பூதன் என்று சொல்லுகிறான் கண்ணபிரான். இப்படிப்பட்ட அதிகாரி உலகில் மிகவும் துர்லபனேயாயினும் இப்படியிருக்க ஆசைப்படவேணு மென்பதற்காகவே இஃது அருளிச் செய்தபடி. இத்தகைய அதிகாரிகள் இமயமலைச் சாரல்களில் காணப்படுவர்கள்.

.... •

Released by Maran's Dog ,Toronto, Canada

78, 79. பதின் மூன்றுமத்யாயத்தில் முதல் ச்லோகமும் இரண்டாம் ச்லோகமும் சிறிது விபரீதவுணர்ச்சியை உண்டாக்குவது போலுள்ளது. இங்கு ஸ்வாமியினுடைய பாஷ்யமும் அதற்கு டீகையான தாத்பர்ய சந்த்ரிகையும் மிகமிக விரிவாக அமைந்திருக்கின்றது. மூலச்லோகங்களாவன—*இதம் சரீரம் கௌந்தேய: க்ஷேத்ரமித்யபிதீயதே, ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:* என்பது முதல் ச்லோகம். இனி இரண்டாவது ச்லோகமாவது *க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத!, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம் யத் தத் ஜ்ஞாநம் மதம் மம* என்பது. இங்கு (ஆபாத ப்ரதீதியில்) மேல்நோக்கில் என்ன தோற்றுகிறதென்றால், க்ஷேத்ரமென்னப்படுகிற அசேதநமும், க்ஷேத்ரஜ்ஞனென்னப்படுகிற சேதநனும் ஆகிய இரண்டையும் அர்ஜுநா! நானாக அறிந்துகொள் என்னப்படுகிறது பூர்வார்த்தத்தில்; க்ஷேத்ர—க்ஷேத்ரஜ்ஞர்களாகிற சேதநாசேதநங்களை யறிந்து கொள்வதென்பது யாதொன்றுண்டோ, அது தான் என்னையறிந்து கொள்வதாகும் என்கிறது உத்தரார்த்தத்தில். இவற்றால் அத்வைதவாதம் ஸித்திக்கிறதென்று கருதிய சங்கராசாரியர் தமது பாஷ்யத்தில் அக்கருத்தை விளக்கியிருக்கின்றார். அதற்கு விரிவான மறுப்பு நமது ஸ்வாமியின் பாஷ்யத்திலுள்ளது; மிகமிக விரிவான மறுப்பு தாத்பர்யசந்த்ரிகையிலுள்ளது. அதன் ஸாரத்தை மிகவும் சுருக்கமாகத் தெரிவிக்கிறேனிங்கு. தேஹத்திற்காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது தெரிந்திருக்கச்செய்தேயும் 'தேவோஹம் மநுஷ்யோஹம்' என்று வ்யவஹாரம் செய்துவருகிறோம். அஹம் என்பதற்கு ஆத்மா அர்த்தமேயொழிய தேஹம் அர்த்தமன்று; தேவத்வமோ மநுஷ்யத்வமோ சரீரத்திலுள்ளதேயன்றி அஹமர்த்தமான ஆத்மாவிலுள்ளதன்று. அப்படியிருந்தும் 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று ஸாமாநாதிகரண்யமாக ப்ரயோகிப்பது எப்படி பொருந்துகிறதென்றால் கேண்மின்; ஆத்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டொன்று தனித்து நிற்பனவல்ல. தேஹமானது ஆத்மாவுக்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமாய்க் கொண்டேயிருப்பதால் இந்தச் சேர்த்தியையிட்டு 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று வ்யவஹரிக்கப்பட்டு

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

வருகிறது. இதற்கு அர்த்தம் என்னவென்றால், தேவ சரீரக: அஹம், மநுஷ்ய சரீரக: அஹம்—என்பதேயாம். ஏவஞ்ச, சரீராத்மபாவரூபமான ஸம்பந்தத்தைக்கொண்டு பொருத்தப்பட்டதாயிற்று. இவ்வண்ணமாகவே *க்ஷேத்ரஜ்ஞஞ் சாபி மாம் வித்தி* என்றதும் சரீராத்ம பாவ ஸம்பந்த நிபந்தனமாகவே பொருந்தக் குறையில்லை. அசேதநமான தேஹமானது ஜீவாத்மாவுக்கு சரீரமாயிருப்பது போல, இவ்விரண்டும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரமாயிருக்கும் விஷயம் ஸுபாலோபநிஷத்து முதலானவற்றில் ஸுப்ரஸித்தமாயிருப்பதால் க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் பரமாத்மாவாக நினைப்பதென்பது க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் சரீரமாகக் கொண்டவன் பரமாத்மா" என்று நினைப்பதாகவே முடிந்து நிற்கும். இவ்விஷயம் பலபல உபபத்திகளுடன் ஸ்வாமி பாஷ்யத்தில் விரித்துரைக்கப் பட்டிருப்பது காண்க. .... *

80. பதினான்காமத்யாயத்தில் (24,25ல்) *குணாதீதஸ் ஸ உச்யதே* என்று ஓர் உத்தமாதிகாரி சொல்லப்படுகிறான். இவனுக்கு குணாதீதனென்று பெயர். குணங்களைக் கடந்தவனென்று பொருள். ஸகலகுணங்களுக்கும் கொள்கலமாக இருப்பவனன்றோ உத்தமாதிகாரி; குணங்களைக் கடந்தவன் எப்படி உத்தமாதிகாரியாவன்? என்று கேள்வி பிறக்கக்கூடும். இங்கு விவக்ஷிக்கப்படுகிற குணங்கள் சமதமாதிகுணங்களல்ல; ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள். *முக்குணத்து வாணியத்து இரண்டிலொன்று நீசர்கள்* என்று திருமழிசைப்பிரானும். *முக்குணத்திரண்டவையகற்றி, ஒன்றினிலொன்றி நின்று* என்று திருமங்கையாழ்வாரும் அருளிச் செய்கிறபடி ரஜஸ் தமோ குணங்களிரண்டுதானே ஹேயங்கள்; ஸத்வகுணம் உபாதேயந்தானே; அதுவுங்கூட ஹேயமென்று தோன்றும்படியுள்ளதேயென்று நினைக்கவேண்டா; சுத்தஸத்வம் என்பது உபாதேயமே. ரஜஸ் தமஸ்ஸுக்களோடு கலசின ஸத்வம் உபாதேயமன்று. அது ஹேயமே. ஆக, தமோகுணமும் ரஜோகுணமும் ரஜஸ்தமோமிச்ரஸத்வகுணமுமாகிய முக்குணங்களையும் கடந்தவன் குணாதீதனெனப்படுவான். இவனை நாம் எப்படித் தெரிந்துகொள்ளுவதென்றால் அவனுடைய நிலைமையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அந்த நிலைமை தெரிவிக்கப்படுகிறது இரண்டு ச்லோகங்களினால்: *"ஸமதுக்க ஸுகஸ் ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சந:, துல்யப்ரியாப்ரியோ தீரஸ் துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி:; மாநாபமாநயோஸ் துல்யஸ் துல்யோ மித்ராரிபக்ஷயோ: ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீதஸ் ஸ உச்யதே* என்னுமிவ்விரண்டு ச்லோகங்களும் அநவரதம் கண்டபாடம் செய்யத்தக்கன. ஸுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் ஒரேவிதமான சித்தவ்ருத்தியையுடையனாயிருக்கவேணுமென்கிறது. ['ஸமதுக்கஸுக:] என்பதனால். அதன்மேல் [ஸ்வஸ்த;] என்கிறது. இதற்கு இவ்விடத்தில் அபூர்வமான வ்யுத்பத்தியைக் காட்டியருளுகிறார் ஸ்வாமி யெம்பெருமானார். (தன்னிடத்திலேயேயிருப்பவன்) என்கிறார். உடனே அதை விவரிக்கிறார்—உலகில் ஸுகதுக்கம், ப்ரியாப்ரியம் என்னும் சப்தங்கள் விசேஷமான பொருள்வாசியையுடையனவல்ல; பர்யாயசப்தங்கள் போலவேகாணும். ஆனாலும் விஷய பேதத்தாலே பொருள் பேதித்திருக்கும். ["ஸமலோஷ்டாச்மகாஞ்சந:'] லோஷ்டத்தையும் கல்லையும் பொன்னையும் துல்யமாக நினைப்பவன். இப்படியாக மேன்மேலும் சொல்லப்படுகிற தன்மைகள் இந்நிலத்தில் நம் போன்ற பாமரர்களுக்கு எவ்வளவு பழக்கம் செய்தாலும் வாய்க்கக்கூடியவையல்ல. இத்தகைய தலம் வாய்ந்தவர்கள் பூலோகம் முழுவதற்குள்ளும்

http://acharya.org

ஒருவரிருவர் தேறுவதும் அருமையென்னலாம். ஆயினும் இப்படிப்பட்ட ச்லோகங்களை நாம் மனனம்செய்துகொண்டேயிருந்தால் பெரிதும் பயன்படும் என்றிவ்வளவே சொல்லலாம். கீழே பன்னிரண்டாமத்யாயத்தில் இது சொன்னோம். .... *

81. பதினைந்தாமத்யாயத்தில் (15) * ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ் ச. வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேதவிதேவ சாஹம்.* இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தம் பகவத்கீதைக்கு அவதாரிகை போன்றிருக்கும். (எங்ஙனே யெனில் ;) யுத்தம் செய்வதற்கு மிருந்த உத்ஸாஹத்தோடு குருக்ஷேத்ரம் வந்து சேர்ந்த அர்ஜுனன் திடீரென்று யுத்தஞ்செய்ய மாட்டேனென்று வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு உட்கார்ந்ததானது அவனுடைய ஸொந்த எண்ணத்தினாலன்று. எப்படியாவது கீதா சாஸ்த்ரத்தை அவதரிப்பிக்க வேணுமென்று தீவிரமான குதூஹலங்கொண்டிருந்த கண்ணபிரான் சாஸ்த்ரச்ரவணத்திற்குப் பூர்வாங்கமாக அர்ஜுனனுக்கு நிர்வேதத்தையுண்டாக்கவே விளைவித்த வைராக்யமது என்று (67ல்) சொன்னோம். அதைத்தான் இங்கு ஸூசனையாகக் காட்டுகிறான். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் நானே உறைந்திருந்து ஜ்ஞான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையுண்டாக்கிவருகிறேன் என்று சொல்லுகிறானிங்கு. இது வேதாந்தக்ருதயீதமான அர்த்தம். * அந்தः ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா * இத்யாதிச்ருதிகள் காண்க. இனி உத்தரார்த்தத்தின் விவரணம் கேண்மின். [இங்கு சங்கரபாஷ்யத்திலுள்ள விவரணம் மிகவும் ஸாமாந்யமானது. நம் ஸ்வாமி பாஷ்யத்தின்படி விவரணம் கேளீர்.] வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்ய:—கர்மகாண்டங்களிலும்கூட எனக்குத்தான் ப்ரசம்ஸையுள்ளதென்றபடி. ஸ்ரீ ரங்கராஜஸ்தவ-உத்தர சதகத்தில் * அகிலா வேதா: ப்ரமாணம் * என்கிற சுலோகத்தின் நான்காவது பாதம் "வேத்யோ வேதைச் ச ஸர்வைரஹமிதி பகவந் ஸ்வேந ச வ்யாசகர்த்த:" என்பது. அங்கு அடியேனுடைய வியாக்கியானத்தில் விரிவு காண்க. [வேதாந்தக்ருத்] "வேதாந்தார்த்த ஸம்ப்ரதாயக்ருத்" என்றுரைத்தார் சங்கராசாரியர். அந்தம் என்பதற்குப் பலன் என்று பொருள், வேதோக்த கருமங்களை யனுட்டிப்பவர்களுக்கு நானே பலனளிப்பவன் என்பது ஸ்வாமியின் ஸமஞ்ஜஸமான பாஷ்யம். [அஹமேவ வேதவித்] ஸர்வவேத வேத்யன் நானே யென்றும், வேதோக்தகர்ம பல ப்ரதாதா நானேயென்றும் அறியாதவன் வேதவித்தல்லன்; இப்படியறிகிற நானே வேதவித்து என்றபடி.

82. பதினாறு மத்யாயத்தில் தேவாஸுரவிபாகம் முக்யமானது. தைவப்பிறப்பு அஸுரப்பிறப்பு என்று பிறப்பிலேயே இருவகையுண்டு. (16-6.)* த்வௌ பூத ஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச* என்று, உலகத்திலுள்ள பிராணிவர்க்களை யெல்லாம் இரண்டே வகுப்பாக வகுக்கிறான் கீதாசார்யன். தைவவகுப்பு ஒன்று, ஆஸுரவகுப்பு மற்றொன்று. இதைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள வேணுமானால் * தைவீ ஸம்பத விமோக்ஷாய நிபந்தாய ஆஸுரீ மதா* (16-5) என்கிற வொரு பாதி ச்லோகத்தை மனனம் பண்ணினாற்போதும். ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்டு ஸத்கதியை யடையும் வழியைச் சிந்தனை செய்யும் வகுப்புதான் தெய்வ வகுப்பெனப்படுவது. அப்படிப்பட்ட சிந்தனையின்றிக்கே அதோகதியையடையும் வழியைத் தேடும் வகுப்புதான் ஆஸுர வகுப்பெனப்படுவது. இங்ஙனே

http://acharya.org

சொன்னதைக் கேட்டவுடனே அர்ஜுநனுடைய முகத்தில் துக்கக் குறி காணப்பட்டது. நம்மைக் கண்ணபிரான் தைவவகுப்பில் சேர்த்திருக்கிறானோ ஆஸுரவகுப்பில் சேர்த்திருக்கிறானோ தெரியவில்லையே யென்று அர்ஜுநன் கவலையுற்று நின்றான். அதையறிந்த கண்ணபிரான் உடனே யருளிச் செய்கிறார் '[மா சுசஸ் ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ!]* அப்பா! நீ கவலை கொள்ளாதே. நீ தெய்வ வகுப்பில் சேர்ந்தவனே யென்று கூறி அவனைப் பரமானந்தப்படுத்துகிறான். தான் செய்யும் உபதேசங்களை அவன் ருசிவிச்வாஸங்களோடு கேட்டுக் கொண்டிருப்பது பற்றியே அவனைத் தைவஸம்பத்து வாய்ந்தவனாக அறுதியிட்டருளினன் கண்ணபிரான். நமக்கு ஆஸ்திக்யமுள்ளதா? நாஸ்திக்யமுள்ளதா? என்பது உலகில் அவரவர்களுடைய நெஞ்சுக்குத் தெரியுமன்றோ. ஆஸ்திக்யமுண்டாகில் நம்முடைய பிறப்பு தெய்வப் பிறப்பு என்று தானே நிச்சயித்துக்கொள்ளலாம். அஃதில்லையாகில் ஆஸுரப் பிறப்பே நமக்கு வாய்த்ததென்று நிச்சயித்துக்கொள்ள என்ன தடை? இத்தீய பிறப்பின் தன்மைகளை மேலே ச்லோகங்களினால் கண்ணபிரான் தானே நன்கு தெரித்துக் கூறுகின்றான். *ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே. அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீச்வரம்* இத்யாதிகள் காண்க.

83. பதினேழாமத்யாயத்தில் மூவகையான தபஸ்ஸுக்களைக் கூறுகின்றான் கண்ணன். அவை சாரீர தபஸ்ஸென்றும், வாங்மய தபஸ்ஸென்றும், மாநஸ தபஸ்ஸென்றும் வழங்கப்படுவன. *ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு உடலிற்பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம்வாட வாடத் தவஞ்செய்ய* என்றும், *காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று தவஞ்செய்ய* என்றும் ஆழ்வார்கள் ஒருவிதமான உடல்தவத்தை யருளிச் செய்துள்ளார்கள். கீதாசார்யன் அருளிச்செய்வது அதனில் வேறுபட்டது. பகவானையும் அந்தணர்களையும் ஆசாரியர்களையும் பண்டிதர்களையும் வழிபாடு செய்வது, புண்ய தீர்த்தங்களில் குடைந்தாடுவது, நெஞ்சில் நினைத்தபடியே அநுஷ்டித்துக் காட்டுவது, மாதர்களைக் கண்டு காதல் கொள்ளாமை, ப்ராணி பீடைகள் செய்யாமை ஆகிய இவை காயிக தபஸ்ஸென்கிறான். 'அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத். ஸ்வாத்யாயாத்யயநம் சைவ வாங்மயம் தப உச்யதே* என்பது வாங்மயமான தபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பிறரை நோவச் செய்யாத வார்த்தைகளைச் சொல்லுவது, உண்மையைச் சொல்லுவது, ப்ரியமும் ஹிதமுமானவற்றைச் சொல்லுவது, வேதமோதுவது ஆகியவை வாசிக தபஸ்ஸெனப்படும். *மந:ப்ரஸாதஸ் ஸௌம்யத்வம் மௌனமாத்மவி நிக்ரஹ:, பாவஸம்சுத்திரித்யேதத் தபோ மானஸ முச்யதே* கோபம் முதலியன கொள்ளாமையாகிற மனத்தெளிவு, பிறர்க்குத் தீங்கிழைக்க நினையாமையாகிற ஸௌம்யத்வம்; வாய்திறந்து பேசாமை, ஸதா தியானிக்கத் தகுந்த பரமபுருஷன் விஷயத்திலே நெஞ்சைச் செலுத்துகை, வேற்று விஷயங்களில் சிந்தனை கொள்ளாமை ஆகிய இவை மாநஸ தபஸ்ஸெனப்படும். இங்ஙனம் மூவகைப் பட்ட தபஸ்ஸு மறுபடியும் மூவகையாக வகுக்கப்படுகிறது; ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும். அங்கே விரிவு காண்க. .... *

84. கீதையுபதேசம் கேட்பதற்கு முன்பு அர்ஜுநன் இருந்த இருப்பு என்ன? இப்போது நின்றநிலை என்ன? என்பதே ஸாரமாக இங்கு உய்த்துணரத் தக்கது.

http://acharya.org

நான் யுத்தம் செய்யமாட்டேனென்று வில்லையும் அம்புகளையும் விட்டெறிந்து தேர்த்தட்டிலே உட்கார்ந்து விட்டான் என்பது முதலத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. நீ சொன்னபடியே செய்கிறேனென்று சொல்லி யுத்தத்திற்கு உடன்பட்டு நின்றானென்பது பதினெட்டாமத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. அவரவர்களுக்கு ஸ்வதர்மத்தில் ருசியையுண்டாக்குவதே கீதையின் முழுநோக்கு என்றதாயிற்று. இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்திருக்கிற ரீதியை ஊன்றி நோக்குமிடத்து வெகு ஆச்சரியமாகவேயிருக்கிறது. திருவாய்மொழியில் (4-8-6.)* அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய, நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி* என்கிற பாசுரத்தில் கீதையின் பெருமை ஸாரமாக அருளிச் செய்யப்பட்டது. இதன் அருமை பெருமையைக் கண்ணபிரான் தானே முடிவில் *இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, ந சாசுச்ருஷவே வாச்யம் ந ச மாம் யோப்யஸூயதி* என்கிற வொரு ச்லோகத்தினால் அற்புதமாகப் பேசினான். அர்ஜுனா! நான் உனக்குச் சொன்ன இந்த பரம குஹ்யமான சாஸ்த்ரத்தை அதபஸ்கனுக்குச் சொல்லாதே. அபக்தனுக்குச் சொல்லாதே, அசுச்ருஷுவுக்குச் சொல்லாதே, என்னிடத்தில் அஸூயையுள்ளவனுக்குச்சொல்லாதேயென்று கட்டளையிடுகிறான் கண்ணபிரான். இங்கு "ந ச மாம் யோப்யஸூயதி" என்ற விடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும். நவில நாவாயிரம் வேண்டும். என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும் ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன், அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே—என்று கண்ணபிரான் கட்டளையிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத் குணங்களை எத்தனை உயர்த்தியாகச் சொன்னாலும் அத்தனையும் ஒக்கும்! ஒக்கும்!! என்றிராதே அவற்றில் அஸம்பாவிதத்வத்தை உபபாதிக்கிறோம் கேண்மினென்று, தங்களுக்குண்டான பாண்டித்யத்தை யெல்லாம் பகவத் குணங்களை இல்லைசெய்வதிலும் இறக்குவதிலுமே உபயோகப்படுத்துகிறவர்கள் பகவத் கீதைக்கு வெகுதூரத்திலே நிற்கவேண்டுமென்பது ஸ்வாமி திருவுள்ளமாகக் காண்கிறது. ....*

ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணார்த்த ஸமுச்சயம் முற்றிற்று

http://acharya.org

ஸ்ரீ:

ந்ருஸிம்ஹப்ரியாவிடம் சரக்கிருந்தால் நின்று விடைகூறட்டும்

(உள்ள சரக்கை உள்ளபடி உணர்வோம் நாம். உலகம் நன்குணர வேண்டுமென்றுரைப்படுகிறோம்)

நேற்றைய மாசி மாதத்து ந்ருஸிம்ஹப்ரியாவில் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ராதிப ஸ்வாமியின் கேள்விக்கு ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபரின் பதில் காணப்படுகிறது. கேள்வி அக்னிஹோத்ர தாதாசார்ய விதண்டாவாதங்களைப்பற்றியதென்று தெரிகிறது. அதற்கு ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபரின் விடையாகவுள்ள பகுதியில் "ஸ்ரீ தேசிகனையும் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்த்த மஹா வித்வான்களையும் ஒரு பத்திரிகை கண்மூடித்தனமாகத் தாக்கி வருகிறதே; அவ்விடத்தில் உம்முடைய மனஸ்ஸாக்ஷியை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்" என்றுள்ளது. இதில் 'ஒரு பத்திரிகை' என்றுள்ளதேயன்றி பத்ரிகையின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் நமது ஸ்ரீ ராமாநுஜனே அவருடைய லக்ஷ்யமாகும். தென்கலை ஸம்ப்ரதாயத்தில் மாதப் பத்திரிகைகள் இரண்டே வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஸ்ரீ வைஷ்ணவஸுதர்சனமும் ஸ்ரீ ராமாநுஜனும். மேலே குறித்த விடை ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சன பத்ராதிபர்க்காகையால் அவருடைய பத்ரிகை லக்ஷ்யமாகாது. ஸ்ரீ ராமாநுஜனைக் குறிக்கொண்டே இது எழுதப்பட்டிருக்க வேணும். ஆரஅமர விடையிறுக்கிறோமிதற்கு.

உலகத்தில் விவாதத்தில் காணும் விஷயங்கள் பல துறைகளிலாகும். சைவ வைஷ்ணவ விவாதம், த்வைதாத்வைத விவாதம், தென்கலை வடகலை விவாதம் போன்ற விஷயங்களில் மத்யஸ்த்தர்களைத் தேர்ந்தெடுப்பது ச்ரமப்படும். பொதுவான விஷயங்களில் விவாதம் விளைந்தால் மத்யஸ்த்தர்கள் மலிவாகக் கிடைப்பர்கள். இங்கு என் வரையில் தெரிவிப்பதைக் கேண்மின். தென்கலை வடகலை விஷயமான விவாதம் எனது நூல்களில் உள்ளவை கிடக்க. ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயமெல்லாம் ஒன்று கூடி விமர்சிக்கத்தக்க விஷயத்தில் நான் வெளியிட்டிருக்கிற ஆராய்ச்சிநூல் ஒன்றை இங்கு ப்ரஸ்தாவிக்கிறேன்.

1969௵ மே மாதத்தில் ஸ்ரீ ராமாநுஜன் 245Bல் வெளியிட்டுள்ள விஷயத்தை இங்கெடுத்துக் காட்டுகிறேன். இதில் தென்கலையார் வடகலையார் என்கிற வாசியின்றிக்கே யாவரும் உட்புகுந்து விமர்சிக்கவேண்டும். விமர்சித்தால் ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியர் எழுதுகிற எந்தவிஷயமும் ஆர்ஜவத்துடன் எழுதப் படுகிறதேயொழிய ஆக்ரஹங்கொண்டு எழுதப்படுவது ஓரெழுத்துமில்லை என்று வைணவவுலகம் முழுவதும் பறை சாற்றியே தீரும்.

(ஸ்ரீ ராமாநுஜன் 245Bயில் வெளிவந்துள்ள விஷயமாவது)

இக்கச்சிமாநகரில் ப்ரக்க்யாதராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி சிலபலவாண்டுகட்கு முன்பு பாடசோதனம் என்றொரு புத்தகத்தை வடமொழியில் எழுதி அச்சிட்டு வெளியிட்டிருந்தார். (அதன் விஷயமென்னவென்றால்) கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் முதலான காலக்ஷேப க்ரந்தங்களில் சிலபல தவறுகள் ஓலைப்பேடுகளிலுங்கூட சோதிக்கப்படாமல் ஏறிவிட்டனவாகவும்,

http://acharya.org

அவற்றைத் தாம் பெரும்பாலும் தம்முடைய புத்திபலத்தாலே சோதிப்பதாகவும் காட்டி "அது அப்படியிருக்கவேணும், இது இப்படி யிருந்தால் நன்றாயிருக்கும்: அதை அப்படித் திருத்தலாமென்று தோன்றுகிறது. இதை இப்படித் திருத்தினலொழியப் பொருந்தாது" என்று இங்ஙனே பலபல வகையாகவெழுதி, நெடுங்காலமாகப் பெரியோர்கள் பேணிவந்த பாடங்கள் பலவற்றை சின்னபின்னமாக்கியிருந்தார். அது அடியேனுடைய பார்வைக்கு வந்தது. "பல பெரியார்கள் பக்கலிலே இங்ஙனே பாடம் கேட்டிருக்கிறேன்" என்றோ, "தாளகோசங்களில் இங்ஙனே பாடம் காண்கிறது" என்றோ அந்த ஸ்வாமி தெரிவித்திருந்தாராகில் உபேக்ஷித்திருக்கலாம். அப்படியல்லாமல் தாம் ஊஹிப்பதாகவும், தம்முடைய ஆலோசனையில் இப்படியிப்படி தோன்றுவதாகவுமே யெழுதியிருந்தபடியால் இதை விமர்சித்தேயாக வேணுமென்று தோன்றிச் சிரமப்பட்டுப் பல ஸ்ரீகோசங்களையாராய்ந்ததில் அந்த பாடசோதன க்ரந்தம் மறுக்கத்தக்கதே யென்று நிச்சயிக்கப்பட்டு "பாடசோதந பரீக்ஷா" என்கிற மறுப்பு நூலை விரிவாகவே யெழுதி வெளியிட்டேன்.

(1) ஸ்ரீபாஷ்யாதிகள் தெலுங்கு, க்ரந்தம், நாகரி ஆகிய மூன்று லிபிகளில் வெகுகாலமாகவே பதிப்பேறியிருப்பதால் அவற்றில் திருத்தம் பெற்றிருக்கிற பல பாடங்களைத் தாம் திருத்துவதுபோல் காட்டுகிறார்: (2) அவசியம் திருத்தவேண்டிய இடங்களைத் திருத்தாமலே விட்டிருக்கிறார்: (3) இவர் புதிதாகத் திருத்தியிருப்பவையெல்லாம் விபரீதங்கள், ஒன்றுகூட ஏற்கத்தக்க திருத்தமன்று: ச்ருதப்ரகாசிகையை நோக்காமலே சில திருத்தங்கள் செய்திருக்கிறார்—என்று இவ்வகையில் விஷயங்களைக் கண்ணாடிபோல் எடுத்துக்காட்டி அவருடைய சோதனம் அப்ராமாணிகம் என்று முடித்திருந்தேன். அந்த பரீக்ஷாக்ரந்தம் வைதிக மநோஹரா மூலமாக உலகம் பரவியிருந்தது. [இது 1945–ஆம் வருஷத்தில்.]

"ஜ்ஞாதாவாயும் உத்தமாச்ரமியாயுமிருக்கிற மஹாஸ்வாமியின் க்ரந்தத்தை இவன் ஏதோ அஸூயையினால் பழித்துவிட்டான்; இது ஸ்வாமிக்கு மிகவும் அவஜ்ஞாவஹமல்லவா? இதை நாம் வெறுமனே விட்டுவிடலாகாது; ஸபை கூட்டி இவனை வரவழைத்து வாய்மாளப் பண்ணியேயாகவேணும்" என்று கனத்த ரோஷத்தோடு தீவ்ரமான முயற்சிகொண்ட அந்த ஸ்வாமியின் சிஷ்யவர்க்கங்கள் ஒரு நாளைக் குறிப்பிட்டு, தேவப்பெருமாள் ஸன்னிதி நூற்றுக்கால் மண்டபத்தில் வித்வத்ஸபை கூட்டுவதாக விளம்பரம் வெளியிட்டு அடியேனுக்கும் அறிவித்தார்கள். குறிப்பிட்ட ஸமயத்தில் அங்கு விடைகொண்டேன். மண்டபம் நிறையப் பல வித்வான்கள் கூடியிருந்தார்கள். இப்போது ஸ்ரீமதஹோபிலமட ஆஸ்தானத்தை யலங்கரித்தருளாநின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. ஸ்ரீமத் அழகியசிங்கர் [அப்போது க்ருஹஸ்தாச்ரமியாய்] அந்த ஸதஸ்ஸை அலங்கரித்தருளியிருந்தபடி. [இதில் அடியேன் எழுதும் விஷயங்களில் ஏதேனும் பொய்ம்மையிருப்பதாகத் தோன்றினால் அந்த மஹா ஸ்வாமி மூலமாக மெய்ம்மையுணரலாமென்றே ஸ்ரீஸ்வாமி திருநாமத்தை இங்கு நிர்தேசித்தபடி.] பூர்வாச்ரமஸ்த கோழியாலம் ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் உபாத்யாயராயிருந்த ஸ்ரீமஹுபயவே. (கீர்த்திமூர்த்தியான) இளங்காடு. ரங்காசாரியர் ஸ்வாமி ஸதஸ்ஸுக்கு அக்ராஸனாதிபதியாக வரிக்கப்பட்டிருந்தார். கோழியாலம் ஸ்வாமியின் சோதனங்களையெல்லாம் யுக்தமென்று ஸ்தாபிப்பதற்காக அவ

http://acharya.org

ருடைய அந்தேவாஸிகளில் தலைவரான ஸ்ரீமதுபயவே. உத்தமூர். வீரராகவாசாரியர் ஸ்வாமி வெளியூரிலிருந்து ஸதஸ்ஸுக்கு வரவழைக்கப்பட்டிருந்தார்.

ஸதஸ்ஸு ஆரம்பமாவதற்குமுன்னே அடியேனுடைய பாடசோதன பரீக்ஷையில் அது தவறு, இது தவறு என்று சில வித்வான்களிடம் பேசிக்கொண்டிருந்தாரவர். பிறகு ஸதஸ்ஸு ஆரம்பமாயிற்று. அடியேனுடைய பரீக்ஷா க்ரந்தத்தை முன்னுடியே பல வித்வான்களுக்கு ஸமர்ப்பித்திருந்தேனுதலால் அவரவர்கள் முன்னமே கடாக்ஷித்திருந்து விமர்ச வைகரியில் அடியேனைச் சில கேள்விகள் கேட்கவும் அடியேன் விடை கூறவுமாக நடந்துகொண்டிருந்தது. பிறகு ஸமாதானம் சொல்ல வேண்டிய ஸமயம் அணித்தாக, ஏழெட்டு நிமிஷங்களுக்கு முன்னமே உத்தமூர் ஸ்வாமி யெழுந்து சென்றுவிட்டார். திரும்பி வருவரென்றே ப்ரதீக்ஷித்திருந்தார்கள் வித்வான்கள். மேற்கே தேரடியருகில் சென்றுகொண்டிருக்கிறுரென்று சிலர் சொல்லக் கேட்டபின் ஸதஸ்ஸு விஸர்ஜனம் செய்யப்பட்டது. அவர் எழுந்து சென்றதற்குக் காரணம் இன்னதென்று ஒருவருமறிந்திலர். தம்முடைய கக்ஷிக்கு அனுகூலரான வித்வான் ஒருவருமிருந்திலரென்று சென்றதாகப் பிறகு பேசிக்கொண்டார்கள். அதைப்பற்றி இப்போது விசாரலேசமுமில்லை. அச்செய்திகளை அனைவரும் அறவே மறந்துவிடலாம். ப்ரக்ருதம் அடியேன் விஜ்ஞாபிக்கும் விஷயத்தைக் குறிக்கொண்மின்.

ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி திருநாடலங்கரித்துவிட்டாலும், அவருடைய பாடசோதன க்ரந்தமோ, அதற்கு மறுப்பாக அடியேனெழுதிய பரீக்ஷாக்ரந்தமோ மறையவில்லையே! உத்தமூர் ஸ்வாமி ச்ருதப்ரகாசிகையோடு ஸ்ரீ பாஷ்யத்தை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறுரென்பதை அறியப்பெற்ற நாம் கோழியாலம் ஸ்வாமியின் பாடசோதன க்ரந்தத்தில் மிகவும் யுக்தமானதென்று காட்டப்பட்டுள்ள பாடங்களை இந்தப் பதிப்பில் இவர் ஆதரித்து வெளியிட்டிருக்கிறுரா? நம்முடைய மறுப்புகளுக்கு ஏதேனும் விடை கூறியிருக்கிறுரா? என்று பார்க்கத் தோன்றிப் பரிசீலித்துப் பார்க்கையில், ஸ்வாசார்யருடைய சோதனங்களை த்ருணீகரித்துத் தள்ளினதோடு அடியேன் பரீக்ஷாக்ரந்தத்தில் ஸ்தாபித்த பாடங்களையே பெரும்பாலும் பதிப்பித்திருக்கும்படியைக் கண்டேன். "ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே" என்ற தேசிக திவ்ய ஸூக்திப்படி ஆசார்யரையே பரதெய்வமாகக் கொண்டிருக்குமிவர்—அவருடைய உபதேசங்களையே அருமருந்தாகக் கொண்டிருக்குமிவர் என்னசெய்யவேண்டும்? ஆசார்யர் திருத்திக்கொடுத்த பாடங்களைத் தாம் ஆதரித்தமை காட்டவேண்டும், ப்ரதான பாடமாகப் பதிப்பியாவிடினும் (புட்நோட் கொடுக்கும் முறையில்) பாடாந்தரமாகவாவது பதிப்பித்திருக்க வேண்டாமா? (கோழியாலம்) ஸ்வாமி திருத்திய பாடங்கள் தவறு என்பதை நான் ஸாமாந்யமாகக் காட்டியிருக்கவில்லை; ஒவ்வொன்றிலும் விபுலமான நிருபணங்களை அசைக்கமுடியாதபடி செய்திருக்கிறேன். ஏதேனுமொருவகையில் அவற்றுக்கு மறுப்பு வெளியிட்டிருக்கவேண்டும். ஸர்வாத்மநா கைகூப்பிநிற்கும் நிலையே காண்கிறது. இவ்விஷயங்கள் வித்வான்கள் விமர்சிக்கவேண்டியவை. ஆசார்யர் திருத்தினபாடங்களை இவர் கைக்கொள்ளாமல் தள்ளினது தவிர,

http://acharya.org

ஸ்வேச்சையாகச் சில மாறுபாடுகளையும் [சில என்று ஏன்? பல மாறுபாடுகளை] செய்திருக்கிறார். அவற்றிலும் சில எடுத்துக்காட்டியிருக்கிறேன். (என்னுடைய வடமொழி நூலில்) ஸ்வாசார்யர் திருத்திக்காட்டின பாடங்களை ஏன் கொள்ள வில்லை? என்று கேட்டால், "உலகுக்கெல்லாம் உபயோகப்படக்கூடிய ஸ்ரீகோசத் தில் விவாதாஸ்பதமான பாடங்களை யதேஷ்டமாகப் புகுத்தலாகாதென்கிற எண் ணத்தினால்—என்று இவர் விடைகூற முடியாதபடிக்கன்றோ இவருடையபதிப்பு அமைந்துள்ளது!

உலகமறிய ஒன்றே காட்டுகிறேனிங்கு. ஸ்ரீ பாஷ்யோபக்ரமத்தில் ஸமாஸ விஷயமான சங்காஸமாதான ஸ்தலத்தில் "ப்ரதிப்ரஸவ ஸம்பவாத்" என்றே உலக மெங்குமுள்ளபாடம். ஒரு தாளகோசத்திலிருந்து அடியேன் உபதேசம் பெற்ற பாடம் ஸம்பாவாத் என்பது. இப்பாடத்தை அடியேன் தவிர வேறுயாரும் ப்ரஸ்தா வித்ததில்லை. 'இது இவன் ஸ்வதந்திரமாகக் கல்பித்தபாடம்' என்று வித்வான்கள் இற்றைக்கும் விவாதப்பட்டே வருகிறார்கள். ஏறக்குறைய ஐம்பது வருஷமாக இது விவாதத்திலுள்ளது. இப்படியிருந்தும், இவர் ச்ருதப்ரகாசிகாயுக்த ஸ்ரீ பாஷ்யப் பதிப்பில் ஸம்பவாத் என்கிற பாடத்தை அறவே தள்ளி ஸம்பாவாத் என்கிற பாடத் தையே நிஸ்ஸபத்நராகப் பதிப்பித்துவிட்டார். 'ப்ரதிவாதிபயங்கரருடைய பாடம் பேர்க்கவும் பேராதது' என்பதே இவருடைய திடநம்பிக்கை. இந்த நம்பிக்கை யினால்தான ஸ்வாசார்யர் சிக்ஷித்த பாடங்களையும் தள்ளி நான் ஸ்தாபித்த பாடங் களையே கொண்டிருக்கிறாரென்பதில் வாய்திறக்க வழியிடையாது. ஸம்பவாத் என்ற பாடத்தைக் கோழியாலம் ஸ்வாமியும் திருத்தவில்லை.

இரண்டு விஷயங்களை முக்கியமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (1) கோழியாலம் ஸ்வாமியின் பாடத் திருத்தங்கள் மிகவும் அநியாயனவையென்று நான் எழுதிப் பிரசுரஞ் செய்ததை (அக்காலத்தில்) மறுக்க முயன்றவிவர், இத்தனை காலம் பொறுத்து "முன் மறுக்க முயன்றது பிசகு; பரீக்ஷாக்ரந்தத்திலெழுதியுள்ள தெல்லாம் பாராட்டத்தக்கதே" யென்று தமது பதிப்பினால் கல்வெட்டாக்கி வைத்ததனால்—இதேபோல் என்னுடைய எந்த நிரூபணமும் ப்ராமாணிகமே, அசைக்க முடியாததே—என்று நிலைநாட்டி வைத்தாராகிறார். (2) கோழியாலம் ஸ்வாமி புகுத்தின பாடங்களை அவருடைய அந்தேவாஸியான இவர் திரஸ்கரித்தது போல, இவர் இப்போது புகுத்தின பாடங்களை இவருடைய அந்தேவாஸியென்று ஒருவர் கிளம்பித் திரஸ்கரிக்கவே போகிறார். ஆஸ்தான பரம்பரைபோல இதுவும் பரம்பரையாக வருவது அழகியதே.

ஆசார்ய ஸூக்திரக்ஷா என்கிற வடமொழி நூலை அடியேன் நேற்று எம்பெருமானார் மஹோத்ஸவத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் எழுதிக்கொண் டிருக்கையில் அடியேனுடைய கிரந்தந ஸௌஹ்ருந்மணியும் ஸஹ்ருதயரு மான ஸ்ரீமதுபயவே (திருவெவ்வுளூர்) பழவேரி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியாத் ருச்சிகமாக அங்கே காட்சிதந்து "இது என்ன லேகனம்" என்று கேட்கையில் ஒருமணி காலம் விஷயங்களை விரிவாக விஜ்ஞாபித்து, இதை விரைவில் அச்சிட்டு ஸ்ரீமத் பரமஹம்ஸை. அழகியசிங்கர் ஸன்னிதிக்கும் அவ்விடத்து ஆஸ்தான வித்வான்

http://acharya.org

களுக்கும் அனுப்புவேன்; விஷயங்களை ஆழ்ந்து விமர்சிக்க ப்ரார்த்தித்ததாக விஜ்ஞாபிக்கவேணுமென்றேன். ஓமென்றிசைந்து சென்றார். ஸ்ரீமத் பரமஹம்ஸ. ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதியிலும் இங்ஙனே ப்ரார்த்திக்கிறேன்.

மற்றும் அடியேனுக்குப் பரமாப்தர்களாய் விளங்கும் உப்பிலியப்பன் ஸன்னிதி நவநீத ஸஹோதரர்கள், வைகநல்லூர் நடாதூர் ஸ்வாமி, மதுராந்தகம் பாதூர் ஸ்வாமி, கோமல் ஸ்வாமி, திருப்பதி கலாசாலையில் விளங்கும் வித்வான்கள், திருவரங்கம் பெரியகோயிலில் திகழும் நோதவத்தித் தூய்மறையோர், சென்னையில் வாழும் ப்ரவசனப்ரவீணர்கள் பலரையும் இங்ஙனே ப்ரார்த்திக்கிறேன். ஆந்தராளிக ஸம்ப்ரதாய விஷயமாக இருந்தால் இப்படி அடியேன் ப்ரார்த்திக்க இடமில்லையாகும். ஒருதலையான அபிமானத்தினால் உண்மையை வெளியிடமுடியாமல் தளர வேண்டியிருக்குமதில். இதில் கலாவைஷம்யம் பாராட்ட ப்ரஸக்தியின்மையால் தடஸ்தபாவத்தை யவலம்பித்து, தத்துவத்தை வெளியிட முடியுமென்று நம்பிப் ப்ரார்த்திக்கிறபடி. வெளியிடாவிடினும் அவரவர்களது உள்ளமுணருமத்தனையே போதும்.

மேலே ப்ரஸ்தாவித்த ஆசார்ய ஸூக்திரக்ஷா என்னும் ஸம்ஸ்க்ருத நூலின் ஸாரத்தை ஸம்வாதரூபமாக வெளியிடுகிறேன்.

> **வினாக்கள்**—மத்யஸ்த வித்வான்களினுடையவை.
> **விடைகள்**—உத்தரார்ப் பண்டிதருடையவை.

1. **வினா**:—அந்தரத்வாதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் "ந ச த்வயோரநயோ:" என்று தொடங்கும் வாக்கியத்தில் (**த்வயோ:**) என்கிற பதம் இருமுறை விழுந்திருப்பது பிசகென்றும், அது ஒரு முறைதானிருக்கத் தக்கதென்றும், மற்றொரு முறையிருப்பதை அடித்துவிடவேணுமென்றும் கோழியாலம் ஸ்வாமியின் பாடசோதனத்தில் இருக்கிறதே, அதை என்ன பண்ணினீர்? அடித்துவிட்டீரா?

விடை:—அங்கு ச்ருதப்ரகாசிகையில் (**த்வயோ:**) என்பது இருமுறையிருப்பதை நிலைநாட்டி, ஒன்று வாக்யபரமென்றும் மற்றொன்று உபாஸநபரமென்றும் விவரித்திருப்பதாக நம் அண்ணா தமது பரீக்ஷாக்ரந்தத்தில் மறுவாய்திறக்க வழியில்லாதபடி நிரூபித்திருப்பதனால் கோழியாலம் ஸ்வாமி திருத்தியது தவறென்று துணிந்து அண்ணா நிலைநாட்டியபடியே அச்சிட்டிருக்கிறேன். வேறு என்ன பண்ணமுடியும்?

2. **வினா**:—தக்ஷிணாயநாதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் **"ப்ரஹ்ம ப்ரபித்ஸத:"** என்றிருப்பது வ்யாகரண விருத்தமென்றும், (ப்ரபித்ஸத:) என்பதை (ப்ரபித்ஸமானஸ்ய) என்றாவது (ப்ரபித்ஸோ:) என்றாவது திருத்தவேண்டுமென்றும் **உமது ஆசிரியர்** எழுதி யிருந்தாரே; அங்கு என்ன செய்தீர்?

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

விடை:—இப்படி ஸ்வேச்சையாகத் திருத்துவது ஸாஹஸமென்றும், திருத்த வேண்டுவது அவசியமானால் (ப்ரபித்ஸத:) என்பதை (ப்ரேப்ஸத:) என்று திருத்துவதோ (பாடாந்தரமாகக் கொள்வதோ) பொருத்தமென்றும் உபபத்தியோடு அண்ணா எழுதியிருந்தபடியால் அது தான் மிகவும் யுக்தமென்றுகொண்டு அப்படியே அச்சிட்டேன்.

3. வினா:—ஈக்ஷதிகர்மாதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் "ஈக்ஷிது: ஸ்தாநதயா நிர்திஷ்ட:" என்றவிடத்தில் (ஈக்ஷிது:) என்பது அந்வயிக்கமாட்டாதென்றும் (ஈக்ஷிதஸ்தாநதயா) என்று திருத்தியே யாகவேண்டுமென்றும் (தத்ஸ்தாநதயா) என்றுவது திருத்தியாக வேண்டுமென்றும் கோழியாலம் ஸ்வாமி எழுதியிருந்தாரே, அப்படியே திருத்தினீரா?

விடை:—இங்கு ஸ்வாமி ஏதோ மருண்டுவிட்டாரென்றும், மறுபடியும் ஸ்ரீபாஷ்யபங்க்திகளை ஸேவித்தால் தெளிவு பிறக்குமென்றும், (ஈக்ஷிது:) என்றுதானிருக்கவேணுமென்றும் அண்ணா நன்கு விளக்கியிருப்பதனால் உண்மையில் இங்கு ஸ்வாமி ப்ரமித்துவிட்டதாகவே தெரியவந்தபடியால் ஸ்வாமி திருத்தின பாடத்தை உபேக்ஷிக்கவே நேர்ந்துவிட்டது.

4. வினா:—இந்த்ரப்ராணாதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் உபாத்தமான "த்வமேவ மே வரம் வ்ருணீஷ்வ யம் த்வம் மநுஷ்யாய ஹிததமம் மந்யஸே" என்கிற ச்ருதி வாக்யத்தில் (த்வமேவ) என்பதை (தமேவ) என்று திருத்தவேணுமென்று ஸுப்ரஸித்தரான ஓர் ஆசாரியர் உபதேசித்ததாக உம்முடைய ஆசாரியர் எழுதியிருக்கிறாரே, அதை அப்படியே திருத்தினீரா?

விடை:—அந்தோ! எப்படித் திருத்தமுடியும்? மேலே (யம்) என்றிருப்பதற்குச் சேர, முன்னே (தம்) என்றிருக்கவேணுமென்று ஸ்வாமி நினைத்துவிட்டார்; அது பிசகென்று அண்ணா வெகுயுக்தமாக நிரூபித்திருப்பதால் இதுவே சிறந்த ஆசார்யோபதேசமென்று கொண்டேன். இது ச்ருதிவாக்யமென்பதை ஸ்வாமி சிந்தியாமற்போனார், திருத்துவது ஆத்மஸாக்ஷ்யத்திற்கு ஒவ்வாததோடு அபவாதத்திற்கும் ஹேதுவாகுமென்று விட்டிட்டேன்.

5. வினா:—ப்ரயோஜநவத்த்வாதிகரணத்தில் "வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாதித்யாதி ஸூத்ர ஸ்ரீ பாஷ்யத்தில் ஐந்தாறு பங்க்திகளுக்குப் பிறகு "**தத்ரோத்தரம்—ந ஸாபேக்ஷத்வாத் இதி**" என்றுள்ள ஸ்ரீ ஸூக்தியை அங்கிருந்து பெயர்த்து ஸூத்ரத்திற்குமுன்னே கொண்டு தள்ளவேணுமென்று உமதாசிரியர் எழுதியிருந்தாரே, அப்படியே தள்ளினீரா?

விடை:—தள்ளினதுண்டு; ஸ்ரீபாஷ்யஸூக்தியைத் தள்ளவில்லை; அஸ்மதாசார்யோக்தியைத்தான் தள்ளநேர்ந்தது. பரீக்ஷையில் அண்ணா எழுதிய மறுப்பு மறுக்க முடியாமலிருப்பதனால்.

Released by Maran's Dog ,Toronto, Canada

6. வினா:—ஸம்பந்தாதிகரணத்தில் "ப்ருஹதாரண்யகே ச்ரூயதே" என்று ஸ்ரீ பாஷ்யோபக்ரமமிருப்பதில் "ச்ரூயதே" என்கிற க்ரியாபதம் அநந்விதமாகையால் அதைத் தூக்கியெறிய வேண்டியதென்று கோழியாலம் ஸ்வாமி யெழுதியிருக்

http://acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada

கிருரே, அதைத் தூக்கியெறிய வேண்டியதென்று கோழியாலம் ஸ்வாமி யெழுதி யிருக்கிருரே அதைத் தூக்கியெறிந்தீரா?

விடை:—ஸ்வாமி யெழுந்தருளியிருந்தால் அவரைத் தூக்கியெறியலாம்; அவருடைய உக்தியைத்தான் தூக்கியெறியவேண்டும்படி அண்ணுவின் நிருபணமிருந்தது. என்செய்வேன்? ஆசார்யோக்தி திரஸ்காரபாபம் அபரிஹார்யமாயிற்று.

7. **வி:**—ரசனாநுபபத்த்யதிகரணத்தில் 'விப்ரதிஷேதாச்ச' என்கிற ஸூத்ர ஸ்ரீபாஷ்யத்தில் "பந்தமோக்ஷஸாதநாநுஷ்டாநம் மோக்ஷஞ்ச ப்ரக்ருதேரேவ—இத்யாஹ:" என்றிருப்பதில் "இங்கு இதிபதம் இருக்கத் தகாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்; த்விதீயையிருக்குமிடத்தில் அது இருக்கக்கூடாதாகையால்" என்று கோழியாலம் ஸ்வாமி எழுதியிருக்கிருரே; அந்த இதியை யெடுத்தெறிந்துவிட்டீரா?

விடை:—யதியிருந்தால் ஒருவாறு எடுத்தெறியலாம்; இதியின் உபபத்தியை அண்ணு வெகு ஸமஞ்ஜஸமாக நிரூபித்திருப்பதனுல் தெளிவுற்றேன். "அத்ர இதிபதம் ந ஸ்யாதிவ" என்றெழுதியிருக்கலாம் ஸ்வாமி; "ந ஸ்யாதிதி நிச்சீயதே" என்றெழுதினது அவஜ்ஞையாய்விட்டது. இங்கு அண்ணுவின் நிருபணம் அதிமநோஹரம்.

8. **வி:**—'விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம்' என்கிற அந்த ஸூத்ர பாஷ்யத்திலேயே 'ஸங்கிதே: *அகிஞ்சித்கரத்வம்*' என்றிருப்பதை அகிஞ்சித்ருபத்வமென்று திருத்தவேணுமென்று நிச்சயமாகச் சொல்லுவேனென்று கோழியாலம் ஸ்வாமி யெழுதியிருக்கிருரே; இந்த நிச்சயத்தையாவது நிலைநாட்டினீரா?

விடை:—எந்த நிச்சயமும் காசுக்குதவாததாயிற்றே. அதைப் பாடாந்தரமாகப் போடவுங்கூட நெஞ்சாலும் நினைக்கமுடியாதபடியன்ரே அண்ணு வரைந்திருக்கிருர்.

9. **வி:**—ஸஹகார்யந்தர வித்யதிகரணத்தில் ஸித்தாந்தத்தில் "ச்ரவணமநநாப்பாம் ப்ராப்தம் வேதநம் ப்ரதிலப்ய இத்யர்த்த:" என்றதில் ப்ராப்தம் என்றதை அப்ராப்தமென்று பெரியார்களின் உபதேசத்தைக்கொண்டு அண்ணு திருத்தியிருந்தாரே; பாவப்ரகாசிகையில் ப்ராப்தம் என்கிற பாடம் ஆதரிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு கோழியாலம் ஸ்வாமி "ப்ராப்தமென்றிருந்தாலும் அப்ராப்தமென்றிருந்தாலும் உபய பாடத்தையும் நிர்வஹிக்கக் குறையில்லை" என்றெழுதியிருந்தாரே, அங்கு என் செய்தீர்?

விடை:—என்ன செய்யமுடியும்? ஆசார்யாபிப்ராயரக்ஷணம் அப்ராப்தமென்று முடித்தேன். அண்ணுவின் நிருபணம் அசைக்கமுடியாமலன்ரே இருக்கிறது.

10. **வி:**—ஸ்வாசார்யர் காட்டின திருத்தங்களை உபேக்ஷித்ததுபோல அண்ணு காட்டின திருத்தங்களையும் உபேக்ஷித்ததுண்டோ?

விடை:—அது எப்படி முடியும்? 'தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம' என்று அடியேன் விஜ்ஞாபிக்கவேணுமா?

http://acharya.org

முடிவான வினா:—அப்படியானால் அண்ணாவின் பரீக்ஷாக்ரந்தத்தை மறுக்க வேணுமென்று ஸதஸ்ஸுக்குச் சென்றீரே; எங்ஙனம் சென்றீர்?

விடை:—இப்போது நெஞ்சு தளும்பியிருக்கிறது; ஆலோசித்துச் சொல்லுகிறேன்.

ஒரு முக்கியமான விஞ்ஞாபனம்

வைகுண்டவாஸியான ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியின் பாடசோதன க்ரந்தம் வெளிவந்து ஏறக்குறைய முப்பது வருஷமாகிறது. அதற்கு மறுப்பான அடியேனுடைய நூல் அப்போதே விரைவில் வெளிவந்துங்கூட சில பல வித்வான்கள் கோழியாலம் ஸ்வாமியின் பாடசோதனத்தில் விச்வாஸத்தினால் தங்கள் தங்களுடைய ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களில் (அந்த ஸ்வாமியின் சோதனங்களை நம்பி) அப்படியப்படியே திருத்திக் கொண்டார்கள். பிறகு 1969-ல் பேருளாளனான பரமபுருஷன் உத்தமூர் ஸ்வாமியைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யமுத்ரணம் செய்வித்து அதில் கோழியாலம் ஸ்வாமி திருத்தின பாடங்களைத் தள்ளியும் என்னுடைய நிருபணங்களை ஆதரித்துப் பழைய பாடங்களையே சேர்த்தும் பதிப்பிக்கச்செய்தான். அதன் முன்பு திருத்திக்கொண்டவர்கள் யாவரும் மறுபடியும் அந்தத் திருத்தங்களை யடித்து பழைய பாடங்களையே ஆதரித்து வருகிறார்கள். அடியேனுடைய பாடசோதந பரீக்ஷா வெளிவராமலிருந்தால் ஸ்ரீபாஷ்யகார திவ்யஸூக்திகளுக்கு உலகில் எவ்வளவு க்ஷோபம் ஏற்பட்டிருக்கு மென்பதை மத்யஸ்தர்களான மநீஷிகள் விமர்சிக்கமாட்டார்களா? இப்படியாக அடியேன் செய்த காரியத்தை வேறு எவரேனும் செய்ய நினைத்ததுண்டோ? இது ஸம்ப்ரதாய பேதத்தைச் சேர்ந்த விஷயமன்று. ப்ராமாணிக வித்வான்கள் இந்த விஷய மொன்று கொண்டே என்னுடைய க்ரந்தங்கள் எதுவும் ப்ராமாணிகார்த்த ப்ரதிஷ்டாபனத்திற்காகவே ஏற்பட்டவை என்று திண்ணமாக எண்ணுவர்கள்.

மற்றொரு முக்கிய விஜ்ஞாபனம்

நிருஸிம்ஹப்ரியா பத்ராதிபர் தாமே (ஸம்புடம் 32, ஸஞ்சிகை 6ல்) புஸ்தக விமர்சனம் என்கிற பகுதியின் கீழே எழுதியிருந்த துர்பாஷணங்களுக்கு ப்ரத்யக்ஷர மறுப்பாக "நிருஸிம்ஹப்ரியா ஸமுத்போதனம்" என்னுங் கட்டுரை (16 பக்கங்கொண்டது; பல தத்துவங்களை விசதமாக விளக்குவது) ஸ்ரீராமாநுஜன் 302ல் வெளிவந்தது. அதைப்பற்றி இதுகாறும் இப்பத்ராதிபர் வாயைக் கையைத் திறந்தாரோ? முடிவாக இது கேளீர். ஸ்ரீமான் உ. வே. மதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமி என்பவர் சென்ற ஆவணி மாதத்தில் ஸ்ரீபெரும்பூதூர் எழுந்தருளியிருந்தபோது என்னுடைய கேள்விகளுக் கெல்லாம் ஆர்ஜவத்துடன் விடையிறுத்தார். அந்த வினாவிடைகளெல்லாம் ஸ்ரீ ராமாநுஜன் 300, 301-ல் வெளிவந்துள்ளன. அந்த மதுராந்தக ஸ்வாமியின் விடைகளினால் உலகம் ப்ரஸந்நமாகியுள்ளது அந்த விடைகள் தவறானவை என்று இந்த பத்ரா

http://acharya.org

திபர் கருதினால் அந்த விடைகளைக் கண்டித்து நம்முடைய வினாக்களுக்கெல்லாம் தகுந்த விடைகளை வெளியிடட்டும். உலகத்துக்குச் செய்யவேண்டிய உதவிகளில் இது முக்கியமானதல்லவா? ஸ்ரீதேசிக திவ்ய ஸூக்திகளின் உண்மைப் பொருள்களை விவரித்தும் ஸ்ரீதேசிக பக்தர்களான வித்வான்களுக்கு அவற்றை உணர்த்தியும் போருகிறோம்நாம் என்பதையே கொண்டு ந்ரு. பத்ராதிபர் எழுதியுள்ள அபசப்தங்களைக் கண்டு யாரும் நிலைகலங்கார்கள்.

கோழியாலம் ஸ்வாமியின் பாடசோதனம் வெளிவந்த காலத்தில் ஸ்ரீகாஞ்சியில் ப்ரசண்ட பண்டிதோத்தமராயும் பலகால் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் செய்தருளினவராயும் இருந்த ஸ்ரீமதுபயவே. நாவல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி அந்த பாடசோதனத்தைக் கண்டு மிகவும் சீற்றமும் வருத்தமும் கொண்டு ஒவ்வொரு வித்வானிடத்திலும் "நாமெல்லாரும் ப்ரவசனம் செய்து வருகிற ஸ்ரீபாஷ்ய பாடங்கள் அந்த பரம்பரையாக (கண்மூடித்தனமாக) நிகழ்வனவாய்க் கோழியாலம் ஸ்வாமியின் அபிப்ராயம் போலும்!" என்று ஸாதித்து வந்தாரே யொழிய அதைக் கண்டிக்கும்படி ஒரு வித்வானையும் தூண்டவில்லை. கண்டித்தெழுத ஒரு வித்வானும் முன்வரவுமில்லை. அப்போது நாம் முன்வந்தது அஹம்பாவத்தினாலன்று. லோகோபகாரத்திற்காகவே. கோழியாலம் ஸ்வாமி திருத்தினபாடங்களை அவருடைய அந்தரங்க சிஷ்யரும் ஆதரியாமல் அடியேனுடைய விமர்சங்களுக்கே மதிப்புக்கொடுத்து ஸ்ரீபாஷ்ய முத்ரணம் செய்ததை ப்ராமாணிகர்கள் உகந்து போற்றுகிறார்கள்.

ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபர்க்கு நல்லுபதேசம்

ந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகையோடு நமக்குத் தொடர்பு நெடுநாளாக இல்லாமையால் இந்த பத்ராதிபர் யாவர், இவருடைய திருநாமம் என்ன என்பதை இப்போது விசாரிக்க ப்ராப்தமாயிற்று. விசாரித்துத் தெரிந்துகொண்டேன். கீர்த்திமூர்த்தியான ஸ்ரீமத் பரமஹம்ஸ. இஞ்சிமேட்டழகிய சிங்கருடைய தௌஹித்ரர் என்று செவியுற்றேன். இவரோடு எனக்கு நெடுநாள் பழக்கமுண்டு. இவருடைய யோக்யதையின் அளவையும் அறிவேன். அளவைக்கடந்து இவர் எழுதுவது தகுதியற்றது. "ஸ்ரீ தேசிகனையும் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்த்த மஹாவித்வான்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கிவருவதாக" எழுதியிருப்பது விரலுக்குத் தகாத வீக்கம். இதுதான் கண்மூடித்தனம். இவ்விரண்டு விஷயங்களுக்கும் உண்மையான விடையை உலகமறிய விளம்புகிறேன். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி (வர்த்தமான) அழகியசிங்கர் நாலைந்து வருஷங்களுக்குமுன் ஒருநாள் முக்கூரிலிருந்து சொந்த திவ்யவாஹனத்தில் புறப்பட்டு பகல் 2 மணிக்கு காஞ்சீபுரம் எழுந்தருளியாயிற்று. அடியேனுடைய க்ருஹத்தினுள்ளேயும் ஸபரிவாரராக எழுந்தருளி யாயிற்று. ஸன்னிதி முன்பே வீற்றிருந்தாயிற்று. அப்போது அடியேன் பாடசாலையிலிருந்தேன். என்னுடைய பரமாப்தரான ஸ்ரீமான் தாசரதி ஐயங்கார் பாடசாலைக்கு ஓடிவந்து ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருப்பதைச் சொல்லி அடி

http://acharya.org

யேனே க்ருஹத்திற்கு அழைத்துச்செல்ல, ஸ்ரீ ஸ்வாமியை தெண்டன் ஸமர்ப்பித்து இருகரையுமழிக்கும் அந்த க்ருபா ப்ரவாஹத்தின் பெருமையைச் சிறிது நாழிகை வார்த்தையாடி அனுபவித்தானபிறகு ஸ்ரீ அழகிய சிங்கர் "ஸ்ரீ தேசிகனுடைய திவ்யமங்கள விக்ரஹம் இங்கு திருவாராதனத்தில் இருப்பதாகக் கேட்டிருக்கிறேன். ஸேவிக்கலாகுமோ?' என்று ஸாதிக்க, கோயிலாழ்வார் திருக்காப்பு நீக்க அஸமயமாய் இருந்தாலும் ஸ்ரீஸ்வாமி நியமனத்தையே தர்மசாஸ்த்ரமாகக் கொண்டு திருக்காப்பு நீக்கி ஸ்ரீ தேசிக திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் ஸேவிக்கும்படிச் செய்தேன். ஸேவித்து உகந்தருளியாயிற்று. விதுரர் திருமாளிகைக்குக் கண்ணன் எழுந்தருளியது போல ஸ்ரீ அழகியசிங்கர் அடியேனுடைய குடிலுக்குத் தாமே எழுந்தருளினபோது காஞ்சிபுரம் முழுவதும் அடியேனுடைய குடிலைச் சூழ்ந்துவிட்டது. இவ்விஷயத்தை அறியாதாரில்லை. இற்றைக்கும் ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில்கேட்டு உணரலாம். தேசிகனுடைய திவ்ய க்ரந்தங்களை வ்யாக்யானிப்பதும், அச்சிடுவதுமே பொழுதுபோக்காயிருக்கும் அடியேன் தேசிகனைத் தாக்கும் பாதகத்தில் சிறிதும் ஸம்பந்தம் உடையேன் அல்லேன். 'கண்மூடித்தனமாக' என்பது ந்ரு. பத்ராதி பருக்கே தகும். அடுத்த விஷயமும் கேண்மின். ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்த்த மஹாவித்வான்கள் யாவரும் அடியேனுக்கு உயிர்போன்றவர்கள். ஸ்ரீமத் உபயவே. மதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமியையும் (அபிநவ தேசிக) உத்தமூர் வீரராகவாசாரிய ஸ்வாமி மற்றும் மதுராந்தகம், திருப்பதி முதலான திவ்யஸ்தலங்களிலுள்ள வித்வான்களையும் அந்தரங்க ப்ரீதியுடன் போற்றிவருகிறேன். ஏதோ விஷய சர்ச்சை என்பது தனிப்பட்ட விஷயம். அபசாரோக்தி லவலேசமும் புகாதபடி ஆத்மாவைக் காத்து வருகிறேன். சில அறிவிலிகள் ப்ரதீபசலபந்யாயேந மாய்ந்து மடிந்துபோவது அவரவர்களுடைய தௌர்பாக்ய மத்தனை. கிம் பஹுநா? தென்னிந்தியாவிலுள்ள தென்கலை வித்வான்களையும், வடகலை வித்வான்களையும் கணக்கெடுத்தால் அடியேனுக்கு ப்ரியதமர்களாயும், மாநநீயர்களாகவு முள்ள வித்வான்கள் வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களாகவே தேறுவர்கள். ப்ரஸங்காத் இதையும் விஜ்ஞாபிக்கிறேன். ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமியின் அருமையான பல பதிப்புக்களை ஆராய்ச்சிசெய்ய ப்ராப்தமானபோது விமர்ச ஸரணியில் பலவும் எழுதலாயிற்று. அந்த ஸ்வாமி அவற்றைக் கடாக்ஷித்தருளியே யிருப்பர். ஆனாலும் ஆத்மகுண பரிபூர்ணராயும், ப்ராமாணிக சிகாமணியாயுமுள்ள அந்த மஹா ஸ்வாமி வரம்பு மீறி எதையும் எழுதாமல் தம்முடைய வைதுஷ்ய வைபவத்தை விளக்கி வருவதானது ந்ரு. பத்ராதிபர் போன்றவர்களால் அனுகரிக்க ஆசைப்படவும் முடியாதது. இது நெஞ்சு கனிந்து எழுதும் வார்த்தை.

இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளாக ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமி அருமையாகப் பதிப்பித்த (ஸவ்யாக்யான) பாதுகா ஸஹஸ்ர, யாதவாப்யுதய, ஸங்கல்ப ஸூர்யோதய, ஸுபாஷித நீவிகளை அடியேன் ஸ்ரீராமாநுஜனில் விமர்சிக்கும்போது அவற்றிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டியிருப்பது ப்ரஸித்தம். அதற்காக உத்தமூர் ஸ்வாமி திருவுள்ளம் கன்றினதும் இல்லை, அபசப்தங்களைக் கொட்டினதுமில்லை. அந்த ஸ்வாமியிடமிருந்து ப்ராமணிகத்வத்தைப் பயிலவேண்டுமிவர்கள்.

விவாத விஷயங்கள் ஸ்ரீராமாநுஜனில் இனி இடம்பெறமாட்டா.

http://ahobilavalli.org

குறைகள் கூறவேண்டிய அவசியம் தோன்றினால் உலகுக்கு உதவி செய்தே தீரு வேன்''—என்றேன். இந்த வார்த்தைகள் நடந்து நான்கு நாளாயிற்று. நேற்றைத் தபாலில் பாதுகா பத்ரிகை (சென்ற மாதத்தில் வெளிவந்தது) ஒரு ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணியினால் அனுப்பப்பட்டுக் கிடைத்தது. அத்துடன் ஒரு கடிதமும் கிடைத்தது; ''வரலாற்றில் பிறந்த வைஷ்ணவம்'' என்னுஞ் சுவடியைப்பற்றி ஸ்ரீமதாண்டவனுடைய திருவுள்ளம் இப்பத்ரிகையில் வெளிவந்துள்ளது. கடாக்ஷிக்கவேணும்'' என்றெழுதியிருந்தது. பத்ரிகையைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினேன். பத்ரிகையின் முகப்பில் ''ஸ்ரீமத் ஆண்டவன் அனுக்ரஹம்'' என்ற மகுடத்தின்கீழ் நான்கு அநுஷ்டுப் ச்லோகங்கள் வெகுநாளாகவே அச்சிடப்பட்டு வருகின்றன. முதன்முதலாக அவற்றை நாம் பார்த்தபோது ''ஸ்ரீரங்கேச ப்ரியா'' என்கிற மூன்றாவது சுலோகத்தில் ''பக்தி சித்தாநந்த ப்ரதாயிநீ'' என்றிருந்ததைக் கண்டோம்; அப்போதே பத்ராதிபர்க்கு எழுதினோம்—''பக்திசித்த... .. என்றிருப்பது அநந்விதம்; 'பக்த சித்த......' என்று ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹித்தருளியிருக்கலாம்; அச்சுத் தவறாக (பக்தி சித்த) என்று விழுந்திருக்கக்கூடும்; திருத்தினால் நலம். 'பக்தியையும் சித்தானந்தத்தையும்' என்று த்வந்த்வஸமாஸம் விவக்ஷிதமென்று ஏதாவது பதிலெழுதிக்கொண்டிருக்கவேண்டாம்; 'ஏழே பகவத்பக்திஜநநீ' என்றிருப்பதால் அது போதும்.........'' என்று தெரிவித்தோம். உடனே திருத்தி வெளியிட்டார்களப்போது. இப்போது பார்த்ததில் ''பக்தி சித்தானந்த'' என்று பழைய அபத்தமே காண்கிறது. 'இவன் தெரிவித்தா நாம் திருத்திக்கொள்வது!' என்று யாரேனும் கூறியிருக்கலாம். 'வாதத்திற்கு மருந்துண்டு; பிடிவாதத்திற்கு மருந்தில்லை' என்று வசனமுண்டே.

திருவயிந்திரபுரம் சேட்லூர் ஸ்வாமி ''நரஸிஹ்மாசாரியர்'' என்றெழுதி அச்சிட்டுக்கொண்டிருந்தார். நமக்கு அவரோடு ஸௌஹார்தமிருந்த காலத்தில் 'நரஸிஹ்ம' என்பது தவறு; (நரஸிம்ஹ) என்றெழுதவேணும்' என்று தெரிவித்திருந்தோம். யுக்தமென்று க்ரஹித்து அவ்வாறாகவே திருத்திக்கொண்டார். பிறகு வாதிப்ரதிவாதி பாவத்தினால் மாச்சரியம்விளைய, மீண்டும் பழையபடியே (நரஸிஹ்மாசாரியர்) என்றெழுதத்தொடங்கி ஆயுளுள்ளவரை அப்படியே எழுதித்தீர்த்தார். அவர் ப்ரும்மம்—ப்ரும்மம் என்றெழுதிக்கொண்டிருந்த விஷயத்திலு மிப்படியே.

இப்போது கையில்கிடைத்திருக்கும் சித்திரைமாதப் பாதுகையில் நமது கண்ணில்படும் பிழைகள் அபரிமிதம்; சிலவேயெடுத்துக்காட்டுவோம். (இதில் பக்கம் 6ல்) வாழ்த்துப் பாமாலை யொன்று வெளிவந்துள்ளது. அதில் ''காப்பு—நேரிசை வெண்பா'' என்கிற முதற்செய்யுளில் 'செந்திருவைச் சீர்குடந்தைச் செல்வியைச் சேவித்து உந்தியடைந்துய்யும் உலகு' என்னும் மூன்று நான்காமடிகளைத் தமிழர்கள் குறிக்கொள்ளவேணும். வெண்பாவுக்கு வெண்டளை உயிரானது. ''காய் முன் நேரும் மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது வெண்டளை''. மேலேகுறித்த வெண்பாவின் மூன்றாமடியின் முடிவு ''சேவித்து'' என்றுள்ளது. அடுத்த அடி ''உந்தி'' என்று நேரசையில் தொடங்கியுள்ளது. இங்கு மூன்றாமடியின் முடிவுசீர் மாச்சீரேயாகும். 'சேவித்து' என்று இவரெழுதிவிட்டாலும் இறுதியிலுள்ள துகரம்

http://acharya.org

நான்காமடியின் முதலெழுத்தேயாகும். (சேவித்) என்பது மாச்சீராகுமேயொழிய கவி நினைக்கிறபடி காய்ச்சீராகாது. இதற்கு அபவாத முண்டென்பரேல் அது மருளேயாகும். அன்றியும் மேற்செய்யுள்கள் பதினாறிலும் "அடைமின்மே அண்டமண்மே" என்றே இட்டிருப்பது தொடையழகுக்குப் பொருந்தாது. கருவிளம் காய்ச்சீர் பயில இயலாத விடம் அது என்றுணரவேண்டும்.

மேலும், பத்தாவது பக்கம் தொடங்கி வெளிவந்துள்ள திவ்யதேசானுபவம் என்கிற கட்டுரையில் திருமாலிருஞ்சோலைமலையை மதுரையரசனுகிய பாண்டியன் கொண்டாடினுன் என்பதற்கு ஆழ்வார் பாசுரங்கள் காட்டுமவர் "குறுகாத மன்னரைக் கூடுசலக்கி வெங்கானிடைச் சிறுகால் நெறியே போக்குவிக்கும் செல்வன்" என்கிற பெரியாழ்வார் பாசுரத்தை எடுத்து இது பாண்டியனுக்கிட்ட பாசுரமென்று கருதி ஏதோ எழுதியுள்ளார். அங்கு எம்பெருமான் விவக்ஷிதனேயொழிய அரசன் விவக்ஷிதனல்லன். "அலம்பாவெருட்டா" என்னும் அப்பதிகத்தில் பாசுரந்தோறும் இரண்டாமடியின் முடிவில் (மலை) என்று வந்துள்ளது. மலைக்கு ஸ்வாமியான எம்பெருமானே அங்கு ப்ரஸ்தாவிக்கப் படுகிறுன். ப்ரக்ருத பாசுரத்தில்.....:"போக்குவிக்கும் செல்வனை எம்பெருமான் எழுந்தருளியுள்ள மலை" என்பது பொருள்; வேறு வகையான பொருள் சிறிதும் சேராது. இங்கு மிக வருந்தத்தக்கமருள்.

அதிலேயே பக்கம் 32-ல் அமலனுதிபிரான் நான்காம் பாசுரக் கட்டுரையொன்றுள்ளது. அப்பாசுரத்தில் (வரி 4) 'அம்மான்' என்கிற மூலத்திற்கு "ஸ்வாமியுடன் பெருமானின்" என்று பொருள் வரையப்பட்டுள்ளது. இதற்கு என்ன அர்த்தம் என்று அவரே கூறவேண்டும் (சதுர) என்ற மூலத்திற்கு அர்த்தமெழுதும்போது "சதுர என்ற வடமொழி சதிர் எனத் தமிழில் திரிந்துவந்தது" என்றெழுதியுள்ளார். பாசுரத்திலும் அந்த வடசொல்லே யுள்ளதேயன்றி சதிர் என்றில்லை. *சதிரிளமடவாரை நினைத்துக்கொண்டு எழுதினுர் போலும்! 'ப்ரும்மம்' 'ப்ரும்மம்' என்கிற ப்ரமம் இவரையும் விடவில்லை. இத்தகைய சிந்தனைகள் எமக்கு நேற்றிரவு நெடுங்காலம் நிகழ்ந்தன. அச்சுத்தாளுக்குப் பஞ்சமான இக்காலத்தில் இவ்வளவே போதுமென்று நிறுத்திக் கொள்கிறேன். இதெல்லாங் கிடக்கட்டும். ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹமான முதல் ச்லோகத்தில் "பக்திசித்த" என்பதை "பக்தசித்த" என்று திருத்தினுல் பத்ராதிபருடைய ப்ராமாணிகத்வம் பொலியும். ஸ்ரீமதாண்டவன் ஸாக்ஷாத்தாகக் கடாக்ஷித்தருளினுல் இத்தகைய அவத்யங்களுக்கு இடமிராதென்று ஸ்ரீஸ்வாமிஸன்னிதியில் பலகால் விஜ்ஞாபித்திருப்பதை ஸ்மாரயே. அச்சாவதற்கு முன்பு ஸ்வாமி திருக்கண் சாத்தியருளினுல் ஒரு அவத்யமும் புகாதென்பது எமது திடநம்பிக்கை. இத்தகைய பிழைகளை அடியேன் தவிர வேறுயாரும் தெரிவிக்கத்துணிய மாட்டார்களாதலால் அடியேனுக்குப் பத்ரிகை அனுப்பாமல் நிறுத்திவைப்பது நன்றே. அடியேனுக்கும் ச்ரமம் குறையும். இப்போது டில்லிமாநகரில் Supreme Court Judge ஆக விளங்கும் உயர்திரு. A. அழகிரிசாமியவர்கள் பலவிடங்களிற் பேசியுள்ளார்—"தவருக யார் எழுதினுலும் P. B. A. ஸ்வாமி அதைக் கண்டிக்கத் தயங்கவேமாட்டார்" என்று. அதையே நினைப்பூட்டி நிற்கிறேன்.

http://acharya.org

அருளிச்செயல் ரத்னநிதி

(முன் தொடர்ச்சி)

125. தோள் கண்டார் தோளே கண்டார்

இது கம்பராமாயணம் உலாவியற்படலத்திலுள்ள செய்யுள் ஆகும். செய்யுள் வருமாறு.

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண்டாரை யொத்தார்."

ஆராவன்பிளையவனோடும் விச்வாமித்ர முனிவன்றன் வேள்வி காத்துப் பின் மிதிலை நகர்புக்க இராமபிரான் அம் மாநகர் வீதிகளில் உலாவியபோது அவனது தோளழகைக் கண்ட மாதர்கள் மற்றோர் அவயவத்தைக் காணகிலாமல் தோளழகை மட்டுமே கண்டுகொண்டிருந்தார்கள். வீரக்கழலணிந்த திருவடித் தாமரைகளைக் கண்ட மாதர்கள் திருவடியழகொன்றையே கண்டுகொண்டிருந்தனர். பெரிய திருக்கைகளைக் கண்டவர்களும் மற்றொன்றினைக் காணாதவராயினர். எவளோ வாளொண்கண்ணியருள் இராமனது வடிவழகு முழுதினையும் கண்டவர் ஒருவருமிலர். அங்ஙனம் இராமனது வடிவை முழுவதும் பாராமல் ஏகதேசமே பார்த்தவர்கள் எம்பெருமான் பெரிய விச்வரூபத்தைக் கொண்டு நின்றவக்காலத்தில் அவ்வுருவத்தின் ஒவ்வொரு பகுதியையே கண்டவர்களை யொத்தார்கள் என்பது இதன் பொருள்.

ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனியழகிலீடுபட்ட ஸ்ரீ பராசரபட்டர் "ஏகைகஸ்மிந் பரமவ்யவே அநந்த ஸௌந்தர்ய மக்நம் ஸர்வம் த்ரக்ஷ்யே கதமிதி முதா மா மதா மந்தசக்ஷு:" என்கிற ச்லோகத்தினால் தமது திருக்கண்ணை விளித்து, "வாராய் கண்ணே! அரங்கனுடைய ஒவ்வோரவயவமும் எல்லைகாண முடியாத அழகுடையதாதலால் ஒவ்வோரவயவத்திலும் ஆழ மூழ்கிக் கிடக்க வேண்டிய நாம் எல்லா அவயவங்களையும் எப்படி யநுபவிக்கப் போகிறோம் என்று கவலை கொள்ளாதே" என்று கூறி ஸகலாவயவங்களையும் முற்றூட்டாக அநுபவிக்கப்பெறும் உபாயமொன்று தெரிவித்தருளினர். அவ் வுபாயம் மிதிலாபுரியிலுள்ள மாதர்க்குத் தெரியாததலால் இராமனது ஓரவயவத்தைக் கண்டவர்கள் மற்றோரவயவத்தைக் காணமாட்டாது வருந்தினரெனப்பட்டது.

126. தௌவையாய்ப் புகழாய்ப் பழியாய்

திருவாய்மொழி ஆறும்பத்து மூன்றும் பதிகத்தில் ஆறும்பாட்டில் "பூவில் வாழ்மகளாய்த் தௌவையாய்ப்புகழாய்ப் பழியாய்" என்பது ஓர் அடி. இங்கு "பூவில் வாழ்மகள்" என்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியைச் சொல்லி, தௌவை என்று அவளுக்கு எதிர்த்தட்டான மூதேவியைச் சொல்லுகிறது. "உடனே புகழாய்ப் பழி

http://acharya.org

யாய்'' என்று கீர்த்தியையும் அபகீர்த்தியையும் சொல்லுகிறது. இப்படியாக இப் பதிகம் முழுவதும் ஒன்றோடொன்று சேராதவற்றைச் சேர்த்துச் சொல்லுகிறது. பதிகத்தின் தொடக்கமே "நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்'' என்றுள்ளது. நல்குரவு என்பது தாரித்ர்யம். செல்வு என்பது ஸம்பத்து. நரகு என்பது துக்கானுபவம்; சுவர்க்கம் என்பது ஸுகானுபவம். இப்படியே பதிகம் முழுவதும் முரண் தொடையாகவே அமைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட விருத்த விபூதி ஸமுச்சயம் எதற்காகவென்னில்; ஆரும்பத்தின் முதற்பதிகமான *வைகல் பூங்கழி வாயில் தூது விட்டார் ஆழ்வார். சிறந்த செல்வம் மல்கு திருவண் வண்டூரிலே தூதுவிட்டபடியாலே சிறந்த செல்வத்திலே கால் தாழ்ந்திருந்த எம்பெருமான் சிறிது தாமதித்து வந்தான். ஆழ்வார் அத்தாமதம் பொறுதாராய் ப்ரணய ரோஷம் தலையெடுத்துப் பேசத் தொடங்கினார். அது அடுத்த *மின்னிடை மடவார் பதிகம். அதில் ஊடல்ரஸம் மிகமிகத் தலையெடுத்துள்ளது. "என்னைமார் தன்ம பாவமென்னுர் ஒரு நான்று தடிபிணக்கே'' என்றுகூடப் பேசும்படியாயிற்று. ஊடலுக்கு அடுத்தபடி கூடல் நேர்ந்தே திருமாதலால் அந்தக் கூடல் நேர்ந்தபடியும் *மின்னிடை மடவார் பதிகத்திலேயே "நின்றிலங்கு முடியினாய்'' என்கிற பாசுரத்தால் ஸூசிப்பிக்கப்பட்டதாயிற்று. "எவ்விதத்திலும் இவனோடு கூடலாகாது என்று மிக்க உறுதியுடனிருந்த நம்மைக் கூடும்படியாக்கிக் கொண்ட இவனுடைய வலிமை என்னே!'' என்று விஸ்மயப்பட்ட ஆழ்வார்க்கு எம்பெருமான் தன்னுடைய அகடிதகடநா ஸாமர்த்யத்தை நன்கு காட்டிக் கொடுத்து அத்தன்மையனான தான் திருவிண்ணகரிலே நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறபடியையும் காட்டிக் கொடுக்க, ஆழ்வார் அது தன்னைப்பேசி இனியராகிறார் *நல்குரவும் செல்வும் என்கிற பதிகத்தில்.

127. நமனும் முற்கலனும் பேச

திருமாலையில் பன்னிரண்டாம் பாசுரத்தின் முற்பகுதி "நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி'' என்பது.

ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில் கூறப்பட்டுள்ள முத்கலோபாக்யானம் என்னும் கதை (திருநாம வைபவ ப்ரகாசகமானது) இதில் அநுபவிக்கப்படுகிறது. அதுவருமாறு;

முத்கலனென்பவன் பெரும்பாவிகளில் தலைவன்; அவன் ஒருநாள் கோதானம் பண்ணும்போது 'க்ருஷ்ணாய' என்று சொல்லி தானஞ்செய்தான். பின்பு அவன் மாண்டபிறகு யமகிங்கரர்வந்து நெருக்கி அவனை யமன்பக்கலிலே கொண்டுசெல்ல, யமன் இவனை எதிர்கொண்டு ஸம்பாவனை செய்தான். அதுகண்ட முத்கலன், "உன்னுடைய படர்கள் என்னை நெருக்கிக் கொண்டுவாராநிற்க, நீ என்னை கௌரவிப்பதற்கு என்னகாரணம்?'' என்று கேட்க; "உன்னுடைய மேன்மையை அவர்களுமறிந்திலர், நீயுமறிந்திலை,—க்ருஷ்ணநாமத்தை நீ ஒருகால் சொன்னாய் காண்!'' என்று யமன் அதனைப் புகழ்ந்துகூற, இப்படி ப்ரஸக்தானுப்ரஸக்தமான இந்த ஸம்வாதம் நரகானுபவம் பண்ணுகிறவர்களுடைய காதிலே விழுந்தவாறே அந்த

http://acharya.org

நரகந் தானே துக்காநுபவ நிலமாயிருந்த நிலைமாறி ஆநந்தாநுபவ நிலமாய்விட்டதென்றால் இத்திருநாமத்தின் வைபவம் எப்படிப்பட்டதாயிருக்கவேணும்? "என்னை நீ ஸத்கரிப்பதற்குக் காரணமென்ன?" என்று முத்கலன் கேட்க "முன்பு நீ க்ருஷ்ண நாமத்தைச் சொன்னாய்" என்று யமன் உத்தரமுரைத்த இவ்வளவேயாய்த்துப் பிறந்தது; யமன் தனக்குப் பாவநமாக அத்திருநாமத்தை உச்சரித்தவனல்லன்; முற்கலன் ப்ரார்த்திக்க அவனுக்கு உபதேசித்தவனுமல்லன்; நரகாநுபவம் செய்கிறவர்களின் காதிலே இதுவிழுந்து அவர்கள் உய்வுபெறவேணுமென்று நினைத்துச் சொன்னவனுமல்லன்; இனி இதனைக் கேட்டவர்களோ பாபம் பண்ணுகிற ஸமயத்திலே அநுதபித்து மீண்டும் ப்ராயச் சித்தம் செய்து கொள்ளக்கூடிய காலத்திலே கேட்டவர்களல்லர்; பாபத்தினுடைய பலன்களை அநுபவிக்கும்போதாயிற்றுக் கேட்டது. அப்போதுதானும் இச்சையோடு கேட்டாருமல்லர்; யாத்ருச்சிகமாகத் திருநாமம் செவிப்பட்டவித்தனையே. இப்படிப்பட்ட திருநாமமே இவ்வளவு பெருமையுடைத்தானால், பின்னை என் சொல்லவேண்டும்?

128. நாவகாரியம் சொல்லிலாதவர்..வாழ்திருக்கோட்டியூர்

பெரியாழ்வார் திருமொழியில் நான்காம்பத்தில் நான்காம் பதிகம் "நாவகாரியம் சொல்லிலாதவர்" என்று தொடங்குவது. இந்த முதற்பாட்டின் முன்னிரண்டடிகளையும் அடுத்த இரண்டாம் பாட்டின் முன்னிரண்டடிகளையும் ஆழ்ந்து நோக்கினால் நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் ஸுப்ரஸித்தமான ஓர் ஐதிஹ்யம் உள்ளுறையும் படியைக் காணலாம். அதைச் சிறிது விவரிக்கிறோம்.

எம்பெருமானார் பஞ்சாசார்ய பதாச்ரிதர் என்று ப்ரஸித்தர். அதாவது ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த ஐவரை யடிபணிந்து வாழ்ந்தவர் என்கை. "நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனை" என்கிற ஸ்ரீவசனபூஷண சூர்ணையின்படி ஸ்வாமிக்கு ஸாக்ஷாத் ஆசார்யர் பெரியநம்பியாவர். அவர் ரஹஸ்யார்த்தங்களைச் சிறிது உபதேசித்துவிட்டு ஸாதித்ததாவது "ஆளவந்தார் திருக்கோட்டியூர்நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த விசேஷங்களைச் சேமவைப்பாக வைத்தருளியிருக்கிறார். அவரிடம் சென்று தெளியக் கேட்பது" என்று. அப்படியே உரிய ஸமயம் பார்த்துத் திருக்கோட்டியூர்க்குச் செல்ல நினைத்த எம்பெருமானார் ஒன்றிரண்டு பர்யாயமன்றிக்கே பதினெட்டு பர்யாயம் நடந்தார் என்றும் வெகுசிரமப்பட்டு ரஹஸ்யார்த்தம் பெற்றார் என்றும் ப்ரஸித்தமான விஷயம். பட்டர் அருளிச்செய்த கோஷ்டீநாத ஸ்தவத்தில் "கோஷ்டீபூர்ண குருபஸத்தி குசலோ யாம் ஸ்வதாசேதிவாந்" இத்யாதி அருளிச் செய்திருப்பதும் ப்ரஸித்தம். அர்த்த கௌரவத்தையும் அதிகாரிகளின் அருமையையும் நோக்கி இதைக் கண்டபடி உபயோகித்து விடக்கூடாது என்றிருந்த ஆளவந்தாருடைய நெறியைப் பின்சென்று அவஸிலையாக உபதேசித்து விடாமல் மிகமிக ச்ரமப்படுத்தி உபதேசித்த திருக்கோட்டியூர் நம்பியைத் திருவுள்ளத்திற் கொண்டே பெரியாழ்வார் "நாவகாரியம் சொல்லிலாதவர் வாழ் திருக்கோட்டியூர்" என்றார். நாவகாரியமாவது நாவுக்கு அகாரியமானது. சீரிய

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

பொருளை அவலீலையாகச் சொல்லிவிடுவது நாவுக்கு அகாரியமாகும். அத்தகைய அகாரியமில்லாதவர் திருக்கோட்டியூர் நம்பியாவர். அடுத்த பாசுரம் "குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கநுகூலராய், செற்றமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்" என்பதாம். திருக்கோட்டியூர் நம்பி பக்கல் உபதேசம் பெற்ற எம்பெருமானாரை உளப்படுத்தியதாம் இச் சொல்தொடர். எம்பெருமானார் நம்பியின் நியமனத்தைக்கடந்து அவ்விடத்திலேயே ஸன்னிதி மேல் தளத்தில் சில ஆஸ்திகர்களை உட்காரவைத்துத் தாம் அருமையாகப் பெற்றவற்றை உபதேசித்தவராகையாலே அவர் குற்றவாளராக நினைக்கத் தக்கவராயினர். உண்மையில் தன்னலம் கருதாமல் பிறர் நலத்தையே கருதி உபதேசித்தவராதலால் அதைக் காட்டும் "குற்றமின்றி" என்பது. இதனையறிந்த திருக்கோட்டியூர் நம்பி ஸ்வாமியை அருகே வரவழைத்து விசாரிக்கையில் ஸ்வாமியின் விசாலமான திருவுள்ளத்தை உணர்ந்து அவர்க்கு 'எம்பெருமானார்' என்று திருநாமம் சாத்தியருளினர் என்பது ப்ரஸித்தம். அதனைத் தெரிவிக்கின்றது "குணம் பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய்ச் செற்ற மொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்" என்னுமளவும். அருளிச் செயல்களில் ஆங்காங்கு "அங்கமாறைந்து வேள்வி நால்வேதமருங்கலை பயின்று எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்" என்றும் 'தக்ககீர்த்தி அருமறையின் திரள் நான்கும் வேள்வியைந்தும் அங்கங்களவையாறு மிசைகளேழும்" என்றும் "நல்ல வந்தணர் மூன்று நால்வேதம் ஐவேள்வியோடாறங்கம் வல்லவந்தணர்" என்றும் திவ்யதேச வாஸிகளான பரமைகாந்திகளைப் புகழ்ந்து கூறுவதுண்டு. இங்குத் திருக்கோட்டியூர்ப் பதிகத்தில் அங்ஙனன்றிக்கே மேலே விவரித்த இரண்டு பாசுரங்களும் மிக விலக்ஷணமாக அவதரித்திருப்பதை நோக்குமிடத்து பவிஷ்யத்தான விஷயத்தையும் ஆழ்வார் கண்டு பேசினார் என்பது ஸ்பஷ்டமாகும். Released by Maran's Dog ,Toronto, Canada

129. நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டுமே

திருச்சந்த விருத்தத்தில் நூற்றேழாம் பாசுரமான "இரந்துரைப்பதுண்டு வாழி" என்கிற பாசுரத்தை எல்லாவிடங்களிலும் இரட்டித்து ஸேவித்துவரக் காண்கிறோம். ஏதாவது ஒரு திவ்யதேசத்தின் திருநாமமிருந்தால் இரட்டிப்பதுண்டு. இதில் ஒரு திவ்யதேச நிர்தேசமுமில்லை. என்ன விசேஷத்திற்காக இரட்டிப்பதென்று பார்த்தால் திருமழிசைப் பிரான் எம்பெருமானை விளித்து "வரந்தரும் திருக் குறிப்பில் வைத்ததாகில்"—தேவரீர் எனக்கு ஏதேனும் வரமளிப்பதாகத் திருவுள்ளம் பற்றினால்; "பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டும்"—நின்றவா நில்லா நெஞ்சு நிலைநின்று நின்னையே நிரந்தரம் நினைக்குமாறு வரந்தந்தருள வேணும் என்று ப்ரார்த்தித்தவிது மிகச் சிறந்த ஸம்ப்ரதாயார்த்தம். கூரத்தாழ்வான் இப்பாசுரத்தையே உட்கொண்டு வரதராஜஸ்தவத்தில் "வரத தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி மே நோதியாத்" என்றருளிச்செய்தார். பகவத் ப்ராவண்யம் தோற்ற நாம் செய்கிற மனோவாக்காயங்களாலாகும் காரியங்கள் அவனருளடியாகவே வருமவையென்கிற நுண்பொருள் சிந்திக்கத்தக்கது. Released by Maran's Dog ,Toronto, Canada

நிகமாந்தகுருஸூக்தி ரஸாஸ்வாதங்கள்

(யாதவாப்யுதயாதிகளிலிருந்து)

சிறு குறிப்பு:— நாம் சென்னைத் தொண்டமண்டலப் பள்ளி நிலயத்தில் (ஸ்ரீராமாயண பட்டாபிஷேகம் ஆன பிறகு) 1937வது வருடம் தொடங்கி ஏழு வருடம் ஸ்ரீபாகவத தசமஸ்கந்தத்தை சனிஞாயிறுதோறு மநுபவித்தோம். ஆயிரவர் அகங்குளிர, கண்ணன் திருவாய்ப்பாடியில் எழுந்தருளியிருக்கையில் நடந்த சரிதைகள் மட்டுமே அவ்வேழு வருடங்களில் அநுபவிக்கப்பட்டன. அவ்வநுபவத்தில் பூர்த்தியாகக் கலந்து கொண்டவர்களில், கீர்த்திமூர்த்திகளான ஸர். S. வரதாசார்யர், மஹர்ஷி வாஸுதேவாசார்யர், (M. D. Brothers) M. ஸுதர்சனமையங்கார் ஆகியோர் பரிகணிதர்களாவார்கள். அப்போது நிகழ்ந்த ஸ்ரீ பாகவதாநுபவத்தில் யாதவாப்யுதயாநுபவமே நல்ல சிறந்து விளங்கிற்று.

ஸ்ரீராமாயணமியற்றிய வான்மீகி முனிவர் தம்முடைய திறமையை அயோத்யா காண்டத்தில் அற்புதமாகக் காட்டினரென்பர் பெரியோர். அதேபோல் ஸ்வாமி தேசிகன் தம்முடைய திறமையை இம்மஹா காவ்யத்தில் நான்காவது ஸர்க்கத்தில் நன்கு காட்டியருளினர் என்பது அடியேனறிந்த தத்துவம். அப்போதைய ஸ்ரீபாகவதாநுபவத்தில் இந்த நான்காவது ஸர்க்கம் ஒரு சுலோகம் விடாமல் பூர்த்தியாக அநுபவிக்கப்பட்டது. பட்டர் தமது ஸ்ரீரங்கராஜஸ்தவத்தின் பூர்வ சதகத்தை நூற்றிருபத்தேழு சுலோகங்களினால் அமைத்ததுபோல, ஸ்வாமி தேசிகனும் இந்த நான்காவது ஸர்க்கத்தை 127 சுலோகங்களினால் அமைத்துள்ளனர். ஒவ்வொரு சுலோகமும் இன்சுவையே வடிவெடுத்தது. வ்யாக்யாதாவான அப்பய தீக்ஷிதருடைய அரஸிகத் தன்மையை ஆங்காங்கு எடுத்துக்காட்டி இன்சுவைப் பொருளை அடியேன் விவரிக்கும்போது மேலே ப்ரஸ்தாவித்த மஹான்கள் கண்ணும் கண்ணீருமாயிருந்த விருப்பை இற்றைக்கும் எற்றைக்கும் மறவேன். "யாதவாப்யுதயத்திற்கு தேவரீர் ஒரு வியாக்கியான மெழுதலாகாதோ?" என்றுகூட்டப் பலகால் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்போது அம்ருதலஹரீ பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தேனாதலால் அதில் பலபல சுவைப்பொருள்களை வெளியிட்டிருக்கிறேன். பிறகு ஸ்ரீ ராமாநுஜனிலும்.

சில வருடங்களுக்கு முன்பு யாதவாப்யுதயம் தீக்ஷிதவியாக்கியானத்தோடும் உத்தமூர் வீரராகவாசார்யருடைய டிப்பணத்தோடும் அச்சிடப்பட்டதென்று கேட்டு, அதில் நம்முடைய மனக்குறைகள் சிறிதாவது தீர்க்கப்பட்டிருக்குமோவென்று பார்த்ததில் துக்கமே அதிகரித்தது. தேசிக திவ்ய ஸூக்திகளின் ரஸம் இப்படி விரஸமாயிற்றேயென்கிற வருத்தத்தினால் சில சுலோகங்களைமட்டும் இங்கெடுத்து வைரஸ்யத்தை விளக்கி விலக்கி ஸாரஸ்யத்தை யறிவிக்கிறோம் ரஸிகர்களுக்கு. (இந்த அறிவிப்பு, ரஸிகர்கள் ரஸகனமான பொருள்களின் அநுபவத்தை இழக்கலாகாதென்கிற கருத்தினால் மட்டுமே.)

http://acharya.org

130. யாதவாப்யுதயத்தில் நான்காவது ஸர்க்கத்தில் ஆறுவது சுலோகம்.

*நந்தச்ச நீல்ரேண பயேந ஸத்யஸ் ஸமேத்ய பச்யந் அநகம் குமாரம்,
தேநைவ தஸ்ய த்ரிஜகந்நியந்து: ப்ராயுங்க்த ரக்ஷாம் பரமார்த்தவேதீ* என்பது.

பூதனைவந்து முலை கொடுத்து மாண்டவுடனே நந்தகோபர் காப்பிட்ட படியைச் சொல்லுமிந்த சுலோகத்தில் நந்தகோபர்க்கு 'பரமார்த்தவேதீ' யென்கிற விசேஷணம் இடப்பட்டுள்ளது. இங்கு தீக்ஷிதர் வியாக்கியானம் செய்திருப்பதாவது "பகவாநேவ ஸர்வஸ்ய ரக்ஷக இதி பரமம் அர்த்தம் அவகச்சந் நந்த:" என்பதாக. 'எம்பெருமானே ஸர்வரக்ஷகனென்கிற உண்மையை யுணர்ந்தவரான நந்தகோபர்' என்பது இதன் பொருள். இது ப்ரக்ருதத்திற்குச் சேர்ந்ததன்றாகையாலே விரஸமான பொருளென்னவேண்டும். இங்குச் சுவைமிக்க பொருள் கேளீர். (பரமார்த்த வேதீ) எம்பெருமான்தானே ஸர்வரக்ஷகனாயிருக்கச் செய்தேயும் தனக்குப் பிறர் செய்யும் ரக்ஷையினால்தான் ரக்ஷணமுண்டாகுமென்று நினைப்பவனென்கிற பரமார்த்தத்தை யுணர்ந்தவர் நந்தகோபர் என்றபடி. அவனுக்குப் பிறர் செய்யும் ரக்ஷையாவது காப்பிடுதல், பல்லாண்டு பாடுதல், போற்றியென்னுதல் முதலியனவாம். விபவாவதாரங்களிலும் அர்ச்சாவதாரங்களிலும் அன்பர்கள் பல்லாண்டு பாடுவதனாலேயே [அதாவது மங்களாசாஸனம் செய்வதனாலேயே] தனக்கு ரக்ஷணமுண்டாவதாக நினைப்பவனென்பதில் எம்பெருமானார் தர்சனத்தவர்களுக்கு விவாதமோ ஸந்தேஹமோ இராது. விபவத்தில் *தத் தே பவது மங்களம்* *யாம் ஓஷதிமிவாயுஷ்மந்!* இத்யாதி மங்களாசாஸனத்தினாலேயே பகவானுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியுண்டானதாக ஆசாரியர்கள் நிர்வஹிக்கக் காண்கிறோம். "அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத், அந்யத் குசலஸம்ப்ரச்நாத் ந சேச்சதி ஜநார்தந:" என்கிற ஸஞ்ஜயருடைய வாக்யத்தில் குசல ஸம்ப்ரச்நம் என்பது காப்பிடுகையாம். அர்ச்சையில் திருப்பல்லாண்டு பாடுவது அவன்றன் திருவுள்ளத்தை யடியொற்றியேயன்றோ அமைந்தது. திருவாய்ப்பாடியில் வீதிகளிலே ஸ்வைரவிஹாரம் பண்ணித்திரிகிற கண்ணபிரானை நோக்கி யசோதை கூறுகின்றாள் *காப்பாருமில்லை கடல்வண்ணாவுன்னைத் தனியேபோய் எங்கும்திரிதி* என்று. *காக்குமியல்வினன் கண்ணபெருமானென்று யசோதை அறிந்திருக்கக்கூடும். ஆயினும் 'கடல் வண்ணா!' என்னும்படியான வடிவழகைக் கண்டவாறே அவனுடைய ரக்ஷகத்வத்தை மறந்து ரக்ஷ்யனே இவனென்று ப்ரதிபத்திபண்ணியன்றோ 'காப்பாருமில்லை கடல்வண்ணாவுன்னை' என்றாள். ஆக இவனே ஸர்வ ரக்ஷகனென்று உணர்வது பரமார்த்தவுணர்வன்று; நந்தகோபர் அப்படி யுணர்ந்திருந்தாராகில் இவனுக்குத் தாம் ரக்ஷையிட்டிருக்கவேமாட்டார். நாம் ரக்ஷையிட்டாலன்றி இவன் அபாயமற்றிருக்க மாட்டானென்று உள்ளபடி உணர்ந்ததனாலேயே ரக்ஷையிட்டார். தீக்ஷிதர் இச்சுவைப் பொருளையுணருங் குடியிலே பிறந்திலராதலால் இப்பரமார்த்தம் அவர்க்கு ஸ்புரியாதது வியப்பன்று கிடீர். ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்க்கும் ஸ்புரிக்கவில்லையே! மற்றொரிடம் செல்வோம்.

131. அவ்விடத்திலேயே பதினாறுவது சுலோகம்.

*விச்வாநி விச்வாதிகசக்திரேகோ நாமாநி ரூபாணி ச நிர்மிமாண:,
நாமைகதேசக்ரஹணேபி மாதுர் பபூவ க்ருஷ்ணோ பஹுமாநபாத்ரம். என்பது.

http://acharya.org

சிறுபிள்ளைகள் வார்த்தை சொல்லத் தொடங்கும்போது அவரவர்களின் பெயர்களைப் பூர்த்தியாகச் சொல்லமாட்டாமல் அரைகுறையாகச் சொல்வது இயல்பு. ஸ்ரீக்ருஷ்ணகிசோரனும் உற்றுருறவினர் தோழன்மார் முதலானோருடைய நாமங்களைக் கொச்சையாகச் சொல்லச் செய்தேயும் தாய்க்கு உள்ளம் பூரித்து விட்டது—என்கிறது. இங்கு இவ்வர்த்தம் அனைவர்க்கும் எளிதாகத் தெரியக்கூடியதே யாம். தீக்ஷிதர் இங்கு வியாக்கியானிப்பதாவது—"மாது: யசோதாயா: நாமைகதேசக்ரஹணேபி அஹோ மாதுர் நாம க்ருஷ்ணேதி வாத்ஸல்யவதாம் பந்தூநாம் ச்லாகாவிஷய: அபூத் இத்யர்த்த:" என்று; இவ்விடத்திற்கு இதுவா பொருள்! "மாதுர் பபூவ க்ருஷ்ணோ பஹுமாநபாத்ரம்" என்றுள்ள மூலத்தை அந்தோ! ஒடித்திட்டாரே! உலகத்தில் சிறுபிள்ளைகள் செய்யும் நாமைகதேச க்ரஹணம் தாய் விஷயத்தில் மட்டுமன்றே; கண்ணபிரானும் தாய் விஷயத்தில் மட்டும் அதுசெய்த தாக ச்லோகத்தில் சொல்லியிருக்கவில்லை. "மாது: பஹுமாநபாத்ரம் பபூவ" என்று நேரே அந்வயித்து வியாக்கியானிக்க ப்ராப்தமாயிருக்க அதைவிட்டு "மாது: நாமைகதேச க்ரஹணேபி" என்று அஸ்தாநே அந்வயங்காட்டி, ச்லோகத்திலில்லாத 'பந்தூநாம்' என்னுமொரு பதத்தை அநாவச்யமாகக் கொண்டு கூட்டி 'வாத்ஸல்யவதாம் பந்தூநாம் ச்லாகாவிஷயோபூத்" என்று முடித்திருப்பது விரஸமென்பதை விவேகிகள் உணர்வார்கள். இங்கும் ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர் இந்தச் சுவைக்கேட்டைத் தவிர்த்திலர். அவ்வளவேயன்றி மாதாவை யசோதா! என்றுமென்கிறுர். பண்டிதர்களா இப்படி எழுதுவது?

132. அவ்விடத்திலேயே முப்பத்துநான்காவது சுலோகம்.

ஆநீதமக்ரே நிஜபந்தநார்த்தம் தாமாகிலம் ஸம்ஹிதமப்யபூர்ணம்,
விலோக்ய நிர்விண்ணதியோ ஜநந்யாஸ் ஸங்கோசசக்த்யா ஸ பபூவ பத்ய:

கண்ணபிரான் வெண்ணெய் களவுகாண்பது முதலான தீம்புகள் செய்வது கண்ட யசோதைப்பிராட்டி அவனை உரலிலே கட்டிவைக்கக் கருதியதை முந்தின ச்லோகத்தில் சொல்லி, இந்த சுலோகத்தில் அவன் கட்டுண்டபடியை வெகு சமத்காரமாகச் சொல்லுகிறுர். தீக்ஷிதருடைய வியாக்யானத்திற்கு நிலமல்லாத சுவைகளை இங்கு விவரிக்கிறேன். [அகிலம் தாம ஸம்ஹிதமபி அபூர்ணம் விலோக்ய] கண்ணபிரான் வெண்ணெய் களவுகண்டானென்று யாவரும் கேட்டிருக்கிறீர்கள். ஆசிரியரும் இங்கு முந்தின சுலோகத்தில் "முஹு: ப்ரவ்ருத்தம் நவநீத சௌர்யே" என்று ஸாதித்துள்ளார். கண்ணனுக்கு வெண்ணெய் வேணுமானுல் அதைத் திருடியுண்ணவேணுமோ? யாரைக் கேட்டாலும் கொள்ளை கொள்ளையாக அள்ளிக் கொடுக்கக் காத்திருக்கிறுர்களே! கிடைக்கமாட்டாதவிடத்திலன்றே களவு செய்ய வேண்டும்; எளிதாகக் கிடைக்குமிடத்தில் எதற்காகக் களவு செய்தானென்று விமர்சிக்கவேணும்; உண்மை கேண்மின்; வெண்ணெயிலாசையென்பது வ்யாஜம்; கட்டுண்டிருந்து தன்னுடைய அத்யந்தஸௌலப்ய குணத்தைக்காட்டியுகக்க வேணுமென்பது முக்கியமான ஆசை. திருநாட்டில் காட்டமுடியாத இத்தகைய திருக்குணங்களைக் காட்டுதற்கேயன்றே முக்கியமாக இங்குத் திருவவதரித்தது. ஆக, கட்டுண்டு கிடக்கையாகிற பெருங் குணத்தைக் காட்ட வேண்டியே

http://acharya.org

களவு செய்தான்., பிறரிடம்கேட்டு வாங்கியுண்டானாகில் கட்டியடிக்க ப்ரஸக்தி யில்லையன்றே. கண்ணனுடைய சிறுச்சேவகங்கள் பலவிதம். சிலசமயங்களில் களவு செய்துவிட்டுத் தாய்க்குப் பிடி கொடாமலே 'தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடி' என்கிறபடியே ஓடிப்போவதுமுண்டு. தாய்கையில் பிடிபட்டும் அவளால் கட்டமுடியாதபடி செய்துகொள்வதுமுண்டு. அதற்காகக் கண்ணன் வீட்டிலுள்ள கயிறுகளைத் துண்டுதுண்டாக அறுத்து வைத்திட்டுக் களவு செய்யப் புகுவான். அப்போது யசோதையின் கைக்கு வேணுமென்றே அகப்படுவான். அவள் இவனை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் கயிறுகளை யெடுக் கப்போவாள்; அது ஏற்கெனவே இவனால் துண்டு துண்டாக்கப்பட்டிருந்தபடியாலே அதுகொண்டு எளிதாகக் கட்டமுடியாமல் அவற்றை ஒன்றோடொன்று முடி போட்டுக் கட்டப்பார்ப்பள். ஐந்தாறு சுற்றுக்குப்போதும்படி வெகு நீளமாக்கிப் பிறகு கட்டப்புகுவள். அப்போது இவன் "பெருக்குவாரையின்றியே பெருக்க மெய்து பெற்றியோய்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே ஒருக்ஷணத்தில் தன் னுடலைப் பெருக்கிக்கொண்டு அந்தப் பெரிய கயிறு ஒரு சுற்றுக்கும் போராதபடி செய்துவிடுவன். அதுகண்ட யசோதை வெகுநாழிகை தான்பட்ட பரிச்ரமம் பழுதாயிற்றேயென்று வருந்தி இவனை விட்டுத் தொலைப்போமென்று நினைப்பள். கண்ணன் அந்த நினைவையறிந்தவாறே 'நாம் கட்டுண்டுகிடந்து காட்டவேணு மென்று நினைத்த பெருங்குணத்தை இழந்து விடலாமோ!' என்றெண்ணி உடனே "சுருக்குவாரையின்றியே சுருங்கினாய்" என்கிறபடியே முன்பு ஒரு சுற்றுக்குப்போரா திருந்த கயிறு பத்தெட்டு சுற்றுக்குப் போரும்படியாகத் தன்னை அணோரணீயானாக ஆக்கிக் கொண்டானாம். இதை [ஸங்கோச சக்த்யா ஸ பபூவ பத்ய:] என்பதனால் ஆசிரியர் காட்டியருளினார். ஆழ்வார்கள் பலரும் "கட்டுண்டிருந்தானென்றும்" "உரலோடாப்புண்டிருந்தானென்றுமே அருளிச்செய்தார்கள். மதுரகவிகள் ஒரு வரே "கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்" என்று தன்னைத் தானே கட்டுண்டவனாப்படி செய்து கொண்டானென்றார். அதை அடி யொற்றியாயிற்று ஆசிரியர் இங்ஙனே ச்லோகமிட்டபடி. 'தம் பபந்த' என்னாதே 'ஸ பபூவ பத்ய:' என்ற சொல்லழகு காண்க. தீக்ஷிதர் காண வழியேது?

"நாமாகிலம் ஸம்ஹிதமபி" என்ற இவ்விடத்தில் வடமொழி வேதத்தின் மருமம் பொன்று கேண்மின். வேதத்தில் ஸம்ஹிதை பதம் க்ரமம் என்று மூன்றுண்டு நெடுக தண்டாகாரமாக ஓதிப்போருவது ஸம்ஹிதை. அதைத் துண்டுதுண்டாக்கி யோதுவது பதம். அந்த பதங்களை ஒன்றோடொன்று பிணைத்து ஓதுவது க்ரமம். நெடுகச்சென்றால் அது ஸம்ஹிதையாய்விடும். யசோதை நீளமாக வைத்திருந்த கயிறு ஸம்ஹிதாவஸ்தை; கண்ணன் அதைத் துண்டுதுண்டாக்கினது பதாவஸ்தை; யசோதை அந்தத்துண்டுகளைப் பிணைத்தது க்ரமாவஸ்தை; அது பர்யாயேண ஸம்ஹிதாவஸ்தைக்கு வந்துவிடுமன்றே. அப்படிச் செய்தும் எட்டம் போதவில்லை யென்பது [நாமாகிலம் ஸம்ஹிதமபி] என்பதில் உள்ளுறையும் மருமம். க்ருத்தம் என்றோ ப்ரக்ருத்தம் என்றோ கூறாமல் ஸம்ஹித மென்ற ஆசிரியர்க்கு இந்த விவரணமன்றோ பரம போக்யமாகும். வேதவைதேசிகரென்று ப்ரஸித்தரான தீக்ஷிதர்க்கும் ப்ரக்ருத டிப்பணகாரருக்கும் இது நிலமன்றே!

http://acharya.org

133. அதிலேயே 4-126 காளியமர்த்தன கதையைச் சொல்லும் சுலோகம்

விவிதமுநிகணோபஜீவ்ய தீர்த்தா விகமிதஸர்ப்பகணா பரேண பும்ஸா
அபஜத யமுநா விசுத்திமக்ர்யாம் சமிதபஹிர்மதஸம்ப்லவா த்ரயீவ.

யமுனையாற்றில் ஒரு மடுவிலிருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்னியினால் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளிய னென்னும் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினனென்பது காளியமர்த்தன வரலாறு. இவ்வரலாற்றை இந்த ச்லோகத்தினால் கூறினர். ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி ராமானுஜர் செய்தருளின செயலையே கண்ண பிரானுடைய ராமானுஜன் செயலுக்கு உவமையாகக் காட்டியருளினர். எங்ஙனே யென்னில், ஐந்தலைவாய்நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்த தானது—விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம்போனபடியெல்லாம் கூறும் தவறான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிதாகப் பருகும்படி செய்ததானது—ஸ்வாமி ராமானுஜர், பிறர் கூறின தவறான பொருள்களையகற்றி நல்லபொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனை யாற்றின் ஸ்தானத்தில் வேதம் கொள்ளப்பட்டது. காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள் கொள்ளப்பட்டார்கள்; கண்ணனுடைய ஸ்தானத்தில் ஸ்வாமி யெம்பெருமானார் கொள்ளப்பட்டார். "தூய பெருநீர் யமுனைத்துறைவனை" என் னும்படி யமுனையாறு இடையறாத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்தது போல, வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடையதாயிருக்கையாலே வேதத்தை யமுனையாற்றின் ஸ்தானத்தில் கொள்வது பொருந்தும். குதர்க்கவாதி களைக் காளியன் ஸ்தானத்தில் கொள்வதற்கான பொருத்தம் இனி உபபாதிக்கப் படுகிறது.

காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை உமிழ்ந்து நாசத்தை விளைத்தா னென்று புராணங்கூறும். அப்படியே குதர்க்கவாதிகளும் ஐந்து விதமான துர் வாதங்களாலே பரமார்த்த நாசத்தை விளைவிக்கின்றார்கள்; எங்ஙனே யென்னில்: (1) ஈச்வரனென்று ஒருவனைக் கொள்வது கூடாது; ஈச்வரனேயில்லை—என்பது ஒரு குத்ஸிதவாதம். (2) ஈச்வரனுளனென்று இசைந்தாலும் அவன் அநுமா னத்தினால் ஸித்திப்பவனேயன்றி சாஸ்த்ரத்தினால் ஸித்திப்பவனல்லன் என்பது மற்றொரு குத்ஸிதவாதம். (3) சாஸ்த்ரங்களைக் கொண்டே ஈச்வரனை அங்கீ கரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் விபூதியும் இல்லையென்பது வேறொரு குத்ஸிதவாதம். (4) ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை. பலபல ஈச்வரர்களுளரென்று பல தெய்வங்களுக்கு ஈச்வரத்வம் காட்டி வாதித்தல் இன்னுமொரு குத்ஸிதவாதம். (5) பிரபஞ்சமே கிடையாது, எல்லாம் சூனியம் என்று ஸர்வ சூன்யவாதம் பண்ணுகை ஸர்வோத்துங்கமான குத்ஸிதவாதம். ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்த வாதங்களினால் வேதத்தைக்கெடுத்த குதர்க்க வாதிகள் காளிய ஸ்தானத்திலே கொள்ளப்படுவது பொருந்தும். இக் கெடுதல்களை யெல்லாம் நம் ஆசார்ய ஸார்வபௌமர் அநேக ஸதர்த்த நிரு

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

பணங்களினாலே போக்கியருளினர். இங்கே மற்றொரு விசேஷமும் காணலாம். "வாய்த்த காளியன்மேல் நடமாடிய கூத்தனார்" என்று சூடிக்கொடுத்த சுடர்க் கொடி பணித்தபடி காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப்போல, ஸ்வாமி யெம்பெருமானாருடைய ஸம்பந்த ஸம்பந்தமுடைய நாம் "நாவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே" என்று தொண்ட ரடிப்பொடியாழ்வாரருளிச் செய்த கணக்கிலே யமகிங்கரர்களின் தலையிலே அடி யிட்()க் கூத்தாடப் பெறுவோம். "தத்ந்யமத துர்மதஜ்வலிதசேதஸாம் வாதி நாம் சிரஸ்ஸு நிஹிதம் மயா பத மதக்ஷிணாம் லக்ஷ்யதாம்" என்ற யதிராஜஸப் ததி ஸூக்திப்படியும் காளியஸமர்களின் தலைமேல் நடனம் செய்வோம். ஸத்ய மாக தேசிகன் திருவுள்ளத்திலுறைந்த அர்த்தங்களையே இங்கு நாம் விவரித் தோம். இவ்வர்த்தங்களை தீக்ஷிதர் வியாக்கியானிக்க ப்ரஸக்தியேது? காளிய ஸ்தானத்தில் நிற்பவரன்றோ அவர். தமிழுரையாசிரியர் ஸ்ரீ வைஷ்ணவபண்டித ராயிருந்து இப்பொருள்களை லவலேசமும் காட்டாமல், (யமுநா) என்பதற்கு "வேதமூர்த்தியான ஸூர்யனின் பெண்ணான யமுனையானது" என்று உரை யெழுதி வெகு விசேஷார்த்தம் ஸாதித்துவிட்டதாக அபிமானிக்கிறார்.

Released by Maran's Dog ,Toronto, Canada

134. அதிலேயே முதல் ஸர்க்கத்தின் முடிவு சுலோகம்.

"ஆச்வாஸ்ய வாக்ம்ருதவ்ருஷ்டிபிராதிதேயாந்
தைதேயபாரநமிதாம் தரணீஞ்ச தேவீம்,
ஆவிர்ப்புபூஷுரநகோ வஸுதேவபத்ந்யாம்
பத்மாபதி: ப்ரணிததே ஸமயம் தயாயா:" என்பதாம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி எம்பெருமான் தேவகிப் பிராட்டியாரிடம் திருவவதாரம் செய்து தனது திருவருளைப் பிரகாசிப்பிக்கத் திரு வுள்ளம் பற்றினபடியைச் சொல்லுவது இந்த சுலோகம். இதில் உத்தரார்த்தத் தில் (ஆவிர்புபூஷு:) என்றவுடனே (அநக:) என்றொரு விசேஷணமுள்ளது. தோஷமற்றவன் என்பது இதன் பொருள். அகில ஹேயப்ரத்யநீகனென்றபடி. எம்பெருமானுக்கு தோஷமில்லாமையை அந்தந்த ப்ரகரணங்களுக்குத் தக்கபடி உபபாதிக்க வேண்டும். ப்ரக்ருதத்தில், ஆவிர்புபூஷு: — அவதரிக்கத் திருவுள்ளம் பற்றினான் என்று சொல்லி, உடனே அநக: — அவத்யமில்லாதவன் என்றமை யால், அஸ்மதாதிகளின் பிறப்புக்கு நல்வினை தீவினைகளாகிற கருமம் காரண மாகிருப்போலே பகவானுடைய அவதாரத்திற்கும் கருமம் காரணமாகிறதோ வென்று சங்கிக்க நேருமன்றோ. அவ்விதமான பிறப்பாகில் அது அவத்யமே யாகுமன்றோ. பகவான் கருமம் காரணமாக வன்றிக்கே கேவலம் கருணையே காரணமாக அவதரிக்கின்றானாகையாலே அத்தகைய அவத்யத்திற்கு அவகாச மில்லையென்பது இங்கு விவக்ஷிதம். அலங்கார சாஸ்த்ரத்தில் பரிகர மென்று ஓர் அலங்காரம் சொல்லிற்று. *அலங்கார: பரிகர: ஸாபிப்ராயே விசேஷணே* என்று அதன் லக்ஷணமும் சொல்லிற்று. ஒருகருத்தோடு விசேஷணமிட்டால் அங்கு பரிகராலங்கார மென்றபடி. இவ்வலங்காரமே ஆசிரியரால் இங்கு உத்தே சிக்கப்பட்டது. அதை ஆசிரியர் தாமே நான்காவது பாதத்தினால் [*பத்மாபதி:

Released by Maran's Dog ,Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada

ப்ரணிததே ஸமயம் தயாயா:' என்பதனால்] விளக்கியருளினர். ஆக 'அநக' என்பதற்கு—கர்மவச்யனாகிப் பிறவாதவனாகையாலே கர்மவச்யத்வமாகிற தோஷமில்லாதவன் என்பதே இங்கு ஆசிரியர் திருவுள்ளம்பற்றின பொருளாகும்.

வியாக்கியான கர்த்தாவான அப்பயதீக்ஷிதர் இங்கு "அநக:—நிரலத்ய:; தத்த்வத் கர்மாநுரோதிதயா வைஷம்யநைர்க்ருண்ய தோஷரஹித:—" என்றெழுதியுள்ளார். அவரவர்கள் செய்யும் புண்யபாபரூப கருமங்களையொட்டிப் பலன் கொடுப்பவனாகையாலே வைஷம்யநைர்க்ருண்யமாகிற தோஷமில்லாதவன்—என்பது இந்த வாக்கியத்தின் பொருள். பகவான் உலகங்களைப் படைக்குங்காலத்திலே இப்படிப் பட்ட தோஷசங்கையும் தத்பரிஹாரமும் சாரீரகமீமாம்ஸையில் "வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என்கிற ஸூத்ரத்திலேறியுள்ளது. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ—உத்தரசதகத்தில் 'நிம்நோந்நதஞ்ச கருணஞ்ச ஜகத் விசித்ரம் கர்ம வ்யபேக்ஷ்ய ஸ்ருஜதஸ் தவ ரங்கசேஷிந்!, வைஷம்யநிர்க்ருணதயோர் ந கலு ப்ரஸக்தி: தத் ப்ரஹ்மஸூத்ரஸசிவா: ச்ருதயோ க்ருணந்தி' என்கிற ச்லோகத்தினால் இதனை விசதீகரித்தருளினார். அங்கு அதற்கு முன் சுலோகத்தில் ('அசிதவிசேஷிதாந் ப்ரலயஸீமநி ஸம்ஸரத:' இத்யாதியில்) ஸ்ருஷ்டிப்ரஸ்தாவம் உள்ளபடியினால் அடுத்த சுலோகம் அங்ஙனே அமையவேண்டியதாயிற்று. இங்கு ஸ்ருஷ்டிப்ரஸ்தாவமில்லை. அவதாரப்ரஸ்தாவமேயுள்ளது. இதற்குச் சேர 'கர்மவச்யத்வமாகிற தோஷமற்றவன்' என்னும் பொருளே பொருந்தும். மற்றுமிப்புடையிலே வேறு வகையான பொருளும் பகரலாமேயல்லது வைஷம்யநைர்க்ருண்ய தோஷமற்றவன் என்னும் பொருள் ஸர்வாத்மநா இங்கு அப்ரஸக்தம். இங்கு ஸ்ரீ வைஷ்ணவபண்டிதருடைய டிப்பணத்திலும் விசேஷம் காண்கின்றிலோம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

135. யாதவாப்யுதயத்திலே நாலாவது ஸர்க்கத்திலே (28)

"த்ரஸ்யந் முகுந்தே நவநீத சௌர்யாத் நிர்ப்புக்நகாத்ரோ நிப்ருதம் சயாந:
நிஜாநி நிச்சப்ததசாம் யயாசே பத்த்வாஞ்ஜலிம் பாவவிபூஷணாநி."

என்பதொரு ச்லோகம். சிறிய திருமடலில் "ஆங்கொருநாளாய்ப்பாடி, சீரார்கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய், வாரார்வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு ....சீரார் தயிர்கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார்நுதல்மடவாள் வேறோர்கலத்திட்டு, நாராருறியேற்றி நன்கமையவைத்ததனைப் போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன் போலுறங்கியறிவுற்றுத், தாரார் தடந்தோள்களுள்ளளவுங் கைநீட்டி ஆராதவெண்ணெய் விழுங்கி, அருகிருந்த மோரார்குடமுருட்டி முன்கிடந்ததானத்தே, ஓராதவன்போல் கிடந்தான்" என்றதையும் மற்றும் சில பாசுரங்களையும் திருவுள்ளத்திற்கொண்டு இந்த ச்லோகமருளிச் செய்திருக்கிறார் ஸ்வாமி. இதன் சுவைமிக்க பொருள்களை இங்கு நான் விவரிக்கப் புகவில்லை. இவருரையில் வருந்தத்தக்கதொன்றைமட்டும் காட்டுகிறேன்.

மேலே காட்டின சுலோகத்தில் உத்தரார்த்தத்தில் "யயாசே பத்த்வா அஞ்ஜலிம் விபூஷணாநி" என்றிருக்கிறது. கைகூப்பிக்கொண்டு யாசித்தானென்று எளிதாகப் பொருள்படாநிற்க, தீக்ஷிதரும் இப்படியே அந்வயித்து உரைத்திருக்க, (அஞ்ஜலிம் பத்த்வா) என்றதைப் பூர்வார்த்தத்திலே கொண்டுபோய் (அஞ்ஜலிம் பத்த்வா சயாந:) அஞ்சி உடலை ஒடுக்கிக் கொண்டு அசையாமல் ஓரிடத்தில் கைகளைக் குவித்துக்

http://acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada

கொண்டு கவிழ்ந்து படுத்தவனானன்—என்றெழுதுகிறார் தமிழுரைகாரர். இது கண் விழித்துக்கொண்டு எழுதினதா? கண்ணுறங்கிக்கொண்டே யெழுதினதா? என்று தெரியவில்லை. "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே:" என்று ஸ்ரீராமாயணத்தில் சொன்ன ஸமுத்ர திரசயனமா இது? ஒவ்வொருவரும் ச்லோகத்தையும் உரையையும் வாசித்துப் பார்க்கவேணும். சற்று ஊன்றிப் பார்க்க வேண்டா; மேலெழப்பார்த்தாலும் போதுமே!

136. ஆறுவது ஸர்க்கத்தில் (ச்லோ-4.)

அதியஜேத நிஜாம் யதி தேவதாம் உபயத: ச்யவதே ஜுஷதேப்யகம்,
க்ஷிதிப்ருதைவ ஸதைவதகா வயம் வநமிஹாநவதா கிமஹித்ருஹா. என்பது.

இடையர்கள் வழக்கமாக இந்திரனுக்குப் பூஜை செய்துகொண்டிருந்ததைக் கண்ணபிரான் விலக்கி, அந்தப் பூஜையை மலைக்கு இடும்படி நியமிக்கும் பிரகரணத்திலுள்ள சுலோகமிது. ப்ரத்யக்ஷமாக நம்மையும் பசுக்களையும் ரக்ஷிக்கின்ற மலையைவிட்டு, ரக்ஷிக்கமாட்டாதவனான இந்திரனைப் பூஜிப்பதனால் என்ன பயன்? என்பது இங்குக் கூறப்படுகிறது. இந்திரனாலே என்னும் பொருளுடையதான (அஹித்ருஹா) என்கிற பதத்திற்கு நீசுநிதருமெழுதாதவொரு விசேஷார்த்தமெழுதுகிறார் தமிழுரைகாரர்; Released by Maran's Dog ,Toronto, Canada

"அஸுரோபி வ்ருத்ரோ பாகவத இதி தத்த்ரோஹோ ந யுக்த இதி பாவ:" வ்ருத்ரன் அஸுரனானாலும் அவன் பகவத்பக்தனானகையாலே அவனைக் கொன்றது தவறு என்று பாவம்"—என்றெழுதப்பட்டுள்ளது. "என்று பாவம்" என்றது யாருடைய பாவமோ? இந்தப் பாவம் இங்கு எதற்காகத் தெரிவிக்கப்படுகிறதோ தெரியவில்லை. பெரியாழ்வார் "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்" என்று கண்ணன் கதையொன்று அருளிச்செய்கிறார். மாலிகன், தனக்குத் தோழனாயிருக்க அவனைத் தலையறுத்தது தப்பு என்று பாவம் — என்றெழுதியிருப்பர் போலும். இந்திரன் வ்ருத்ரனைக்கொன்றது தவறுகையாலே அவனை ஆராதிக்கக்கூடாது என்கிறான் கண்ணன்—என்று பாவத்தை விவரிப்பர்போலும். இப்படி விரஸமான பொருள்கள் பலபல. Released by Maran's Dog ,Toronto, Canada

[க்ஷிதிப்ருதைவ ஸதைவதகா வயம்] என்றதற்குப் பதவுரையெழுதுகிறார்— "இம்மலையையே தேவதையாக நாம் உடையவராவோம்" என்று; இவ்வுரையினால் தெரிவதென்னவென்றால், இடையர்கள் இம்மலையைத் தேவதையாகக் கொள்ள மாட்டோம் என்று சொல்லுவதாகவும், அது பிசகு, நாம் இம்மலையையே தேவதையாகக்கொள்ள வேணுமென்று கண்ணன் வற்புறுத்துவதாகவுமே தெரியவரும். மூலத்திற்கு இதுவா பொருள்! இம்மலையையே நாம் தேவதையாகவுடையோம், தேவதையாகக் கொண்டிருக்கிறோம்—என்றல்லவோ பொருள். ஆவோம் என்பது எதிர்காலத்தில் ஸித்திக்கவேண்டிய விருப்பத்தைத் தெரிவிக்குமென்பதை அந்தோ அறிந்திலர். "எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமேயாவோம்" என்கிற திருப்பாவைப் பாசுரத்தைச் சிந்தனை செய்தாலும் போதும். "உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்றாற்போல இம்மலையையே நாம் தேவதையாகவுடையராயிருக்கிறோம் என்னவேண்டும். (தொடரும்)

http://acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada